# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம்

# 7

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு **www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

*முதலாம் பதிப்பு - 2015*
*இரண்டாம் பதிப்பு - 2016*
*மூன்றாம் பதிப்பு - 2017*
*நான்காம் பதிப்பு - 2018*
*ஐந்தாம் பதிப்பு - 2019*

*எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.*

ISBN 978-955-25-0097-8

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக,
இல. 439/3/3, ஹோகண்டராசாலை, பன்னிபிட்டி
விஸ்வா கிராபிக்ஸ் அச்சகத்தினால்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



## ''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம் நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

### கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தரம் 6 முதல் தரம் 11 வரை சுமார் 91 வகையான பாடநூல்கள் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## வழிகாட்டல்

**டபிள்யூ.ஏ.நிர்மலா பியசீலி**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## இணைப்பாக்கம்

**லெனின் மதிவானம்**
*பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

**யூ. எல். உவைஸ்**
*உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## எழுத்தாளர் குழு

**கலாநிதி ந. இரவீந்திரன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு),*
*தேசிய கல்வியியல் கல்லூரி, மஹரகம.*

**என். அருளானந்தம்**
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்,*
*வலயக் கல்வி அலுவலகம்,*
*மாத்தளை.*

**இ. ரதி தேவசுந்தரம்**
*ஆசிரிய ஆலோசகர்,*
*கண்டி கல்வி வலயம்,*
*கண்டி.*

**ஜனாப் ஆர். சதாத்**
*ஆசிரியர்,*
*தி/ தாருல் உலூம் ம.வி., கிண்ணியா.*

## பதிப்பாசிரியர் குழு

**பேராசிரியர் கி. விசாகரூபன்**
*தலைவர் - தமிழ்த்துறை,*
*யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*

**வ. செல்வராஜா**
*துணைப் பீடாதிபதி,*
*ஶ்ரீபாத கல்வியியல் கல்லூரி, பத்தனை.*

**லெனின் மதிவானம்**
*பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

**முருகு தயாநிதி**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.*

## பதிப்பாசிரியர் (மொழி)

**எஸ். சேதுரட்ணம்**
*ஆசிரியர்,*
*ப/ பண்டாரவளை தமிழ் மத்திய மகா வித்தியாலயம்,*
*பண்டாரவளை.*

## சரவை நோக்கு

**க. சிவபாலசுந்தரம்**
*ஆசிரிய ஆலோசகர்.*

## அட்டைப்படம், தளக்கோலம், கணினி தட்டெழுத்து

**எச்.எஃப். ரிஸ்னா**
*கணினி வடிவமைப்பாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## ஓவியங்கள்

**எஸ். ஶ்ரீஸ்கந்தராஜா**

**ஆசிரியர்**
**ஜரபி த.வி.ரோர்வூட்**

# தமிழ் மொழி வாழ்த்து

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*
*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*
*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*
*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழியே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

- சுப்பிரமணிய பாரதியார் -

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. அந்தரே கதைகள் | 1 |
| 2. ஆறு | 8 |
| 3. கடமை | 14 |
| 4. காட்டு விலங்குகளைக் காப்போம் | 23 |
| 5. யாம் ஐவேம் | 31 |
| 6. காந்தியடிகள் கடிதம் | 38 |
| 7. தமிழ்த் தட்டச்சின் தந்தை | 44 |
| 8. செந்தமிழ் போற்றிய சேரன் | 49 |
| 9. சிலேடை | 56 |
| 10. பென்சிலின் கதை | 58 |
| 11. உயிர் காக்கப் பயிர் காப்போம் | 70 |
| 12. ஈசன் உவக்கும் இன்மலர் | 76 |
| 13. கடலும் கிணறும் | 79 |
| 14. கருங்காற் குறிஞ்சி | 87 |
| 15. படைப்பின் இரகசியம் | 93 |
| 16. பொய் சொல்லாதே | 98 |
| 17. வீழ்ந்த ஆலமரம் | 102 |
| 18. பிள்ளை அழுத கண்ணீர் | 110 |
| 19. வெண்ணிலாவே | 127 |
| 20. ஒழுக்கமுடைமை | 131 |
| 21. புதிய ஆத்திசூடி | 140 |

# 1 அந்தரே கதைகள்

தமிழ் நாட்டுக்குத் தெனாலிராமன் போல, சீனத்துக்கு நஸ்ருதீன் அவந்தி போல, ருஷிய நாட்டுக்குப் புருட்கோவ் போல, இலங்கைத் தீவுக்கு, அதில் வாழும் சிங்கள மக்களுக்கு உவப்பானவன் அந்தரே என்ற நாடோடிக் கதை நாயகன். சிங்கள மொழியில் எழுதப்பட்ட இக்கதைகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இலங்கை தேசாபிமானி ஆசிரியரான எச்.எம்.பி. மொஹிதீன் அவர்கள் தமிழ் வாசகர்களுக்கு இக்கதையினை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

***1. இரண்டும் மூன்றும் :***

அந்தரே பிஞ்சில் பழுத்த பழம்; இளம் வயசிலேயே சாமர்த்தியம் காட்டத் தொடங்கித் தன் பெருமையை நிலை நாட்டியவன்.

சின்னஞ் சிறுவனாக இருந்த அந்தரே ஒரு நாள் தன் தந்தையை ஏமாற்ற முடிவு செய்தான். சாப்பிட்டுக்கொண்டிருந்த தன் தந்தையைப் பார்த்து, ‘அப்பா, உங்களுக்குக் கணக்குத் தெரியுமா?’ என்று கேட்டான். ‘தெரியும்’ என்று கூறிவிட்டுத் தலையசைத்தார் தந்தை. உடனே மேசையில் இருந்த இரண்டு பணியாரங்களையும் தன் இரு கைகளிலும் எடுத்து வைத்துக்கொண்ட அந்தரே, ‘அப்பா, என் கையில் இப்போது மூன்று பணியாரங்கள் இருக்கின்றன என்பது என் அபிப்பிராயம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?’ என்று கேட்டான்.

புலிக்குட்டிக்குள்ள திறமை பெரும் புலிக்கு இல்லாமல் போய் விடுமா என்ன? அந்தரேயின் தகப்பனாரும் சளைத்தவரல்ல. மகனின் கேலியை உடனே புரிந்துகொண்ட அவர், சிரித்தபடி, ‘அந்தரே, உன் கையில் இரண்டு பணியாரங்கள் தானே இருக்கின்றன? மூன்று பணியாரங்கள் இருக்கின்றன என்றால், அதை நிரூபித்துக் காட்டவேண்டும். எங்கே நிரூபி பார்ப்போம்’ என்றார்.

அந்தரே உடனே சிறிய கனைப்புடன் தன் கூற்றை நிரூபிக்க ஆரம்பித்தான். ‘அப்பா, இதோ கவனியுங்கள்; பணியார எண்ணிக் கையை எண்ணட்டுமா? பணியாரம் ஒன்று, பணியாரம் இரண்டு. ஒன்றும் இரண்டும் மூன்று பணியாரம்’ என்றான் சிறுவன். அவனது முகத்தில் தந்தையை ஏமாற்றிவிட்ட எக்களிப்புத் துள்ளிக் குதித்து விளையாடியது. அந்தரே உரத்துச் சிரித்தான்.

மகனின் வெற்றிச் சிரிப்பு ஓயும் முன்பு, ‘அந்தரே, நீ நிரூபித்தது எவ்வளவு உண்மையாக இருக்கிறது! நிச்சயமாக உன் கையில் மூன்று பணியாரங்கள்தான் இருக்கின்றன’ என்று தம் மகனின் சாமர்த்தியத்துக்குச் சபாஷ் போட்டுவிட்டுத் தம் திறமையை காட்ட முனைந்தார். ‘அந்தரே, எங்கே அந்த மூன்று பணியாரங்களையும் மேஜை மேல் வை’ என்றார். அந்தரேயும் தன் கையில் இருந்த பணியாரங்களை மேஜைமேல் வைத்தான். தகப்பனார் தொடர்ந்தார். ‘சரி, நம் வீட்டில் இப்போது மூன்று பேர் இருக்கிறோம்; உன் தாய், நீ, நான். எனவே, நீ கணக்கிட்ட இந்த மூன்று பணியாரங்களையும் நாம் மூன்று பேரும் பிரித்துச் சாப்பிடுவோம்’ என்று கூறி, மேசையில் இருந்த இரண்டு பணியாரங்களையும் கையில் எடுத்துக்கொண்டு, ‘இது உன் அம்மாவுக்கு; இது எனக்கு; மூன்றாவது பணியாரத்தை நீ சாப்பிடு’ என்று சொல்லிவிட்டு, ஒன்றை மனைவியிடம் கொடுத்து மற்றதைப் பிட்டுத் தம் வாயில் போட்டுக்கொண்டார். மூக்கறுபட்ட அந்தரே, தந்தையின் முன் தலைகுனிந்து நின்றான்.

### 2. மாட்டைப்போல்...

சிறு வயசிலே அந்தரே துடுக்குள்ள பையன். அவனைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம்.

ஒருநாள் அந்தரேயின் பக்கத்து வீட்டில் ஒரு கல்யாணம் நடைபெற்றது. அந்தரேயின் குடும்பத்தினரை அந்த வீட்டாரின் விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

அந்தரேயை அழைத்துக்கொண்டு கல்யாண வீட்டுக்குப் போக அவனுடைய பெற்றோர் ஆயத்தமானார்கள். அந்தரேயின் குறும்புத்தனங்களை அறிந்த அவனுடைய தாய் வழியில், 'அந்தரே, கல்யாண வீட்டில் மாடு மாதிரி வாய் திறக்காமல் மிக அமைதியாக இருக்க வேண்டும்' என்று புத்திமதி கூறினாள். 'நல்லதம்மா, அப்படியே இருக்கிறேன்' என்றான் அந்தரே.

கல்யாண வீட்டில் வெகுவிமர்சையாக விருந்து நடைபெற்றது. விருந்துக்குப் பின் மகிழ்ச்சி பொங்க அமர்ந்திருந்த எல்லா விருந்தினர்களும் கதைகள் சொல்லி நேரத்தை இன்பமாகக் கழிக்க எண்ணி, ஆளுக்கொரு கதை சொல்ல ஆரம்பித்தார்கள். எப்போதும் சபைகளில் கதை சொல்ல முன்னுக்கு நிற்கும் அந்தரேக்கு வாய் பொத்தி அமைதியாக இருப்பது தாங்கிக்கொள்ள முடியாத கஷ்டமாக இருந்தது. ஆனால் தாயின் வேண்டுகோளையும் மீறக்கூடாது. ஆகவே, அந்தரே ஒரு உத்தியைக் கையாண்டான். விருந்தாளிகளின் மத்தியில் கையையும் காலையும் ஊன்றி மாட்டைப்போல் நடக்க ஆரம்பித்தான். குனிந்த தலையுடன் முட்டிக்கால் போட்டு மாடு மாதிரியே அசைய ஆரம்பித்த அந்தரே பக்கத்தில் இருந்த ஒருவரை ஒரு முட்டு முட்டினான். அடுத்து இன்னொருவரைப் பலங்கொண்ட மட்டும் முட்டினான்.

அந்தரேயின் சுட்டித்தனத்தைக் கண்ட தாய் கலங்கிப்போய், 'அந்தரே என்ன செய்கிறாய்?' என்று சற்றுக் கோபத்தோடு கேட்டாள்.

'ஏனம்மா, நீதானே கல்யாண வீட்டில் மாடுமாதிரி இருக்கச் சொன்னாய். இப்போது என்னை கோபிக்கிறாயே! என்று குறும்புச் சிரிப்புடன் கூறினான்.

தாய்க்கு விஷயம் புரிந்துவிட்டது. அவளும் வெகு சாவதானமாக, 'அப்படியானால், பொல்லாத்தனம் செய்கிற மாட்டைக் கட்டிப் போடவேண்டியதுதான்' என்று சொல்லிக் கொண்டே அந்தரேயை நெருங்கினாள். அந்தரே பயந்து ஒழுங்காக நடந்துகொண்டான்.

### 3. சீனி றொட்டியும் அந்தரேயும்

அந்தரேயின் தாய் ஒரு தட்டு நிறையச் சீனி றொட்டிகளை மேஜை மீது வைத்துவிட்டு அவசர ஜோலியாகப் பக்கத்துக் கிராமத்துக்குப் போயிருந்தாள். சீனி றொட்டிகள் அந்தரேயின் கண்களில் பட்டன. வீட்டில் தாய் இல்லாதது அவனுக்கு நல்ல வாய்ப்பாக இருந்தது. அதை நழுவவிட மனம் இல்லாதவனாய் மேஜைமீது ஏறிச் சீனி றொட்டிகளில் ஒரு பகுதியைச் சாப்பிட்டுத் தீர்த்தான். மீதியை முன் இருந்த மாதிரியே அழகாக மூடி வைத்து விட்டான். இரவில் சாப்பாடு முடிந்த பிறகு, மேல் தீனியாக வழங்க எண்ணிச் சீனி றொட்டித் தட்டைத் தாய் திறந்து பார்த்தாள். தட்டில் ஒரு பகுதி றொட்டி குறைவாக இருந்தது. அந்தரேயின்மேல் சந்தேகப்பட்டு அவனைக் கூப்பிட்டு விசாரித்தாள்.

'ஓ, அதையா கேட்கிறீர்கள்? பசியோடிருந்த ஒரு பிள்ளைக்குப் பயன்படச் செய்தேன்' என்றான் அந்தரே, முகத்தை அனுதாப தோரணையில் சுளித்துக்கொண்டே.

தன் மகன் பரோபகார சிந்தையோடு செய்த வேலையை மெச்சிய தாய், மலர்ந்த முகத்துடன் அந்தரேயைப் பார்த்துக் கேட்டாள், 'என் அருமை மகனே, பசியோடிருந்த அந்தப் பிள்ளை யாரடா?'

அந்தரேக்குக் குஷி வந்தது. சற்று உற்சாகமாக 'ஏன் அம்மா தெரியாதா? அந்தப் பிள்ளை நானே தான்' என்று கூறிக்கொண்டே மெல்ல வீட்டிலிருந்து நழுவினான்.

**எச்.எம்.பி. மொஹிதீன்.**

**அரும்பதங்கள்**

சாமர்த்தியம் - கெட்டித்தனம்
நிரூபித்தல் - உறுதிப்படுத்தல்
முனைந்தார் - முயற்சித்தார்
ஜோலி - வேலை

## கிரகித்தல் பயிற்சி

1. தன் தந்தையிடம் அந்தரே வினவியது யாது?
2. அந்தரே தன்னிடமுள்ளவை மூன்று பணியாரங்கள் என்பதை எவ்வாறு நிரூபித்தான்?
3. திருமண வீட்டில் எவ்வாறு இருக்க வேண்டும் என அந்தரேயின் தாய் கூறினாள்?
4. அந்தரே திருமண வீட்டில் எவ்வாறு நடந்துகொண்டான்?
5. அந்தரேயின் சுட்டித்தனங்களை பட்டியற்படுத்துக.
6. அந்தரேயின் தாயினது குணப் பண்புகளை எழுதுக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. அந்தரேயின் கதைகள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடி எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளைப் பட்டியற்படுத்துக.
2. பட்டியற்படுத்தப்பட்ட விடயங்களோடு மேலும் விபரங்களைத்திரட்டி பெற்றோருக்குக் கீழ்ப்படிவோம் என்ற கருத்து புலப்பட கட்டுரை எழுதுக.
3. குழுவாக செயற்பட்டு இக்கதைகளை நாடகமாக நடித்துக் காட்டுக.
4. பிள்ளைகளின் சுட்டித்தனத்தால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றிக் கலந்துரையாடுக.

# பார்த்தெழுதல்

தரப்படும் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள், பந்தி, பாடல் என்பவற்றை பிரதிபண்ணல் பார்த்தெழுதல் எனப்படும்.

**பார்த்தெழுதும்போது கவனிக்க வேண்டியவை:**

1. எழுத்துக்களைத் தெளிவாகவும் சீராகவும் எழுதுதல்.
2. எழுத்துக்களின் திசைமுகம் பற்றி அறிந்து அதற்கமைவாக எழுதுதல்.
3. எழுத்துக்களுக்கிடையேயும் சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடை வெளி விட்டு எழுதுதல்.
4. நிறுத்தக்குறிகளைச் சரியான இடத்தில் இட்டு எழுதுதல்.
5. வரியின் ஆரம்பத்தில் மெய்யெழுத்துக்கள் வராதவாறு எழுதுதல்.
6. எழுத்துறுப்புக்களைப் பிரித்துவிடாது சரியான உயிர்க்குறிகளை இட்டு எழுதுதல்.

**பயிற்சி**

1. பின்வரும் சொற்களைப் பார்த்தெழுதுக:

| | | |
|---|---|---|
| அந்தரே | சாமர்த்தியம் | தலையசைத்தார் |
| எக்களிப்பு | நிரூபித்தது | தொடர்ந்தார் |
| துடுக்குள்ள | ஆரம்பித்தார்கள் | மலர்ந்தது |

2. பின்வரும் வாக்கியங்களைப் பார்த்தெழுதுக.

★ இராமன் வந்தான்.
★ கமலினி பத்திரிகையைப் படித்தாள்.
★ மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தார்கள்.
★ பாரதப் போரில் பாண்டவர்கள் வெற்றி பெற்றனர்.
★ அந்தரே குறும்புத்தனமுள்ள சிறுவனாக இருந்தான்.

3. பின்வரும் பந்தியைப் பார்த்தெழுதுக.

நெருப்பு, மனித குலம் கண்ட முதல் அறிவியல் கண்டுபிடிப்பு. மிகப் பழங்காலத்தில் குகைகளில் வாழ்ந்த மனிதர் குளிர்காலத்தில் தீ மூட்டிக் குளிர்காய்ந்தனர். கொடிய விலங்குகளை விரட்டத் தீயை பயன்படுத்தினர். காலம் செல்லச்செல்ல மனிதனின் அறிவு வளர்ச்சி பெற்றது. உலோகங்களைத் தீயில் காய்ச்சிப் பல வடிவங்களில் கருவிகளை அமைக்கப் பழகிக்கொண்டான்.

4. பின்வரும் பாடலைப் பார்த்தெழுதுக.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

5. ஆசிரியரால் உங்களுக்கு வழங்கப்படும் விடயங்களை உரிய முறையில் பார்த்து எழுதுங்கள்.

# 2 ஆறு

## தேசிக விநாயகம்பிள்ளை

*சிவதானுப்பிள்ளை ஆதிலெட்சுமி ஆகியோரின் மூன்றாவது மகன் தேசிக விநாயகம்பிள்ளையாவார். இவர் 1876 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 27 ஆம் நாள் பிறந்தார். 78 ஆம் வயதில் இறைபதம் அடைந்தார். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூரில் வாழ்ந்தார். மலரும் மாலையும், உமர் கய்யாம் பாடல்கள், குழந்தைச் செல்வம், கவிமணியின் உரை மணிகள் முதலிய நூல்களை எழுதியுள்ளார்.*

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
　　காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்
　　இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.



கட்டும் அணையேறிச் சாடிவந்தேன் - அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன் - மடைச்
சீப்புகள் மோதித் திறந்து வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் - அதில்
கண்குளிரப்பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் - அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

ஆயிரம் காலால் நடந்துவந்தேன் - நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் - அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன் - சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில் - குழாய்
நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன்.

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்
வாச மலர்களும் அள்ளி வந்தேன்;
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன் - மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன்.

அல்லும் பகலும் அலைந்து வந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!

**கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.**
**'மலரும் மாலையும்'.**

**அரும்பதங்கள்**

| | |
|---|---|
| அணை | - அணைக்கட்டு |
| சாடிவரல் | - மோதி வரல் |
| கண்ணறை | - சிறு அறை |
| பொழில் | - சோலை |
| நிலத்தழல் | - நிலத்தின் வெப்பம் |
| நன்செய் | - நெல்லுங் கரும்பும் விளையும் வயல் |
| புன்செய் | - கொல்லை நிலம்/ நெல் அல்லாத பயிர்கன் விளையும் நிலம் |
| உலர்ந்த | - காய்ந்த |
| தினை | - ஒரு வகையான தானியம் |
| ஆழி | - கடல் |

## கிரகித்தல் பயிற்சி

1. ஆறு தான் எங்கே தவழ்ந்து வந்ததாகக் கூறுகின்றது?
2. ஆறு எங்கே விளையாடியது?
3. ஆறு சென்று வந்த மூன்று இடங்களைக் குறிப்பிடுக.
4. அல்லும் பகலும் என்பதன் கருத்து யாது?
5. இன்னும் நீண்ட வழி போக வேண்டும் அம்மா என்பதன் கருத்து யாது?
6. இப்பாடலினூடாக நீர் கற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து பாடலை இரசனையுடன் பாடுவதற்கு முயற்சி செய்க.
2. பாடலை அபிநயத்துடன் பாடுக.
3. பாடலை மனனம் செய்க.
4. நான்கு வரிகளில் சிறிய பாடலொன்றை எழுதுக.

# நிறுத்தக்குறிகள்

ஒரு விடயத்தை சரியாக வாசித்து, அதற்குரிய பொருளைப் புரிந்துகொள்வதற்கு நிறுத்தக்குறிகள் பயன்படுகின்றன. இக்குறியீடுகளை முறையாகவும் சரியாகவும் பயன்படுத்துவது அவசியமாகும்.

## 01. காற்புள்ளி ( , )

அ) ஒரு வாக்கியத்தில் தேவைக்கேற்ப வரும் சொற்களைப் பிரித்துக் காட்டுவதற்கு இக்குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

**உதாரணம்** - ஆறானது மலைநாடு, காடு, சமவெளி, அணைகள் என்பவற்றைக் கடந்து வந்தது.

ஆ) வாக்கியத்தில் பொருள் மயக்கம் ஏற்படுமிடத்து தெளிவுபடுத்திக் காட்டுவதற்கு காற்புள்ளி பயன்படுகின்றது.

**உதாரணம்** - சந்திரா குமாரியிடம் சங்கீதம் கற்றாள்.

இவ்வாக்கியத்தின் பொருளை தெளிவுபடுத்த பின்வருமாறு காற்புள்ளியிட்டு எழுதல் வேண்டும்.

சந்திரா, குமாரியிடம் சங்கீதம் கற்றாள்.

இ) முகவரியை எழுதும்பொழுது ஒவ்வொரு பகுதியையும் பிரித்துக்காட்டுவதற்கு காற்புள்ளி இடப்படும்.

**உதாரணம்** - இல. 197/21, பேராதனை வீதி,

கண்டி.

ஈ) ஒருவரை அல்லது ஒன்றை விளித்துக் கூறுமிடத்திலும் காற்புள்ளி இடப்படும் (பெரும்பாலும் கடிதத்தில்).

**உதாரணம்** - அன்புள்ள மதிக்கு,

ஐயா, / அம்மணி,

## 02. முக்காற்புள்ளி ( : )

ஒரு விடயத்தை விளக்குவதற்குமுன் இடப்படுவதே இக்குறியீடாகும்.

**உதாரணம்** - மக்களின் வாழ்க்கை முறை: இக்கால மக்கள் மனம்போன வழியே தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றனர்.

## 03. முற்றுப்புள்ளி ( . )

ஒரு வாக்கியம் முற்றுப் பெற்றதை உணர்த்துவதற்காக இடப்படுவது இக்குறியீடாகும்.

**உதாரணம்** - *நான் நடந்து வந்தேன்.*

## 04. வினாக்குறி ( ? )

இது விடையினை எதிர்பார்த்து வினவப்படும் வாக்கியத்தின் இறுதியில் இடப்படும் குறியீடாகும்.

**உதாரணம்** - *மலரும் மாலையும் என்ற நூலை எழுதியவர் யார்?*

*காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன் என்பதன் கருத்து யாது?*

## 05. மெய்ப்பாட்டுக் குறி ( ! )

உணர்ச்சிகளை உணர்த்தும் சொல்லை அடுத்து இடம்பெறும் குறி வியப்புக்குறியாகும்.

**உதாரணம்** - *அடடா! எத்தனை புதுமை.*

*ஐயோ! இப்படி ஆகிவிட்டதே.*

*சீச்சீ! என்ன வேலை செய்தாய்?*

# 3 கடமை

இது இலக்கியப் படகு என்ற நூலில் திருலோகசீதாராம் என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உள்ள கடமைகள் பற்றியும் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் இக்கட்டுரையில் ஆசிரியரால் விளக்கமாகக் கூறப்படுகின்றது.

நாம் பெற்ற இன்பத்திற்கு அல்லது நன்மைக்காக நாம் செலுத்தியாக வேண்டிய விலை ஒன்று இருந்தால் அதுதான் கடமை. பெரும்பாலும் பிறர் விடயத்தில் இப்படி நாம் பட்டிருக்கும் கடனைத்தான் அது குறிக்கிறது.

பிறவிக்குக் காரணமாக இருந்த தாய் தந்தையர்க்குச் செய்யவேண்டிய கடமையை முதலாவதாகச் சொல்லுகிறார்கள். பின்னர் எழுத்தறிவித்தவனுக்கும் கடவுளுக்கும் முறையே கடன் பட்டிருக்கிறோம். கடவுளைப் பற்றிய தகவலைக் கடைசியாகத் தெரிந்துகொள்வதனால், கடவுளுக்குக் கடைசி வரிசையில் இடம் கொடுத்தார்கள் போலும்.

உடல், உள்ளம், உயிர் இந்த மூன்றும்தான் முழு உரிமையாக நாம் பெற்றுக்கொண்ட செல்வங்கள். முதலில் நமக்கு உடைமையாகி விட்ட இந்த மூன்றுக்கும் நாம் பட்டிருக்கும் கடன்தான் பெரிது.

உடலை நோவு அண்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு; உள்ளம் வேதனைப்படாமல் அதைச் சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டிய கடமை; உயிரை நீண்ட காலம் தங்கியிருக்கும்படி செய்து கொள்ள வேண்டிய தர்மம்; இவை மிகவும் முக்கியமானவை.

சுயநலம் என்று இதைச் சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். நம்மைத் தவிர்த்துப் பிறர் விடயமாக நாம் பட்டிருக்கும் கடன்தான் கடமையென்பது இவர்கள் கணக்கு. போகட்டும், வார்த்தையில் விவகாரம் பண்ணவேண்டிய அவசியமில்லை. கடமையென்பதே சுயநலத்தில் இருந்து விளைந்ததுதானே. நம் நலத்திற்காக அடைந்த ஒன்றை அளித்தவர்க்கு உரிய விலையை திரும்பிச் செலுத்துவது தானே கடமை. எனவே கடமையுணர்ச்சியும் சுயநலத்தில் விளைந்ததுதான்.

வாங்கின கடனை ஒழுங்காகத் திருப்பிக்கொடுத்தால்தான் மறுபடியும் வரவு செலவு செய்வதற்கு நாம் தகுதியுள்ளவர்களென்று பிறரை நம்பச் செய்ய முடியும். இப்படிக் கொஞ்சங் கொஞ்சமாக நாணயத்தைப் பெருக்கிக் கொண்டு போய் இறுதியில் பெரிய நாமமாகப் போட்டு விடுகின்ற சூரர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். இறுதியில் பெரிய லாபமடிப்பதற்காகத்தான் ஆரம்பத்தில் சிறிய கடமைகளை இவர்கள் ஒழுங்காக நிறைவேற்றுவதாகவும் இருக்கும். இது வேறு விவகாரம்.

தனக்குத்தானே செய்து கொள்ளுகின்ற கடமைகளால் மனிதன் சுகம் பெறுகிறான். பிறர்பால் ஒழுங்காகக் கடமைகளைச் செய்கிறவன் புகழும் மதிப்பும் பெறுவதுகூட, தன் சுகம் பெறும் பொருட்டாகத்தான். எனவே கடமையின் அடிப்படையிலும் சுயநலம் தான் அடங்கியிருக்கிறது. அதுபோல் சுயநலம் என்பதும் ஒரு கடமைதான் என்று கொள்வதில் தவறு ஒன்றுமில்லை.

சுயநலம் என்பது அப்படி ஒன்றும் கீழ்த்தரமான தத்துவமல்ல. ஒவ்வொருவனும் அவனவனுடைய நலத்தை ஒழுங்காகப் பார்த்துக்கொண்டால் ஊர்முழுவதும் நலமாகத் தானே அமையும். இதில் ஒரே ஒரு சிறிய வரம்பு இருக்கிறது. அதாவது எந்த நலனையும் நாம் பெற விரும்பும் போது அல்லது காத்துக்கொள்ளும்போது, அதனால் பிறர் யாருடைய நலனுக்கும் குந்தகம் ஏற்படாமல் இருக்கிறதா என்பதைக் கொஞ்சம் கவனித்துக்கொண்டு விட்டால் போதும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு எவ்வளவு வேண்டுமானாலும் ஒருவர் சுயநலவாதியாக இருக்கலாம். பிறர் நலம் பேணுகிறவர் என்று புகழ் பெற்ற யாரும் இப்படி கைதேர்ந்த சுயநலவாதிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள்.

இந்த உலகத்தில் நாம் சுகப்படுவதை எதிர்க்கவோ தடுக்கவோ வேண்டிய அவசியம் யாருக்கும் கிடையாது. நம்மால் தனக்கு அல்லது தனது சுயநலனுக்கு ஆபத்து உண்டாகி விடுமோ என்கிற சந்தேகம் அல்லது அச்சம் யாருக்காவது ஏற்பட நாம் இடம் கொடுத்துவிட்டால் அப்பொழுதுதான் நமது நலனுக்கு எதிரான பகைவராக அவர் உருவெடுக்கிறார். எனவே முதலில் மனிதன் செய்யவேண்டிய கடமையென்ன வென்றால், நாம் சுகப்படுவதைச் சகித்துக்கொண்டுள்ள, நம்மைச் சூழ்ந்துள்ள யாரும் நன்மையடைவதைப் பற்றி நமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது என்பதை நமது சொல்லால், செயலால் தெளிவாகத் தெரிவித்துவிடவேண்டும். இயன்றவரையில் அவர்களுக்கு உணர்த்தி விடுவது நல்ல காரியம். பிறகு நமக்கு எதிரான சக்தி எதுவுமே இந்த உலகில் இருக்காது. உலகம் முழுவதுமே நமது நலனுக்குத் துணை புரியும்.எனவே மனிதனுக்கு உள்ள ஒரே தலையாய கடமை பிறர் நலம் பேணுதல்.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற பழமொழிக்குப் பொருள் விளங்குகிறதல்லவா? பிறர்நலம் பேணுதல் சுயநலம் காப்பதற்கே.

‘கடமை யாவன
தன்னைக் கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல்
பிறர்நலம் வேண்டுதல்
உலகெலாம் காக்கும்
ஒருவனைப் போற்றல்
இந்நான் கே! இப்
பூமியில் எவர்க்கும்
கடமை எனப்படும்
பயன் இதில் நான்காம்
அறம் பொருள் இன்பம்
வீடெனும் முறையே’

எனவே சுயநலம் விரும்புவோன் பிறர்நலம் பேணுதல் கடமை. இதனால் புகழ்வரும், சுகமும் வரும். சுயநலமும் பெருகும்.

**அரும்பதங்கள்**

தகவல் - செய்தி
தர்மம் - அறம்
சூரர்கள் - வீரர்கள்
குந்தகம் - தடை
நிபந்தனை - உறுதி, ஏற்பாடு

## கிரகித்தல் பயிற்சி

1. நாம் யார்யாருக்கு கடமைப்பட்டுள்ளோம்?
2. முழு உரிமையாக நாம் பெற்றுக்கொண்ட செல்வங்கள் எவை?
3. கடமை என்பது யாது?
4. மனிதனுக்குள்ள தலையாய கடமை என்ன?
5. நான்கு வகையான பயன்களும் எவை?
6. இப்பாடம் எமக்குக் கூறும் படிப்பினை யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. குழுக்களாகப் பிரிந்து மாணவர்களாகிய உங்களது கடமைகளைப் பட்டியற் படுத்துக.
2. கடமை என்ற விடயத்துடன் தொடர்புடைய பழமொழிகள், திருக்குறள்கள் என்பவற்றைத் தேடித் தொகுத்து வகுப்பில் காட்சிப்படுத்துக.

# ‘ல’கர ‘ள’கர ‘ழ’கர வேறுபாடுகள்

பின்வரும் வசனங்களை வாசியுங்கள்:

★ குரங்கின் வால் மிக நீளமானது.
★ போர்வீரன் வாள் வைத்திருந்தான்.
★ நாம் நல்ல முறையில் வாழ்தல் வேண்டும்.

இவ்வசனங்களில் வரும் வால், வாள், வாழ் ஆகிய சொற்கள் ஒலி வேறுபாடுடையன. அத்தோடு பொருள் வேறுபாட்டையும் தருவன.

ல,ள, ழ ஆகிய ஒலிகள் பொருள் வேறுபாட்டைத் தருவன. இவற்றைப் பற்றிய சரியான விளக்கத்தை நாம் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆல் - ஒரு வகை மரம்
ஆள் - ஆட்சி செய்
ஆழ் - மூழ்கு

வலி - நோவு
வளி - காற்று
வழி - பாதை

கலி - துன்பம்
களி - மகிழ்ச்சி
கழி - நீக்கு

தலை- சிரம் / உடலின் ஒரு உறுப்பு
தளை - பிணைப்பு
தழை - இலை

குலவி - உறவாடி
குளவி - ஒரு வகை வண்டு
குழவி - குழந்தை

## ‘ண’கர ‘ன’கர ‘ந’கர வேறுபாடுகள்

அணைத்து - தழுவி
அனைத்து - எல்லாம்

பணி - குளிர்ந்து விழும் நீர்த்துளி
பணி- தொழில்

எண் - எண்ணிக்கை
என் - என்னுடைய

எந்நாள் - எந்த நாள்
எண்ணாள்- எண்ண மாட்டாள்

மணம் - வாசனை
மனம் - உள்ளம்

தண்மை - சாந்தம், குளிர்ச்சி
தன்மை - குணம்

## ‘ர’கர ‘ற’கர வேறுபாடுகள்

அரை - அரைப் பங்கு
அறை - வீட்டு அறை

கிரி -மலை
கிறி - பொய்

வருத்தல் - துன்புறுத்தல்
வறுத்தல் - வறுப்பது

பரவை - கடல்
பறவை - பட்சி

பொரி - நெற்பொரி
பொறி - இயந்திரம்

அறம் - தர்மம்
அரம் - ஒரு கருவி

**பயிற்சி**

அகராதியின் துணையுடன் பின்வரும் சொற்களுக்கான பொருளைத் தேடியறிக:

| | |
|---|---|
| 1. கணி | 2. தோண்டி |
| 3. தோன்றி | 4. வண்மை |
| 5. வன்மை | 6. கூலம் |
| 7. கூளம் | 8. கூழம் |
| 9. வாலை | 10. வாளை |
| 11. வாழை | 12. கோலம் |
| 13. கோளம் | 14. குழி |
| 15. குளி | 16. நாழி |
| 17. நாளி | 18. சூரை |
| 19. சூறை | 20. தெறு |

# சொல்வதெழுதல்

ஒருவர் கூறும் விடயத்தைக் கேட்டுக் கிரகித்து எழுதப்படுவதே சொல்வதெழுதல் எனப்படுகிறது.

**சொல்வதெழுதலின் போது கவனிக்க வேண்டியவை**

★ கேட்பவற்றை மனதிற் பதித்துக்கொள்ள வேண்டும்.
★ செவிப்புலன், விழிப்புலன், கையசைவு என்பவற்றை இசைவு படுத்தி விரைவாக எழுதுதல் வேண்டும்.

★ நிறுத்தக் குறிகளைச் சரியாக இடுதல்.

★ ல, ள, ழ, ர, ற, ன, ண, ந என்பவற்றின் உச்சரிப்பு வேறுபாடுகளை கேட்டுக் கிரகித்து சரியாக எழுதல்.

ஆசிரியரால் கூறப்படும் சொற்கள், வாக்கியங்கள், பந்தி, பாடல் என்பவற்றைக் கேட்டுக் கிரகித்து எழுத்துப் பிழையின்றி எழுதப் பழகுங்கள்.

## வாக்கியம் அமைத்தல்

வாக்கியம் அமைத்தல் என்பது வாக்கிய உறுப்புகளை முறையாக இணைத்து பொருள் தரும் வகையில் வாக்கியங்களை அமைத்தல் ஆகும்.

1. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று பாடத்தைப் படித்தனர்.

இவ்வாக்கியத்தில்

**எழுவாய்** - மாணவர்கள்
**பயனிலை** - படித்தனர்
**செயப்படுபொருள்** - பாடத்தை

2. ஒரு வாக்கியத்தின் உறுப்புகளாவன

**எழுவாய்** - கருத்து எழும் இடம்
**பயனிலை** - கருத்து முற்றுப்பெறும் இடம்
**செயப்படுபொருள்** - இரண்டாம் வேற்றுமை ஏற்கும் பெயர்ச்சொல்

3. வாக்கியம் ஒன்றை எழுதும்பொழுது எழுவாய் பயனிலை என்பவற்றுக்கிடையில் **திணை, பால், எண், இடம், காலம்** என்பவற்றின் இயைபு கவனிக்கப்படல் வேண்டும்.

# அடைமொழிகள்

வாக்கிய உறுப்புக்களை விளக்கியும் விரித்தும் எழுதுவதற்குப் பயன்படுவதே அடைமொழிகள் ஆகும்.

உதாரணம் - **சுகந்தன் கீரையைப் பிடுங்கினான்.**

இவ்வாக்கியத்தை அடைமொழியுடன் சேர்த்து எழுதும்பொழுது
**கள்ளச் சுகந்தன்** வாடிய **கீரையை** வேரோடு **பிடுங்கினான்.**

**பயிற்சி**

அ).பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்பவற்றை இனங்காண்க:

1. பெண்கள் தேயிலைக் கொழுந்து பறித்தனர்.
2. ஆசிரியர் மாணவருக்கு அறிவுரை வழங்கினார்.
3. ஆற்றங்கரை மரம் நன்றாக வளர்ந்திருந்தது.
4. இளவரசன் நல்ல முறையில் ஆட்சி செய்தான்.
5. மாணவர்களின் பெற்றோர் விழாவுக்கு வந்திருந்தனர்.

ஆ). பின்வரும் வாக்கியங்களை அடைமொழி சேர்த்து எழுதுக:

1. கிளி பழங்களை உண்டது.
2. பெற்றோர் விழாவை இரசித்தனர்.
3. குழந்தையின் மொழி இனிமையானது.
4. கட்டிடங்கள் மத்தியில் காணப்பட்டன.
5. அரசன் செங்கோலாட்சி செய்தான்.

# 4 காட்டு விலங்குகளைக் காப்போம்

தொல்காப்பியர் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு பிரிவாகப் பிரித்து நானிலம் என்று குறிப்பிட்டார். இதில் காடும் காடு சார்ந்த இடமும் முல்லையாகும். வானளாவ உயர்ந்த மரங்களும் செடிகொடிகளும் மலைகளும் காடுகளும் வற்றாது ஓடி வளம் பெருக்கும் ஆறுகளும் இயற்கை வளங்களாகும். செயற்கைப் பொருள்கள் மனிதத் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யும். இயற்கை கண்களை ஈர்த்துக் களிப்படையச் செய்யும்; கவலைகளை மறக்க வைக்கும்; மனித மனத்தை மாண்புறச் செய்யும். முள்ளும் புதரும் நிறைந்த, மரங்களடர்ந்த, எங்கும் இருள் சூழ்ந்த காடுகள் கண்களுக்குக் குளிர்ச்சியாய் இருப்பினும், சில பறவைகளின் ஒலியும் விலங்குகளின் ஆரவாரமும் அச்சத்தைத் தருவனவாய் இருக்கும்.



அற்பர் நட்புப்போல் அகன்று தொடங்கிய பாதைகள் செல்லச் செல்லக் குறுகி முடியும். மலர்களும் காய்களும் கனிகளும் மலிந்திருக்கும். காட்டில், துள்ளியோடும் புள்ளிமான்களைக் காணலாம். குடும்பத்துடன் குளிக்கும் யானைக் கூட்டத்தைக் காட்டாற்றின் பக்கம் பார்க்கலாம். கொடுவில்லேந்திய வேட்டைக்காரர்களின் காலடியோசை கேட்கும்

சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற இவ்வாறான விலங்குகளின் ஆரவாரம் காட்டையே நடுநடுங்கச் செய்யும். இக்காட்டு விலங்குகளைக் கொடிய விலங்குகள் என்போம்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குக் காடும் காட்டு விலங்குகளும் காரணமாய் உள்ளன. நல்ல மழை பெய்வதற்கு உதவும் காடுகள், வீடு கட்டத் தேவைப்படும் மரங்களையும் அடுப்பெரிக்க உதவும் விறகையும் மருந்துக்குப் பயன்படும் மூலிகைகளையும் இறப்பர், கோந்து போன்ற பொருள்களையும் மக்களுக்குத் தருவதுடன் விலங்குகளுக்குப் பாதுகாப்பான வாழிடத்தையும் அவற்றின் உணவுக்குத் தேவையான தழைகள் போன்றவற்றையும் நல்குகின்றன.

இந்தியா, இலங்கை, பர்மா, சயாம், ஆபிரிக்கா முதலிய நாடுகளில் யானைக் கூட்டங்களை இயற்கையாகக் காணலாம். பிறநாடுகளில் உயிரியற் பூங்காக்களில் மக்கள் பார்ப்பதற்காக யானைகளை வளர்ப்பர். யானைக்கு நினைவாற்றல் மிகுதி. 'தீங்கிழைத்தவரைத் தப்பாமல் தண்டிக்கும்' என்று கூறுவர். உருவத்தில் பெரிய யானைகள் மரங்களைச் சுமந்தும் இழுத்தும் வரும். கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இப்பணியைச் செய்ய யானைகளைப் பழக்கியுள்ளனர். மேலும் யானையின் தந்தங்கள் விலை மதிப்பற்றவை. தந்தத்தால் ஆபரணங்களும் அலங்காரப் பொருள்களும் செய்யப் பெறுகின்றன. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்ற தொடர் இதனை மெய்ப்பிக்கக் கூறப் பெற்றதே.

'நாயைப் போன்று நன்றியுள்ளவன், சிம்மக்குரல் உடையவன், புலி போலப் பாய்பவன், பசுபோல் சாதுவானவன், நரியைப் போன்ற தந்திரம் உள்ளவன்' என்றெல்லாம் மக்கட் பண்புகளைக் குறிக்குமிடத்து விலங்குகளை உவமை காட்டுவர். 'பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று' என்றும் 'விலங்கொடு மக்களனையர்' என்றும், 'காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா வேலாண் முகத்த களிறு' என்றும், 'குன்றேறி யானைப் போர் கண்டற்றால்' என்றும், 'கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது' என்றும், 'கைவேல் களிற்றொடு போக்கி' என்றும் விலங்குகளை வள்ளுவர் தம் குறளில் குறிப்பிட்டுள்ளார்.

யானை, புலி, காட்டுக்காளை, சிறுத்தை, பலவகைப்பட்ட

*குரங்குகள், கரடி (எண்கு), கழுதைப்புலி (தீநாய்), காட்டுப்பன்றி, காட்டுநாய், கணநரி, காட்டுப்பூனை, கீரிப்பிள்ளை, எறும்பைத் தின்னும் விலங்கு வகை, பறக்கும் அணில் போன்ற விலங்குகள், பலவகையான மான்கள், காட்டுக்குதிரை முதலியன நம் காடுகளில் வாழும் விலங்குகளாகும்.*

*மனிதனின் ஆசைகளும் எண்ணங்களும் உணர்வுத் தேவைகளும் சில விலங்குகள் அடியோடு அழிந்து விடக் காரணமாக உள்ளன. மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் பயிரிட நிலங்களைப் புதுப்பிக்கும் முயற்சியாலும் கொடிய விலங்குகளிடமிருந்து பயிர்வகைகளைப் பாதுகாக்க அவற்றைக் கொல்வதாலும் கொல்வதற்குக் கிடைத்த துப்பாக்கி போன்ற கருவிகளாலும் வேட்டையாடும் சட்டங்களை எதிர்த்துக் கிளம்பிய வேட்டைக்காரர்களாலும் காடுகளில் வாழ்ந்து வரும் பழங்குடியினராலும் விரைந்த பயண வசதிகளாலும் காட்டு விலங்குகள் அருகி வருகின்றன. கடந்த முந்நூறு ஆண்டுகளில் பல விலங்குகள் மறைந்துவிட்டன. மற்றவை மறையும் நிலையில் உள்ளன.*

**வன விலங்குகள் நாட்டின் உடைமையாகும். இவற்றைப் பாதுகாப்பது நம் கடமை.**

**அரும்பதங்கள்**

*களிப்பு - மகிழ்ச்சி*
*மலிந்து - மிகுதியாக*
*கோந்து - பசை*
*நல்குகின்றன - கொடுக்கின்றன*
*பெற்றம் - பசு*
*காலாழ் களர் - சேறு நிறைந்த நிலம்*
*புகலிடம் - சரணாலயம்*
*சயாம் - தாய்லாந்து*

### கிரகித்தல் பயிற்சி

1. காட்டில் காணக்கூடிய மூன்று காட்சிகளை எழுதுக.
2. மரத்தின் பயன்பாடுகள் எவை?
3. யானைகளைப் பற்றி கூறப்பட்டுள்ள விடயங்களைத் தருக.
4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து மிருகங்களின் பெயர்களையும் அவற்றின் பண்புகளையும் குறிப்பிடுக.
5. விலங்குகள் அழிவதற்குக் காரணமாய் இருப்பவை எவை?
6. காட்டு வளத்தையும் வன விலங்குகளையும் நாம் எவ்வாறு பாது காக்கலாம்?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. பாடத்தை வாசித்து, காட்டு விலங்குகளுக்கும் வீட்டு விலங்குகளுக்கும் உள்ள பண்புகள் பற்றிக் கலந்துரையாடுக.
2. இப்பாடப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குறள்களையும் அவற்றின் பொருளையும் திருக்குறள் நூலின் உதவியோடு எழுதுக.
3. 'காட்டு விலங்குகளைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பில் கலந் ரையாடி கட்டுரை ஒன்று எழுதுக.
4. உமக்குப் பிடித்த மிருகம் ஒன்றைக் குறிப்பிட்டு, அம்மிருகம் தொடர்பான தகவல்களைத் தேடியறிந்து அவற்றை வகுப்பில் முன்வையுங்கள்.

## பந்தி அமைப்பு

ஒரு விடயத்தை விரித்து விளக்குவதாய் அமைவதே பந்தி எனப்படும். அதாவது ஒரு பிரதான கருத்தை விரித்துக் கூறுவது பந்தியாகும். பந்தி ஒன்றை எழுதுவதற்கு முன்,

★ குறிப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

★ குறிப்புகளைக்கொண்டு வாக்கியங்களை எழுத வேண்டும்.

★ எழுதிய வாக்கியங்களை கருத்துகளுக்கேற்ப ஒழுங்குபடுத்த வேண்டும்.

உ- ம் தலைப்பு :- எமது உணவு

குறிப்புகள் :-
★ அடிப்படைத் தேவை
★ உடல் வளர்ச்சிக்கு
★ உடல் நலம் பேண
★ வாழ்வதற்கு அவசியம்
★ போசணை உணவு
★ உடல் ஆரோக்கியம்
★ நிறையுணவு

வாக்கியங்கள்:-

1. உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் பிரதானமானது.
2. உடல் வளர்ச்சிக்கும், உடல் நலம் பேணுவதற்கும் உணவு அவசியம்.
3. மனிதன் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது.
4. உண்ணும் உணவு போசணை நிறைந்ததாக இருக்க வேண்டும்.
5. உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள நிறையுணவு அவசியமாகும்.

இவ்வாக்கியங்களை கருத்துகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தினால் கீழுள்ளவாறு அமையும்:

உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் பிரதானமானதாகும். மனிதன் வாழ்வதற்கு உணவு இன்றியமையாததாகும். மனிதனது உடல் வளர்ச்சிக்கும் உடல் நலத்தைப் பேணுவதற்கும் உணவு அவசியமானது. எனவே, மனிதன் உண்ணும் உணவு போசணை நிறைந்ததாக இருக்க வேண்டும். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள நிறையுணவு அவசியமாகும்.

**பயிற்சி**

*1. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியாக அமையுங்கள்:*

*அ. கூட்டினுள் அடைத்தான். சாப்பிடப் பழம் கொடுத்தான்.*
*ஆ. கூட்டினுள் அங்கும் இங்குமாகப் பறந்தது.*
*இ. தோட்டத்தில் ஒரு கிளி இரையைத் தின்று கொண்டிருந்தது.*
*ஈ. வீட்டுக்குள் கொண்டு சென்றான்.*
*உ. அங்கு வந்த நாதன் கிளியைப் பிடித்தான்.*
*ஊ. கிளி சாப்பிடவே இல்லை. 'கீச்கீச்' என்று கத்திக்கொண்டேயிருந்தது.*

*2. பின்வரும் தலைப்புக்களுக்குப் பொருத்தமான பந்திகளை எழுதிப் பழகுங்கள்:*

*அ. எமது சூழல்.*
*ஆ. புத்தாண்டுப் பிறப்பு.*
*இ. பறவைகள் பலவிதம்.*
*ஈ. கண்ணகி.*
*உ. மாணவர் ஒழுக்கம்.*

# எழுத்துக்களின் வகைதொகையும் அவற்றின் ஒலிப்பு முறையும்

எழுத்து என்பது,
- ★ ஒலியின் வரிவடிவம்
- ★ கட்புலக் குறியீடு (கண்ணால் பார்க்கக் கூடியது)
- ★ எழுதப்படுவது
- ★ சித்திரமாக வரையப்பட்டது

எனப் பலவாறான பொருள் விளக்கம் கூறலாம்.

**தமிழ் எழுத்துக்கள்**

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | - | *12* |
| மெய் எழுத்துக்கள் | - | *18* |
| உயிர்மெய் எழுத்துக்கள் | - | *216* |
| ஆய்த எழுத்து | - | *1* |
| மொத்தம் | = | *247* |

***தமிழில் 247 எழுத்துக்கள் உள்ளன.***

*1. உயிர் எழுத்துக்கள் - 12*

குறில் - அ, இ, உ, எ ,ஒ
நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

*2. மெய் எழுத்துக்கள் - 18*

வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

### 3. உயிர்மெய் எழுத்துக்கள்

உயிர் எழுத்துக்கள் 12
மெய் எழுத்துக்கள் 18
உயிர்மெய் எழுத்து 12 × 18 = 216

### 4. கிரந்த எழுத்துக்கள்

மேலே குறிப்பிட்ட எழுத்துக்களைத் தவிர தற்காலத்தில் கிரந்த எழுத்துக்களும் பயன்படுத்தப்படுகின்றன.

அவையாவன - ஜ, ஸ, ஷ, ஹ, ஶ்ரீ, க்ஷ

**பயிற்சி**

1. உயிர் எழுத்துக்கள் எத்தனை?
2. உயிர்க்குறில் எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?
3. உயிர்மெய் நெடில் எழுத்துக்கள் எத்தனை? அவை எவ்வாறு அமையும்?
4. கிரந்த எழுத்துக்களைக்கொண்ட சொற்களை எழுதுக.

# 5 யாம் ஐவேம்

### கவிஞர் அழககசுந்தர தேசிகர்

கவிஞர் அழககசுந்தர தேசிகர் இலங்கைச் சர்வகலா சாலையில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவர். இராமன் கதை, பாண்டவர் கதை, சந்திரகாசம், மனோன்மணி நாடகம் என பல நூல்களை எழுதியுள்ளார். இங்கு குறிப்பிடப்படும் யாம் ஐவேம் என்ற பாடல் ஒரு மொழிபெயர்ப்புப் பாடலாகும். இது கவிஞர் அழககசுந்தர தேசிகரால் மொழிபெயர்க்கப்பட்டது. எட்டு வயதுடைய பிள்ளை பற்றியதே இப்பாடலாகும்.

காங்கேயன் துறையிருந்து கீரிமலை தனுக்குக்
கடற்கரையே நானடந்து போனவொரு நாளில்
ஆங்கேநல் லழகியொரு சிறுமியைச்சந் தித்தேன்;
அவள்முகத்தை மதியெனஓர் களங்கமுமங்கில்லை.

எட்டுவய துப்பேதை இருண்டகரி குழலே
எட்டாம்நாட் பிறைபோன்ற நெற்றியிலே புரள,
கட்டழகி இருபுருவம் வில்லென்ன லாமோ?
காண்டீவம் கோதண்டம் என்பதுவே தகுதி.

கண்ணிரெண்டும் அமுதம்எனல் பொருந்துவதே யன்றிக்
கணையென்றும் நஞ்சென்றும் கழறவிடம் இல்லை
பெண்ணரசி பவளவிதழ் திறந்துநகை செய்யப்
பிறங்கினவால் வெண்முத்தம் பேதைமுகந் தனிலே.

தங்கச்சி, உன்பேர்சொல், அஞ்சுசதம் தருவேன்;
        தாயுண்டோ தந்தையுண்டோ? சகோதரர்கள் உண்டோ?
புங்கவரே, என்பேர்தான் அஞ்சுசதம் பெறுமோ?
        போம்,போம்,போம்,ஏனெனக்கு நாய்தின்னாக் காசு?

இங்கென்னை எல்லாரும் சுந்தரியென் றழைப்பார்;
        என்னாய்ச்சி என்னப்பு இருக்கின்றார் வீட்டில்;
எங்களண்ணர் சம்பந்தர் கொழும்பினிற்கற் கின்றார்;
        என்னக்கை சிவகாமி இறங்கூனில் உள்ளார்.

எனக்கிளையாள் கற்பகந்தான் போனபுரட்டாதி
        எங்கள்நட ராசர்திருக் குஞ்சிதபா தந்தான்
தனக்கரிய பொருளென்று சார்ந்துசுகிக் கின்றாள்;
        தம்பிசிதம் பரநாதன் தவழ்கின்றான் இப்போ.

நாங்கள்ஐவேம் பிள்ளைகளே, வேறுபிள்ளை இல்லை;
        நங்கள் அப்பு ஆச்சிக்கு நாங்கள்ஐவேம் உள்ளேம்;
நீங்கள்உளீர் ஐவீர்மக்காள், நடராசர் அருளால்,
        நீங்கள்ஐவீர் எங்களுக்குப் புலனைந்து போலே.

இப்படியே ஆச்சிஅப்பு எங்களுக்குச் சொல்வார்
        நீர்கேட்ட கேள்விக்கு விடைதந்தேன் என்றாள்.
செப்பினசுந் தரிமுகத்தை நன்கு கவனித்து,
        சிறுமி, உனக் கொருமொழிநான் சொல்லஇடந்தருவாய்.

நாங்கள்ஐவேம் மக்கள் உளேம் என்றுமொழி நவின்றாய்
        ஐவரிலே ஒருத்திநட ராசர்பதம் நண்ணின்
பாங்கிபின்னர் நால்வர்உளீர், ஐவர்என்றால் தவறு;
        பாராய்அஞ் சினிலொன்று போனால்நா லன்றோ?

ஐயா, நீர் பேசுவது விந்தையினும் விந்தை!
அடியேன்யான் சொல்லுவதைப் பொறுமையுடன் கேளும்;
மெய்யாய்என் அண்ணனவர் கொழும்புக்குப் போனால்,
மேலுமொன்று போனதினால் மூன்றென்பீர் போலும்!

அக்கைசிவ காமிபின்னர் இறங்கூனுக் ககன்றால்
அவர்போக இருவர்உளீர், மூவரிலீர் என்பீர்!
இக்காலம் இருவர்உளேம் ஆச்சிஅப்பு வோடே,
யாழ்ப்பாணந் தனைவிட்டு மூவரவர் சென்றார்.

இவ்வாறு சுந்தரிதான் இயம்பியதைக் கேட்டேன்
எட்டுவய துப்பிள்ளைக் கிருந்தஅறி வென்னே!
ஒவ்வாது நான்சொன்ன சொல்லென்று கண்டேன்
உடனேஎன் மயக்கமெலாம் ஒழிந்துபறந்ததுவே.

**கவிஞர் அழகசுந்தர தேசிகர்.**

**அரும்பதங்கள்**

களங்கம் - கறை
பேதை - பெண்
கரிகுழல் - கரிய நிறக் கூந்தல்
கோதண்டம் - வில்
நகை - புன்னகை
இறங்கூன் - பர்மாவின் தலைநகரம்
புங்கவர் - சிறந்தவர்

## கிரகித்தல் பயிற்சி

1. கவிஞர் அழகசுந்தர தேசிகர் எழுதிய நூல்கள் எவை?
2. சிறுமியின் பெயர் யாது? அவளுக்கு எத்தனை வயது?
3. சிறுமியின் அழகு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
4. அஞ்சினில் ஒன்று போனால் நாலன்றோ என்ற அடியின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
5. இப்பாடலில் உம்மைக் கவர்ந்த பாடலடியைக் குறிப்பிட்டு அதற்குரிய காரணத்தைத் தருக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. இப்பாடலை வாசித்து இதனைக் கதையாகக் கூறுக.
2. குழுக்களாக இணைந்து இப்பாடலை ஓசைநயத்துடன் வாசிக்க.
3. குறிப்பிடப்பட்ட சிறுமியின் அழகு சித்தரிக்கப்பட்டிருக்கும் முறையைக் கலந்துரையாடுக.
4. இதனை இருவருக்கிடையிலான உரையாடலாக எழுதி நடித்துக் காட்டுக.
5. இதுபோன்ற பாடல்களைச் சேகரியுங்கள்.

# ஒத்தகருத்துச் சொற்கள்

பின்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்:

★ நாம் வையகம் போற்ற வாழ வேண்டும்.
★ காலையும் மாலையும் கடவுளை வணங்குவோம்.
★ நாம் நினைப்பவற்றை மனதில் உயர்ந்தவையாக நினைக்க வேண்டும்.

இங்கு வையகம், கடவுள், மனம் ஆகிய சொற்களுக்கு அதே பொருளைத் தரும் வேறு சொற்களைப் பயன்படுத்தியும் அவ் வாக்கியங்களை எழுத முடியும். அதாவது,

வையம்- உலகம்
கடவுள் - இறைவன்
மனம் - உள்ளம்

இவ்வாறு பயன்படுத்தும் சொற்களை ஒத்தகருத்துச் சொற்கள் என்போம். அதாவது, ஒரே பொருளைத் தரும் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒத்தகருத்துச் சொற்கள் எனப்படும்.

**உதாரணம்:** அழகு - எழில்
மலை - கிரி
கரை - ஓரம்
முகம் -வதனம்
குழல் - கூந்தல்
கண் - விழி
அம்பு - கணை
பெண் - மங்கை
நகை - சிரிப்பு

**பயிற்சி**

1. யாம் ஐவேம் என்ற பாடத்திலிருந்து ஆசிரியரால் தரப்படும் சொற்களுக்கு அகராதியின் துணையுடன் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

2. கீழே தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| ★ காடு | ★ நகை |
| ★ வான் | ★ பழமை |
| ★ ஆசாரம் | ★ சிரமம் |
| ★ கண்ணி | ★ யாத்திரை |
| ★ நன்கொடை | ★ அவனி |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

பின்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்.

★ மாணவர்கள் உற்சாகத்துடன் பாடசாலைக்கு வந்தனர்.
★ சூரியன் கிழக்கு வானில் உதித்தது.
★ பரீட்சையில் வெற்றி பெறுவதே நோக்கம்.

இங்கு உற்சாகம், உதித்தது, வெற்றி ஆகிய சொற்களுக்கு எதிரான கருத்தைத் தரும் சொற்களும் உள்ளன.

உற்சாகம் - சோர்வு
உதித்தது - மறைந்தது
வெற்றி - தோல்வி

அந்தவகையில் ஒரு சொல்லுக்கு எதிரான கருத்தைத் தரும் சொற்கள் எதிர்க்கருத்துச் சொற்கள் எனப்படும்.

**உதாரணம்:**

| | |
|---|---|
| அகம் | - புறம் |
| பிறப்பு | - இறப்பு |
| உருவம் | - அருவம் |
| ஐது | - செறிவு |
| கேடு | - ஆக்கம் |
| சுலபம் | - கடினம் |
| சுத்தம் | - அசுத்தம் |
| மரியாதை | - அவமரியாதை |
| உள்ளே | - வெளியே |
| கோபம் | - சாந்தம் |

**பயிற்சி**

1. யாம் ஐவேம் என்ற பாடத்திலிருந்து சில சொற்களைத் தெரிவு செய்யுங்கள். அச்சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை ஆசிரியரின் உதவியுடன் எழுதுங்கள்.

2. கீழே தரப்படும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.

| | |
|---|---|
| ★ அகங்கை | ★ ஒற்றுமை |
| ★ இயற்கை | ★ பண்டிதர் |
| ★ ஆண்டான் | ★ அண்மை |
| ★ உண்மை | ★ ஈதல் |
| ★ பாலர் | ★ இரகசியம் |

# 6 காந்தியடிகள் கடிதம்


## மோகனதாஸ் கரம்சந்த் காந்தி

இவர் இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள 'போர்பந்தர்' எனும் ஊரில் 2.10.1869 இல் பிறந்தார். அறவழிப் போராட்டம் (சத்தியாக் கிரகம்) மூலம் இந்தியாவின் சுதந்திரத்துக்கு வழிவகுத்தார். கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ''மகாத்மா'' எனும் பட்டத்தை காந்திக்கு வழங்கினார். காந்தி 'சத்திய சோதனை' எனும் சுயசரிதை நூலையும் எழுதியுள்ளார் =.

(1922 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், பதினான்காம் திகதி, ஏரவாடாச் சிறையிலிருந்து காந்தியடிகள் ஹகீம் அலஜ்மல்கான்சு என்பவருக்கு எழுதிய கடிதம்)

ஏரவாடாச் சிறை,
1922.04.14

அன்புள்ள ஹகீம்ஜி,



நான் சிறையிலே தனியாக வைக்கப்பட்டிருக்கிறேன் என்று சொன்னது, ஏதோ குறையாகச் சொல்லப்பட்டதன்று. நான் இங்கே மகிழ்ச்சியாகவே இருக்கின்றேன். நான் தனிமையையே விரும்புகின்றேன்; நான் அமைதியை விழைகிறேன். இப்பொழுது எனக்குப் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

என்னுடைய சிறைவாழ்வில் நான் ஒவ்வொருநாளும் என்ன செய்கிறேன் என்பதைச் சொல்லி இக்கடிதத்தை முடித்துவிடுகிறேன்.

எனது அறை சுத்தமாகவும் காற்றோட்டமாகவும் இருக்கிறது, திறந்த வெளியில் படுக்க எனக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. இது எனக்கு ஒரு வரப்பிரசாதம்போல இருக்கிறது.

காலை நான்கு மணிக்குப் பிரார்த்தனைக்கு எழுந்து விடுகிறேன். நான் இங்கே கூடப் பிராத்தனையைக் கைவிட்டு விடவில்லை என்பதை அறிந்தால் சத்தியாக்கிரக ஆச்சிரமவாசிகள் மகிழ்ச்சியடைவார்கள். பிறகு ஆறரை மணிக்குப் படிக்க ஆரம்பிக்கிறேன். விளக்கு வைத்துக் கொள்ள எனக்கு அனுமதி கிடையாது. அதனாலேதான் வெளிச்சம் ஏற்பட்டவுடனேயே என் வேலையை ஆரம்பிக்க முடிகிறது. மாலை ஏழு மணிக்கு இருள் சூழ்ந்தவுடன் என் வேலையை முடித்துக் கொள்கின்றேன். இரவு எட்டு மணிக்குப் பிரார்த்தனை செய்துவிட்டுப் படுக்கைக்குப் போகிறேன். தினம் ஆறு மணிநேரம் படிக்கிறேன். நான்கு மணி நேரம் இராட்டை சுற்றுவதிலும், பஞ்சடிப்பதிலும் கழிகிறது.

அன்றாட வேலையை ஒழுங்காகச் செய்வதற்கு அனுகூலமாக மூன்று வேளைச் சாப்பாட்டை இரண்டு வேளையாகக் குறைத்துக் கொண்டிருக்கிறேன். இது எனக்குச் சௌகரியமாகவே இருக்கிறது. சிறை அதிகாரி ஆகார விடயத்திலே தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறார். சென்ற மூன்று நாட்களாக ஆட்டுப்பாலும் வெண்ணெயும் கிடைக்கின்றன. இன்னுஞ் சில நாட்களில் எனக்கு வேண்டிய உரொட்டியை நானே தயாரித்துக் கொள்வேன்.

இரண்டு கம்பளிகளும் ஒரு பாயும் இரண்டு துப்பட்டிகளும் என்னிடம் ஒப்புவித்திருக்கிறார்கள். இப்பொழுது ஒரு தலையணையையும் கொடுத்திருக்கிறார்கள். அஃதின்றியே நான் தூங்க முடியும். புத்தகங்களையோ துணிகளைச் சுருட்டியோ இதுவரையில் என் தலைமாட்டுக்கு வைத்திருந்தேன். ஆனால், இராஜகோபாலாச்சாரியார் எனக்கு ஒரு தலையணை கிடைக்குமாறு தமது செல்வாக்கையெல்லாம் உபயோகித்தார். என்னுடைய உபயோகத்துக்கென்று தனியாக ஒரு குளிக்கும் அறையும் ஒதுக்கியிருந்தார்கள். அதற்குப் பூட்டும் சாவியும் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய உபயோகத்துக்கென்று தனியாக ஓர் அறை ஒதுக்கப் பெற்றிருக்கிறது. மற்றவர்கள் உபயோகப்படுத்தாத சமயத்தில் அதை நான் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். சுகாதார

ஏற்பாடுகளும் இப்பொழுது விருத்தியடைந்திருக்கின்றன. ஆகையால், என் நண்பர்கள் என்னைப்பற்றிக் கவலைப்படல் வேண்டாம். நான் ஒரு பறவையைப்போல் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். சிறைக்கு வெளியே இருந்ததைக் காட்டிலும் இங்கே குறைவான வேலையைச் செய்கிறேன் என்று நான் நினைக்கவில்லை. இந்தச் சிறைவாசம் எனக்கு ஒரு பள்ளிக்கூடம் மாதிரி.

என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு எவ்வித அச்சமுமில்லை. ஆகையால் வெளியுலகத்திலே என்ன நடைபெறுகிறது என்று அறிந்துகொள்ள எனக்கு ஆவல் இல்லை. என்னுடைய பிரார்த்தனை உண்மையானதாய் இருக்குமானால் - நிருமலமான மனத்திலிருந்து வெளிவருமானால் - அது வெளியிலே ஆடம்பரமாகத் தோன்றும் காரியங்களை விடச் சிறந்தது. இவ்விடயத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு.

இப்படிக்கு,
கரம்சந்த் காந்தி.

**அரும்பதங்கள்**

நிருமலமான - பரிசுத்தமான
இராட்டை - நூல் நூற்கும் பொறி
சௌகரியம் - சுகம், வசதி
ஆகாரம் - உணவு
அனுகூலம் - நன்மை

## கிரகித்தல் பயிற்சி


1. காந்தியடிகள் தங்கியிருந்த சிறைச்சாலை எது?
2 சிறைச்சாலையில் காந்தியடிகளுக்கு செய்து கொடுக்கப்பட்ட வசதிகள் எவை?
3. இக்கடிதத்தில் கையாளப்பட்டுள்ள உவமைத் தொடரை எடுத்துக் காட்டுக.
4. இப்பாடப் பகுதியிலிருந்து வெளிப்படும் விழுமியக் கருத்துகளைத் தருக.

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. காந்தியடிகள் எழுதிய கடிதத்தில் கையாளப்பட்டுள்ள கடித உறுப்புக்களை இனங்கண்டு எழுதுக.

2. உமது பாடசாலையில் ஆறாந் தரம் படிக்கும் போது ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துக்காட்டி உமது நண்பன் அல்லது நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.

## உறவு முறைக் கடிதத்தின் அமைப்பு




1. முகவரியும், திகதியும்
2. விளிப்பு
3. உடல்
4. முடிப்பு (இப்படிக்கு அன்புள்ள )
5. உறவுப் பெயர், பெயர்

# எதிர்ப்பாற் சொற்கள்

எதிர்ப்பாற் சொற்கள் என்பது ''ஆண்பாலுக்குரிய பெண்பால் சொற்கள் அல்லது பெண்பாலுக்குரிய ஆண்பால் சொற்கள்'' ஆகும்.

**உயர்திணைக்குரிய எதிர்ப்பாற் சொற்கள்**

1. அப்பா - அம்மா
2. தம்பி - தங்கை
3. மாமா - மாமி
4. மச்சான் - மச்சாள்
5. தலைவன் - தலைவி
6. பாடகன் - பாடகி
7. கணவன் - மனைவி
8. கூலிக்காரன் - கூலிக்காரி
9. தபுதாரன் - விதவை
10. மாணவன் - மாணவி

**அஃறிணைக்குரிய எதிர்ப்பாற் சொற்கள்**

1. களிறு - பிடி
2. நாம்பன் - நாகு
3. எருது - பசு
4. கலை - பிணை
5. சேவல் - பேடு

## பயிற்சி

அ. பின்வரும் **அ** தொகுதியிலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களை **ஆ** தொகுதியிலிருந்து தெரிந்து அதனை எதிரிலுள்ள அடைப்புக்குள் எழுதுக.

| | **அ** | | **ஆ** |
|---|---|---|---|
| 1. | தாத்தா | (   ) | பெரியம்மா |
| 2. | செல்வன் | (   ) | மகள் |
| 3. | பெரியப்பா | (   ) | பேத்தி |
| 4. | தமையன் | (   ) | மாதா |
| 5. | திருடன் | (   ) | புத்திரி |
| 6. | பாடகன் | (   ) | பாட்டி |
| 7. | பிதா | (   ) | செல்வி |
| 8. | புத்திரன் | (   ) | பாடகி |
| 9. | பேரன் | (   ) | திருடி |
| 10. | மகன் | (   ) | தமக்கை |

ஆ. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1. களிறு
2. நாகு
3. சேவல்
4. மந்தி
5. எருது
6. பாடகன்
7. மகள்
8. பெரியப்பா
9. அரசன்
10. மாதா

## செயற்பாடு

நீங்கள் பயன்படுத்தும் சொற்கள் சிலவற்றை எழுதி அவற்றுக்குரிய எதிர்ப்பாற் சொற்களை எழுது ( ) ங்கள்

# 7 தமிழ்த் தட்டச்சின் தந்தை

கா. மாணிக்கவாசகரால் 1959இல் இக்கட்டுரை எழுதப்பட்டது. சரஸ்வதி களஞ்சியம் என்ற இதழிலிருந்து எடுக்கப்பட்ட இக்கட்டுரை, முத்தையா என்பவர் தமிழில் தட்டச்சு விசைப்பலகையை உருவாக்கிய பங்களிப்பினை எடுத்துக் கூறுகிறது.



ஆங்கிலேயர் அரசியல் நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கும் ஆங்கில மொழி உலக மொழியானதற்கும் ஆங்கிலத் தட்டச்சு (டைப்ரைட்டர்) ஒரு முக்கியக் காரணமாகும். 1875 ஆம் ஆண்டில் 'ரெமிங்டன்' தட்டச்சு வியாபாரத்திற்குக் கொண்டுவரப்பட்ட பொழுது, வர்த்தக ஸ்தாபனங்களே பெரும்பாலும் அவைகளை வாங்கி உபயோகித்தன. பின்னர் அரசினரும் நிறுவனங்களும் தனிமனிதர்களும் தட்டச்சை விரும்பி வாங்கினார்கள். நாளடைவில் ஊற்றுப் பேனாவின் உபயோகம் குறைந்து தமது எண்ணங்களைக் கைவிரல்களாலேயே பொறிக்கத் தொடங்கி விட்டனர். இன்று ஆங்கில எழுத்துத் துறையிலுள்ளவர்கள் தட்டச்சிலேயே தங்கள் கருத்துக்களைப் படைக்கின்றனர்.

எழுதும்பொழுது, எண்ணத்துடன் எழுதுகோல் விரைந்து செல்வதில்லை, மிகவிரைவாக எழுதுபவர்களால் கூட வினாடியொன்றிற்கு இருபது சொற்களே அழகாக எழுதமுடிகிறது. ஆனால் அச்சடிக்கும் பொழுது சராசரி 40 முதல் 60 சொற்கள் வரை பொறித்து விடலாம். சிந்தையின் வேகத்துடன் விரைந்து சென்று எண்ணத்தில் உதிப்பதை எழுத்தில் பொறிக்கும் திறமை தட்டச்சு ஒன்றினாலேயே முடியும். ஆகவே எண்ணத்துக்கும் எழுத்துக்கும் இடைவெளி தோன்றுவதில்லை. இதனால் தட்டச்சு ஆங்கில எழுத்தாளர்களுக்கு ஓர் இன்றியமையாத சாதனமாகி விட்டது.

ஆங்கில நாட்டில் ஒரு பொறி கண்டுபிடிக்கப்பட்டால் நெடுங்காலத்திற்குப் பின்பே அது தமிழ் நாட்டிற்குப் பயன்படும். தமிழ்த் தட்டச்சைப் பொறுத்த வரையில் நாற்பது ஆண்டுகளுக்குள் அது தமிழில் அமைக்கப்பட்டதை ஒரு சிறந்த சாதனையாகக் கருத வேண்டும். ஆங்கிலத்தில் இருபத்தாறு எழுத்துக்களே உள்ளன. தமிழில் உயிர் எழுத்துக்கள் 12, மெய் எழுத்துக்கள் 18, உயிர்மெய் எழுத்துக்கள் 216, ஆய்த எழுத்து 1, ஆக மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன. இவைகளை விட சில முக்கிய வடமொழி எழுத்துக்களும், எண்களும், குறியீடுகளும் இருக்கின்றன. ஆகவே ஆங்கிலத்திலும் பார்க்க ஏறக்குறைய பத்து மடங்கு அதிகமான எழுத்துக்களையுடைய தமிழ் மொழியை ஓர் இயந்திரத்தில் அமைப்பது சுலபமான விடயமல்ல. ஆங்கில மோகம் வானளாவி நின்ற அந்நாளில் இதைச் செய்ய நினைத்தவர் சிலர். நினைத்தாலும் செய்து முடிக்கும் திறமையுடையோர் இலர். பெருந்தொகையில் செய்விக்க பண முதலீடு செய்யும் துணிவு வேண்டும். பணமுதலீடு செய்தாலும் விற்பனையாகுமா? இப்பிரச்சினைகளையெல்லாம் கருத்திற் கொண்டு துணிச்சலுடன் செயலில் இறங்கினார் ஒரு தமிழர்.

முத்தையா அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சுண்டிக்குளியில் 24.2.1886 இல் பிறந்தார். இவர் தந்தையார் இராமலிங்கம் பண்பாடுமிக்கவர், கல்வியாளர், பக்திமான், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சீடர்களில் ஒருவராகவிருந்தார். இராமலிங்கம் அவர்களுக்கு ஐந்து ஆண்களும் நான்கு பெண்களும் பிறந்தார்கள். இறுதி ஆண்பிள்ளைதான் முத்தையா அவர்கள். இவர் ஏழு வயதாயிருக்கும் பொழுதே இவரது தந்தையார் இறந்து விட்டார். பின்னர் தாயாரின் பராமரிப்பிலேயே வளர்ந்து கலாசாலையில் பயின்று வந்தார். சில வருடங்களில் தாயாரும் நோய்வாய்ப்பட்டார்கள். தான் இறக்குமுன் இவர் வெளிதேசம் சென்று விடவேண்டும் என்பது தாயாரின் கோரிக்கையாகவிருந்தது. அதற்கிணங்க, தாயார் மரணப் படுக்கையில் இருக்கும்பொழுது மலாயா நாட்டிற்குப் புறப்பட 1907ஆம் ஆண்டில் கப்பல் ஏறினார். தாயாரின் விருப்பம் பின்நாட்களில் தனது உறவினர் பலரை உயர் நிலைக்குக் கொண்டு வரக் காரணமாயிருந்தது. சிங்கப்பூரை அடைந்ததும் தொடர்ந்து போர்னியோவுக்குப் போக எண்ணியபொழுது டானியல் போதகர் என்பவர், தான் அங்கேயே வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி ரெயில்வே இலாகாவில் வேலைக்கமர்த்தினார். சில நாட்களில்

இவ்வேலையை விட்டு ஐல்ஸ்பெரி அன் கார்லன்ட் என்ற பிரபல வர்த்தக ஸ்தாபனத்தில் வேலையேற்றார். இரண்டாண்டுகளுக்குப் பின் அதன் பிரதம குமாஸ்தாவாக அங்கே பதவி உயர்த்தப்பட்டு 1930 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். இக்காலத்தில் அவர் உயர்தர கணக்குப் பதிவு, பொருளாதாரம், தட்டச்சடித்தல், சுருக்கெழுத்து ஆகியவைகளைக் கற்றார். 1913 இல் நடைபெற்ற 'ஸ்லோன் டுப்ளோயன்' சுருக்கெழுத்துப் போட்டியில் சர்வதேச வெள்ளிப் பதக்கம் இவருக்குக் கிட்டியது. அத்துடன் ஆங்கில தமிழ் இலக்கியங்கள், கைத்தொழில் நூல்கள், சமய நூல்களையும் கற்றார். இவ்வளவு திறமை வாய்ந்தவர் அரசாங்க உத்தியோகத்தை நாடியதேயில்லை. சுய முயற்சியில் அதிக நம்பிக்கையுடையவர். அஞ்சா நெஞ்சம் படைத்தவர், தனக்குச் சரியென்று பட்டதை துணிவுடன் எடுத்துச் சொல்வார்.

இவர் கடமையாற்றிய ஸ்தாபனத்திலிருந்த ஒழுங்கும் நிர்வாகத் திறைமையும் இவரைக் கவர்ந்தன. அவர்களைப்போல் தமிழனும் ஏன் இருக்க முடியாது எனச் சிந்தித்தார். தமிழில் ஒரு தட்டச்சு இல்லாக் குறையையும் உணர்ந்தார். ஆகவே அன்றிருந்து இம்முயற்சியில் ஈடுபட்டார். தனிமையாக ஒரு அறையிலிருந்து 247 எழுத்தின் வடிவத்தை ஒரு புறமும் தட்டச்சின் 46 விசைகளை மறுபக்கத்திலும் வைத்து எழுத்துக்களை எவ்வாறு விசைகளில் அமைப்பது எனச் சிந்தித்தார். கிடைத்த நேரத்தையெல்லாம் இவ்வாராய்ச்சிக்கே செலவிட்டார். தனது ஆங்கிலப் பொறியியல் நண்பர்களிடம் ஆலோசனை கேட்டார். இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள தமிழன்பர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய அபிப்பிராயங்களையும் சேகரித்தார். எத்துணை முயற்சி செய்தும் எழுத்துக்களை 72 க்கு மேல் குறைக்க முடியவில்லை. அது வரையில் கிடைத்த வெற்றியைக் கொண்டு தட்டச்சை நிறைவேற்றும் பணியை மேற்கொண்டார்.

முத்தையா தான் கண்டு பிடித்த தட்டச்சை 'ஸ்டான்டர்ட்' பெரிய தட்டச்சு என அழைத்தார். அது சிறப்பான பல அம்சங்களையுடையது. தமிழில் 247 எழுத்துக்கள் இருப்பதால் அவைகள் எல்லாவற்றையும் நான்கு நிரைகளிலுள்ள 46 விசைகளில் அமைக்க முடியாது. இதனால் பலவெழுத்துக்களுக்குப் பொதுவாகவுள்ள சில குறியீடுகளைத் தனித்தனி விசைகளில் அமைத்து அவைகளைத் தேவையான எழுத்துக்களுடன்

சேர்த்து அச்சடிக்கக்கூடியதாக விசைப்பலகையை அமைக்க வேண்டும். ஆகவே இரண்டு விசைகளை அழுத்திய பின்னரே அச்சை நகரச் செய்ய வேண்டும். பல பரிசோதனைகள் செய்து கடைசியாக நகரா விசையைக் கண்டு பிடித்தார். அதாவது 'தி' என்ற எழுத்திலுள்ள விசிறியை அடிக்கும் பொழுது அச்சு நகராது. எஞ்சியுள்ள த -வை அடித்த பின்தான் அச்சுநகரும். மெய் எழுத்துக்களும் அகர உயிர் சேராத உயிர்மெய் எழுத்துக்களும் இவ்வாறே அச்சிடப்படுகின்றன. இவர் உண்டாக்கிய நகரா விசையையே இன்றும் தட்டச்சு உற்பத்தியாளர் உபயோகிக்கின்றனர்.

இப்பொழுதிருக்கும் சில தட்டச்சுகளில் இரு கைவிரல் களுக்கும் சமமாக வேலை கொடுக்கப்படுவதில்லை. இக்குறை இவரது தட்டச்சில் தவிர்க்கப்பட்டிருக்கின்றது. தமிழெழுத்துக்களில் ய, ள, க, ப, ர, ம, ட, ந, ச, வ, ல, ர, ன, டி ஆகிய எழுத்துக்கள் அடிக்கடி உபயோகிக்கப் படுகின்றனவென்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். ஆகவே அரசினரின் விசைப்பலகையின் கீழ் இடத்தில் இவை அமைக்கப் பட்டிருக்கின்றன. முத்தையா அவர்களது விசைப் பலகையமைப்பு இதையொட்டியே இருக்கிறதென்றால் அவர்கள் எத்துணை ஆராய்ச்சியின் பின் இதை உருவாக்கியிருக்க வேண்டுமென நாம் காணக்கூடியதாக விருக்கிறது.

முதலாவது உலக யுத்தம் முடிந்த பின்னர், தான் கண்டுபிடித்த விசைப்பலகையை ஜெர்மனியிலுள்ள 'சைடல் அன் நௌமான்' என்ற நிறுவனத்திடம் ஒப்புவித்து அச்சுகளை உருவாக்கினார். பெருந்தொகையில் அதனை இறக்குமதி செய்து விற்றும் வந்தார். இத்துடன் அவரது முயற்சி முற்றுப் பெறவில்லை. தான் அமைத்த விசைப்பலகையில் சில குறைகள் இருக்கக் கண்டார். அவைகளை நீக்கி 'பிஜோ' 'ஐடியல்' ஆகிய 'போர்ட்டபிள்' தட்டச்சுகளை உருவாக்கினார். இவைகளைப் பின்பற்றி 'ஆர்.ஸி.', 'எரிகா', 'யுரேனியா', 'ஹல்டா' முதலிய தட்டச்சுக்கள் வெளியாயின.

தமிழ்த் தட்டச்சின் தந்தை திருவாளர் ஆர். முத்தையா அவர்களின் சேவைகளுக்கு தமிழுலகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

***கா. மாணிக்கவாசகர்.***

### அரும்பதங்கள்

றெயில்வே இலாகா - புகையிரதத் திணைக்களம்
குமாஸ்தா - எழுதுவினைஞர்
ஸ்தாபனம் - நிறுவனம்

### கிரகித்தல் பயிற்சி

1. ஆரம்பத்தில் தட்டச்சு எந்த மொழியில் உருவாக்கப்பட்டது?
2. ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலரின் சீடர்களில் ஒருவராக இருந்தவர் யார்?
3. முத்தையா வர்த்தக ஸ்தாபனத்தில் பணி புரிந்த சந்தர்ப்பத்தில் கற்றவைகள் எவை?
4. முத்தையா அவர்கள் கண்டு பிடித்த தட்டச்சை ஆரம்பத்தில் எவ்வாறு அழைத்தார்கள்?
5. அரசினரின் விசைப்பலகையின் கீழ் இடத்தில் வைக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் எவை?
6. முத்தையா உருவாக்கிய தட்டச்சினைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட தட்டச்சுக்கள் எவை?
7. முத்தையாவின் முயற்சி பற்றிய உமது கருத்துக்களை முன்வைக்குக.

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. தமிழ்த் தட்டச்சு உருவான விதத்தைச் சுருக்கமாகக் கூறுக.
2. கட்டுரையில் வெளிப்படுத்தப்படும் முக்கிய கருத்துக்களைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
3. தட்டச்சு எனும் தலைப்பில் ஐந்து வாக்கியங்களை எழுதுக.
4. தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிகளை பொருத்தமான சொற்கள் கொண்டு நிரப்பி எழுதுக:

1875 ஆம் ஆண்டில் ஸ்தாபனங்கள்.................................. வாங்கி உபயோகித்தன. பின்னர் அரசினரும், நிறுவனங்களும், தனி மனிதர்களும் தட்டச்சை விரும்பி..................... நாளடைவில் ............................... உபயோகம் குறைந்து தமது எண்ணங்களைக் ..................................... பொறிக்கத் தொடங்கினார்.

# 8 செந்தமிழ் போற்றிய சேரன்

பெருஞ்சேரல் இரும்பொறை எனும் சேர மன்னன் கி .பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ் நாட்டின் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். ஏறத்தாழ 17 ஆண்டுகள் இவனது ஆட்சி நிலைத்திருந்தது. புலவர் மோசிகீரனார் ஒருநாள் களைப்பு மிகுதியால் முரசு கட்டிலில் ஏறித் துயில் கொண்டார் . அவரது துயில் கலையும்வரை சேர மன்னன் கவரி வீசினான்.

பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன் வஞ்சி மாநகரிலிருந்து அரசாண்டு வந்த சேரமன்னன் வீரத்திலும் கொடையிலும் நியாயத்திலும் சிறந்தவன்; மும்முரசங்களை உடையவன்; பேருபகாரி; புலவர்களைப் போற்றுபவன்.

இவன் திருவுடையாரைவிட அறிவுடையாரையே பெரிதும் மதித்து வந்தான்; அவர்களிடம் அளவற்ற அன்பு காட்டி ஆதரித்து வந்தான். ஆதலால் பழுத்த மரங்களை நாடிச்செல்லும் பறவைகளைப் போலப் பல புலவர்கள் இவனை நாடி வந்தனர்; பரிசு பெற்று மகிழ்ந்தனர்.



இவன் சபைக்குப் பாண்டி நாட்டுப் புலவர் ஒருவர் வந்திருந்தார். அவர் பெயர் மோசிகீரனார். இரும்பொறை மன்னன் புலவரை அன்புடன் வரவேற்று உபசரித்தான். அரசனுடைய நல்லியல்புகளை அறிந்து மகிழ்ந்த புலவர் 'அரசே, உமது அன்பைக் கண்டு அகமகிழ்கிறேன். உமது அன்பு நிறைந்த அரசாட்சியில் குடிகளுக்கு ஒரு குறைவும் இராது என்பதில் ஐயமில்லை. குடிகளுக்கு நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று. அவற்றை அவர்கள் வருத்தமின்றிப் பெற்று அனுபவிக்குமாறு செங்கோல் செலுத்துகின்ற அரசனே உயிராவான்' என்பன போன்ற பல அறிவுரைகளைக் கூறினார்.

அரசன், புலவருடைய பொன்னுரைகளைக் கேட்டு மகிழ்ந்து, அவருக்கு வேண்டிய பொருள்களை விருப்புடன் கொடுத்தான் சிறந்த கல்விமான் ஆகையால், புலவரின் நுண்ணறிவைக் கண்டு வியந்து அவருடன் நட்புரிமை கொண்டான். ஆதலால், புலவர் அடிக்கடி இவனது அவைக்களத்திற்கு வந்து அரிய பல செய்யுட்களைப் பாடி அறிவுரைகளைத் தெரிவித்து வந்தார்.

ஒரு நாள் மோசிகீரனார் நெடுந்தூரத்திலிருந்து சேரனைக் காணும் பொருட்டு அரண்மனைக்கு வந்தார். அப்பொழுது அவைக்களத்தில் ஒருவரும் இல்லை. ஆகையால், அவர் அரசன் வரும்வரையில் காத்திருக்க வேண்டியவர் ஆனார். புலவர் பயணத்தினால் களைத்துப்போயிருந்தார். சுற்றுமுற்றும் பார்த்தார்; அங்கோரிடத்தில் ஓர் அழகிய ஆசனம் இருப்பதைக் கண்டார். உடனே அதில் ஏறி அமர்ந்து சாய்ந்து படுத்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அயர்ந்து உறங்கிவிட்டார். அவர் அந்த ஆசனத்தில் அமரலாமா, கூடாதா என்றுகூட எண்ணவில்லை. அவர் உடம்பு அவ்வளவு களைத்துப்போயிருந்தது.

புலவர் உறங்கிய ஆசனம், அரசனுடைய வீர முரசம் வைக்கப்படும் முரசு கட்டில். வீர முரசத்தைப் பற்றியும், முரசு கட்டிலைப் பற்றியும் இங்கு அறிய வேண்டுவது அவசியமாகும்.

வீரமுரசம், மும்முரசங்களுள் ஒன்று. அது போர்க்காலங்களில் போரை அறிவிப்பதற்கு முழங்கும். வெற்றியைத் தெரிவிப்பதற்கும் வீறுடன் ஒலிக்கும். பலியிடும் காலங்களிலும் பார் கிடுகிடுக்க வைக்கும்.

அம் முரசத்தின் அமைப்பும் அரசர்கள் அதைப் போற்றிய முறையும், அவர்கள் அதனிடம் கொண்டிருந்த பெருமதிப்பும் வியக்கத்தக்கவை.

வீரமுரசத்தின் சுற்றிலுள்ள விளிம்பு கருமரத்தால் செய்யப்பட்டு மிகவும் உறுதியுடையதாயிருக்கும். அதன் மேல் போர்த்தப்பட்டிருப்பது, வீரம் பொருந்திய ஓர் எருதின் தோலாகும். அந்த எருது ஒரு புலியோடு போர் செய்து அதனைக் தன் கூர்மையான கொம்புகளால் குத்திக் கிழித்துக் கொன்றிருக்கும். அப்படிப்பட்ட வலி மிகுந்த காளை இறந்த பிறகு அதன் தோலை உரித்து மயிர் சீவாமல் முரசின் மேல் போர்த்துத் தக்க வார்களால் இழுத்து இறுகக் கட்டியிருப்பார்கள்.

அவ்வீரமுரசத்தை அரசர் தம் உயிர்போன்ற அருமையான பொருளாக எண்ணினர். தமது வெற்றித் தெய்வமாகவும் போற்றி வந்தனர். அதனால் வீர முரசினை அடிக்கடி நீர்த்துறைக்குக் கொண்டு போய், மிகுந்த மரியாதையுடன் நீராட்டுவர். பின்னர், மயில் தோகையும் உழிஞைத் தளிரும் சேர்த்துக் கட்டிய மாலையைச் சூட்டுவர். வீரமொழிகளைச் சொல்லித் துதித்துப் பூசை செய்வர். பிறகு அதனை, அரண்மனைக்குக் கொண்டுபோய் வெண்மையான மெத்தை அமைந்து விளங்கும் முரசு கட்டிலில் வைத்து வணங்கப்படும்.

முரசு கட்டில், அரசன் வீற்றிருக்கும் சிங்காதனம் போன்ற பெருமையுடையது. ஆதலால், ஓர் அரசன் பகையரசனை வென்ற பிறகு, தோற்ற அரசனது, முரசு கட்டிலின் மேல் எவரேனும் ஒருவரை உட்காரச் செய்து அவ்வரசனை அவமானப்படுத்துவது பண்டைய வழக்கமாயிருந்தது. இதனால், முரசு கட்டிலில் எவரேனும் ஏறினால், அது அரசனுக்குப் பெரிய அவமானம் என்று கருதப்பட்டு வந்த செய்தி நன்கு விளங்கும். ஆகையால் யாரேனும் முரசு கட்டிலில் ஏறினால், ஏறியவரை உடனே வாளால் வெட்டி வீழ்த்திவிடுவர்.

புலவர் மோசிகீரனார் வந்தபொழுது, முரசும் வழக்கம் போல நீர்த் துறைக்குக் கொண்டு போகப்பட்டிருந்தது. அதனால் முரசு கட்டில் முரசமின்றி இருந்தது. அதை அறியாத புலவர், ஏதோ ஆசனம் என்று நினைத்து, வந்த களைப்பினால் ஆராய்ந்து பாராமல், அதில் அமர்ந்து உறங்கிவிட்டார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஆற்றிலிருந்து மிக்க மரியாதையுடன் முரசம் கொண்டு வரப்பட்டது. அதனுடன் அரசனும் வந்தான். முரசுக் கட்டிலை நோக்கி முன்னால் சென்ற சேரன், அதில் யாரோ ஒருவர் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர் யார் என்பதைப்பற்றி அறிய அவன் எண்ணவில்லை, கண்களில் கோபக் கனல் வீச, வாளை உருவினான். விரைந்து கட்டிலின் அருகிற் சென்றான். பின்னால் வந்த யாவரும் திகைத்து நின்றுவிட்டனர். மறுநொடியில் புலவரது உடல் இரு துண்டுகளாக விழுந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிகழவில்லை. அதற்கு மாறாக வேறோர் அற்புத நிகழ்ச்சியைக் கண்டு எல்லாரும் திகைப்பு நீங்கி வியப்பில் மூழ்கினர்.

இரும்பொறை மன்னன், முரசு கட்டிலின் அருகிற் சென்றதும் சிறிது தயங்கிப் படுத்திருப்பவரின் முகத்தைப் பார்த்தான். பார்த்தவுடன் அவனுடைய கோபம் எங்கோ பறந்து போய்விட்டது. பொங்கிய கோபத்திற்குப் பதிலாக இரக்கம் சுரந்தெழுந்தது. நெடுந்தூரத்திலிருந்து வந்த களைப்பினால் புலவர் அயர்ந்து உறங்குகிறார் என்பதை அரசன் உடனே உணர்ந்துகொண்டான். அவர் தூக்கத்திற்கு இடையூறு உண்டாக்கலாகாது என்று அன்புடன் நினைத்தான். புலவர் நன்றாய்த் தூங்கிக் களைப்பு நீங்க வேண்டும் என்னும் ஆசை கொண்டான். ஆதலால், வாளை உறையில் போட்டு விட்டு, சாமரையைக் கையிலெடுத்துப் புலவர் அருகில் நின்று அவர் உடம்பு குளிர வீசிக்கொண்டிருந்தான்.

நீண்ட நேரம் தம்மை மறந்து தூங்கிக் கொண்டிருந்த மோசி கீரனார், மெல்லக் கண் விழித்தார். அருகில் நிற்கும் அரசனையும் அவன் செயலையும் கண்டார். திடுக்கிட்டு எழுந்திருந்தார். சிறிது தூரத்தில் வீர முரசமும் அதனைச் சுற்றிலும் அரசனுடைய பரிவாரங்களும் இருப்பதைப் பார்த்தார். அவர் மனத்தில் ஏதோ பெருந்தவறு செய்து விட்டது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. பரபரப்புடன் ஆசனத்தை விட்டு இறங்கி நின்றார்.

தூக்கத்தினால் களைப்புநீங்கி தெளிந்திருந்த அவரது அறிவில். அப்பொழுதுதான், தாம் உறங்கியது முரசு கட்டிலில் என்பதும், அதில் ஏறியிருந்தது அரசனுக்குச் செய்த பெருந் தவறாகும் என்பதும் விளக்கமாய்த் தோன்றின. அத்தவறு செய்தார் அடையும் தண்டனையையும் அவர்

நன்கறிவார். ஆகையால், அரசன் தம்மைக் கொல்லாமல் விட்டதுமன்றித் தமது தூக்கத்திற்கு உதவியாகச் சாமரையால் வீசியதையும் நினைக்க நினைக்க அவர் மனம் அன்பால் கரைந்துவிட்டது. அவர் தாம் அவசரத்தில் அறிவிழந்து செய்துவிட்ட செயலுக்கு மிக வருந்தினார். அரசனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று அவர் மனம் துடித்தது. ஆனால் அவர் அரசனுடன் தாம் பழகும் நட்புரிமைக்கு அது ஏற்றதன்று எனப் பேசாதிருந்தார். மனம் குழம்பிய அந்நிலைமையில் என்ன பேசுவது என்பது அவருக்குத் தோன்றவில்லை. அரசன், புலவரது நிலைமையை உணர்ந்தான். அருகிற் போய் அவரைத் தழுவிக் கொண்டு 'அறிஞரே, நீண்ட தூரத்திலிருந்து வந்திருக்கிறீர் போலும் களைப்பு மிகுதியாயிருந்தால் இன்னும் சற்று நேரம் கண்ணுறங்கலாமே, ஏன் எழுந்துவிட்டீர்?' என்று ஆதரவுடன் வினவினான்.

அரசன் அன்புரைகளைக் கேட்டு அகங்களித்த புலவர், 'அரசரே உமது பேரன்பை எம்மொழிகளால் எடுத்துரைப்பேன்! யான் உம்முடைய அன்பு வெள்ளத்தில் பல நாட்கள் நீந்தி மகிழ்ந்தது உண்டு. ஆனால் இன்று முழுகிக் களிக்கிறேன். இதனை முரசு கட்டில் என்று அறியாது இதன் மீது ஏறி உறங்கிவிட்டேன். இச்செயல் உம்மைப் புண்படுத்தக்கூடியது என்பதை உணர்வேன். என் செயலுக்கு நீர் சினங்கொண்டு என்னை இரு கூறாக்கியிருக்கலாம். ஆயினும், நீர் அவ்வாறு செய்யவில்லை. மேலும் நீர் சாமரை கொண்டு வீசினீர். இதை நான் எவ்வாறு புகழ்வேன்? நட்பின் சுவையுணர்ந்த நல்லார் உம்மைப்போல வேறொருவர் உலகில் உண்டோ? நீர் தமிழிற் கொண்டிருக்கும் பேரன்பு அன்றோ உம்மை இவ்வாறு கோபத்தை மறக்கச் செய்து சாமரை வீசுமாறு தூண்டியது. நீர் செய்த செயல் செந்தமிழுக்குச் செய்த சிறப்பேயாகும். உலகம் முழுவதும் பரவுவதற்கு உரிய புகழ் பெற்ற நீர் தேவருலகத்திலும் சிறப்புற வாழ்வீர்' என்று புகழ்ந்து வாழ்த்தினார்.

இரும்பொறை வேந்தனது இனிய செயல் என்னே! தமிழினிடத்துள்ள பெரும்பற்று, புலவரது பிழையைப் பொறுத்துக் கொள்ளச் செய்தது; அதனின் மேலாக எளியவனைப்போலச் சாமரையைக் கையில் தாங்கி வீசச் செய்தது. இரும்பொறை புகழ் நின்று நிலவுக.

**வித்துவான் த.கி. குப்புசாமி ஆழ்வார்.**

**அரும்பதங்கள்**

மும்முரசம் - மூன்று முரசு (நியாய முரசு,வீர முரசு,தியாக முரசு)
திரு - செல்வம்
அவை - சபை
பார் - பூமி
சிங்காதனம் - அரியணை , தவிசு
பரிவாரங்கள் - சுற்றத்தார்கள்
சினம் - கோபம்
களி - சந்தோசம்
சாமரை - கவரி/ விசிறி

**கிரகித்தல் பயிற்சி**

1. இரும்பொறை சேர மன்னன் அரசாண்ட நகரம் எது?
2. சேர மன்னனின் சபைக்கு வந்த புலவர் யார்?
3. அரசனுக்கும் புலவனுக்குமிடையிலான நட்பு எத்தகையது?
4. இக்கதையின் பிரதான கருத்து யாது?
5. "நீர் தமிழில் கொண்டிருக்கும் பேரன்பு அன்றோ உம்மை இவ்வாறு கோபத்தை மறக்கச் செய்தது...." இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
6. இரும்பொறை மன்னன் உருவிய வாளை உறையில் இட்டமைக்கான காரணம் என்ன?
7. இக்கதை மூலம் நாம் பெறும் படிப்பினைகள் இரண்டு தருக.
8. இக்கதையில் வரும் சேர மன்னனின் குணச் சிறப்புகள் நான்கு கூறுக.

## ஒரு பொருள் பல சொல்

**வயல் - புலம், கழனி, கமம், பழனம்**

இங்கு வயல் என்ற ஒரு பொருளுக்கு மேற்குறித்த பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றையே ஒரு பொருள் குறித்த பல சொற்கள் எனலாம். ஆகவே பல சொற்கள் ஒரே பொருளைத் தருமாயின் அத்தகைய சொற்கள் ‘ஒரு பொருள் பல சொல்’ என்பதனுள் உள்ளடக்கப்படும்.

## ஒரு சொல் பல பொருள்

**வேதம், மந்திரம், கறை, மற, ஒளித்தல் - மறை**

இங்கு பல பொருட்களுக்கு ஒரு சொல் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது மறை என்ற சொல் பல பொருள்களைத் தரக் கூடியதாக அமைந்துள்ளது. அவ்வாறு ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருமாயின் அது ‘ஒரு சொல் பல பொருள்’ என்பதனுள் உள்ளடக்கப்படும்.

**பயிற்சி**

அ. பின்வரும் ஒரு பொருளுக்குப் பல சொற்களை எழுதுக:

★ நட்பு ★ மேகம் ★ சத்தம் ★ ஆசிரியன் ★ அரசன்

ஆ. பின்வரும் பல பொருளுக்கு ஒரு சொல் எழுதுக:

1. கடல், சக்கரம், மோதிரம்
2. கழுத்து, ஆபத்து, துண்டு, பூமியின் பெரும் பிரிவு
3. மாதம், சந்திரன், ஒருநாளின் பெயர்
4. கணவன், இறைவன், வீடு
5. உதடு, பூவிதழ், புத்தகத்தின் தாள்

**செயற்பாடு**

பாடப்பகுதியில் வரும் ஒரு பொருளுக்கு பல சொற்களையும், பல பொருளுக்கு ஒரு சொல்லையும் பட்டியற்படுத்துக.

# 9 சிலேடை

சிலேடை என்பது சொல் அணிகளில் ஒன்று. ஒரு சொல் அல்லது சொற்றொடர் இரு பொருள் தரும் வகையில் பயன்படுத்தப்படுவதைக் குறிக்கும். சிலேடை செவிக்கு இனிமையும், கருத்துக்குச் சுவையும் தரக் கூடியதாக அமைகிறது.

அம்மா வாணை என்கிறாய்
அம்மா வருதல் ஒரு பொருள்
அம்மா வாணை சத்தியம்
அம்மா இப்படி இருபொருள்

புத்தியி லாதவன் என்றுநீ
புன் சிரிப்புக் கொள்கிறாய்
புத்திஇல் லாதவன் என்பதனால்
புத்தியில் ஆதவன் ஆகின்றாய்

பழங்கள் என்று சொன்னதும்
பாலர் உள்ளம் சிரிக்கிறார்
பழங்கள் பருகி நிற்பவர்
பாவம் முகத்தைச் சுழிக்கிறார்.

படுக்க வா எனக் கூறலும்
படுக்க ஓடி வருகிறாய்
படுக்க வா என முடிவிலே
பர பரப்பாய்க் கேட்கிறாய்.

தா வரம் என்றுநீ சாமியைத்
தலை வணங்கிக் கேட்கிறாய்
தாவரம் இந்த உலகினைத்
தழைக்க வைத்துத் தழைக்குது.

### அரும்பதங்கள்

| | |
|---|---|
| வாணை | - வாருங்கள் |
| ஆணை | - சத்தியம், கட்டளை |
| ஆதவன் | - சூரியன் |
| வரம் | - அருள் |
| தழைக்க | - செழிக்க |

### கிரகித்தல் பயிற்சி

1. ''புத்தியில்லாதவன்'' என்பது தரும் இரு பொருள்களையும் எழுதுக.
2. குழந்தைகளது உள்ளம் எப்போது சிரிக்கிறது?
3. கவிதையில் கூறப்படும் தாவரத்தின் பயன்பாட்டினைக் குறிப்பிடுக.
4. இக்கவிதை மூலம் ஆசிரியர் எதனை வெளிப்படுத்த முனைகின்றார்?
5. உமக்குப் பிடித்த வரிகளைக் குறிப்பிட்டுக் காரணம் தருக.

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

பின்வரும் சொற்களை வைத்து இருபொருள் தரும் வகையில் வாக்கியம் அமைக்குக.

1. அம்மாவாணை
   அம்மா வாணை
2. புத்தியில்லாதவன்
   புத்தியில் ஆதவன்
3. படுக்கவா
   படுக்க வா
4. தாவரம்
   தா வரம்

### குழுச்செயற்பாடு

குழுக்களாக இணைந்து இருபொருள் தரும் வகையில் வரும் சொற்களைப் பட்டியற்படுத்துக.

# 10 பென்சிலின் கதை

பைன் மரத்திலிருந்து பென்சிலுக்கான மரக்குற்றிகள் பெறப் படுகின்றன. மேலும் பளபளக்கும் காரியம், களிமண், பசை, கொழுப்பு, சாயப்பொருள், அலுமினியம் எனப் பல பொருட்களும் தேவைப் படுகின்றன. பென்சிலின் மேற்பகுதியில் BH என்ற அடையாளங்கள் இடப்படுவதன் மூலம் அவற்றின் தரங்களை விளங்கிக் கொள்ளலாம்.

நீ சிறு பையனாக இருந்தபொழுது உன் அண்ணனின் புத்தகப் பையைத் துழாவிப் பார்த்திருப்பாய். அவனுடைய பாடப் புத்தகத்தை வெளியில் எடுத்து படம் பார்த்திருப்பாய். ஆனால் இவற்றை எல்லாம் விட அந்தப் பையில் உள்ள சன்னல் இல்லாத மர வீடு உனக்கு மிகவும் பிடித்திருக்கும். அதன் முன்வாசல் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு இல்லை. சுவரில் இருப்பதற்குப் பதிலாக அந்த வீட்டிற்குக் கூரையில் கதவு உள்ளது. அக்கதவைத் திறப்பதற்குக் கடினமாக இருக்கும்.



அந்த வீட்டில் இரண்டு அறைகள் உள்ளன. ஒன்று நீளமானது, குறுகலானது; மற்றொன்று சிறியது, அகலமானது. நீண்ட அறையில் இரு நண்பர்கள் வசித்தார்கள். அவர்கள் பென்சிலும், பளபளப்பான முனையுள்ள நீலப் பேனாவும் ஆவர். சிறிய அறையில் பென்சிலின் நண்பன் இறப்பர் வசித்து வந்தான். அவனுக்குச் 'சுத்தம்' என்றால் பிடிக்கும். அதற்காக அவன் எப்பொழுதுமே அசுத்தமாக இருப்பான். பென்சில் ஏதாவது தவறு செய்தால், அதன் நண்பன் இறப்பர் உடனே சென்று தவறைத் திருத்துவான். இதற்காக இறப்பர் தன்னை அசுத்தப்படுத்திக் கொள்ளவும் தயங்க மாட்டான்.

பைக்கட்டில் நோட்டுப் புத்தகங்களும் இருந்தன. அவற்றை நீ ஆர்வத்துடன் பார்த்தாய். பேனாவின் மூலம் நோட்டில் உன் அண்ணன் வரைந்துள்ள அழகிய கோடுகள், வட்டங்கள், வீச்சுக்கள் ஆகியவை உன் மனதைக் கவர்ந்தன.

இப்பொழுது நீ பள்ளிக்குச் செல்லும் பையன். உனக்கு என்று இப்பொழுது பைக்கட்டு, புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பென்சில் வைக்கும் பெட்டி, பென்சில், பேனா, இறப்பர் முதலியன இருக்கின்றன. வெள்ளைத் தாளில் பேனாவினால் எவ்வாறு எழுதுவது என்று தினந்தோறும் பள்ளிக் கூடத்தில் நீ கற்றுக் கொள்கிறாய். உனது பேனா எல்லா வேளைகளிலும் உன்னுடன் ஒத்துழைப்பதில்லை. அவ்வப்பொழுது அது போக்குவரத்து விதிகளை மீறி விடுகிறது. அவ்விதிகள் மிகவும் கண்டிப்பாக அனுசரிக்கப்பட வேண்டியவை. பாதையை விட்டு விலகிச் செல்வது என்பது அவ்விதிகளுக்கு எதிராகச் செல்வதாகும்.

சில சமயங்களில் இக்கோளாறுகளுக்கு உன்னுடைய தவறே காரணமாக உள்ளது. பேனாவில் அதிகமாக மை இருந்தால் மை தாளில் சொட்டி விடுகிறது. அப்பொழுது உன் மை ஒற்றும் தாள் விரைவாக ஓடிச்சென்று முதலுதவி செய்ய வேண்டும்.

பேனாவால் நீ எழுத ஆரம்பிக்கும்பொழுது உன்னுடைய நோட்டில் எத்தனையோ மைக்கறைகள் ஏற்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் ஒரு மைக்கறை கறுப்பு ஏரி போல் காணப்படுகின்றது. மற்றொரு பக்கத்தில் கருங்கடல்போல் காணப்படுகின்றது.

பென்சில் இதுபோன்ற கறைகளை ஏற்படுத்துவதில்லை. ஏனென்றால் அதில் மை பயன்படுத்துவதில்லை. இருப்பினும் அதைப் பயன்படுத்தும் முறைகளை நீ இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. நீ அதைச் சீவும்பொழுது அது நீளத்தில் கால்பகுதி குறைந்து விடுகிறது. நீ அதை நழுவ விடுகிறாய். அதன் கூரான முனை உடைந்து விடுகிறது. இப்பொழுது நீ மறுபடியும் அதைச் சீவவேண்டும்.

உன் அண்ணனிடம் ஒரு பென்சில் நீண்ட நாட்கள் இருக்கிறது. உன்னிடமோ ஒரே வாரத்தில் அது குட்டையான மரக்கட்டையாகி விடுகிறது. உன்னுடைய பேனா நிப்பினிடமும் நீ கொடூரமாக நடந்துகொள்கிறாய். அதைப் பார். அது தடம்புரண்டு கிடக்கிறது. அதனுடைய கூரான முனைகளில் ஒன்று உடைந்து குட்டையாக இருக்கிறது. அதை நீ தூர எறிந்துவிடலாம்.

ஆனால், உனக்குப் பென்சிலின் கதையைச் சொல்லுவதாக அல்லவா கூறி இருந்தோம்? பென்சில் பிறப்பதற்கு முன்னால் அது சைபீரியாவில் அழகிய பைன் மரமாக இருந்தது. அது சாதாரண பைன் அல்ல. சைபீரியா சிதார் என்ற தாவர இனத்தைச் சேர்ந்த பைன். நீ பைன் மரத்தின் கொட்டைகளை எப்பொழுதாவது தின்றிருக்கிறாயா? அவை ருசியாய் இருக்கும். அதனால்தான் அவற்றைக் கொட்டை என்று அழைப்பது தவறு. அவை பைன் மர விதைகள்; அம்மரத்தின் கூம்புக்கனிகளில் உள்ளன.

இந்த மரத்தின் கட்டை எடை குறைவானதாகவும் வலுவுள்ளதாகவும் இருக்கும். இம்மரக் கட்டைகளைக் கொண்டு அலுமாரிகள் செய்கிறார்கள். இம்மரத்தின் வாடை பூச்சிகளுக்குப் பிடிப்பதில்லை. எனவே இம்மரத்தால் செய்யப்பட்ட அலுமாரிகளைப் பூச்சிகள் அரிக்காது.

சைபீரியப் பைன் மரங்கள் பென்சில் செய்யப் பயன்படுகின்றன. அதற்காக அவை பெருமைப்பட வேண்டும். அம்மரத்தால் செய்த பென்சிலைக் கொண்டு கோடிக்கணக்கான பள்ளி மாணவர்கள் எழுதுகிறார்கள். இந்த மரத்திற்கு ஏன் இவ்வளவு மதிப்பு? ஏனென்றால் இதை வெட்டுவது எளிது; சமதளப்படுத்துவது எளிது. இம்மரத்தின் ஒரு சிறு துண்டைக் கத்தியால் வெட்டினால் வெட்டப்பட்ட இடம் ஒரே சீராகவும்

மெதுவாகவும் இருக்கும். ஆனால் மரக்கட்டை பென்சிலாகிவிடாது. மரக்கட்டைகொண்டு நீ எழுத முடியாது.

மரக்குச்சியைப் பென்சிலாக மாற்ற வேண்டுமானால் தாளின் மீது கோடு இழுக்கும் ஒருவிதப் பொருளை அதனுள் வைக்க வேண்டும். இதற்கு உதவக்கூடிய மிகச் சிறந்த பொருள் கரியம் (Graphite). இது நிலக்கரியைப் போல் கருமையானது. உண்மையில் நிலக்கரியோடு தொடர்புள்ளது. இதுவும் சைபீரியாவில் கிடைக்கிறது. குறுகிய மலைப்பள்ளங்கள், காடுகளின் வழியாக வேகமாக ஓடிவரும் நதிப்படுகைகளில் சுத்தமான காரீயம் கிடைக்கிறது. சைபீரியாவில் போத்தோக்கோல் என்ற பகுதி ஒன்று உள்ளது. இங்கு பூமிக்கு அடியில், நிலவறைப் பண்டசாலையில் போல, பளபளக்கும் மிருதுவான காரீயம் ஏராளமாக நிறைந்திருக்கிறது.



சைபீரியாவிலிருந்து புகையிரதங்கள் மாஸ்கோவிலுள்ள பென்சில் தொழிற் சாலைக்குப் பைன் மரக் கட்டைகள், காரீயம் ஆகியவற்றைக் கொண்டு செல்கின்றன. பென்சில் செய்யக் களிமண் தேவைப்படுகிறது. சாதாரண களிமண் அல்ல இது. மிகச்சிறந்த களிமண் இதற்குத் தேவைப்படுகிறது. இவ்விதக் களிமண் உக்ரேனில் கிடைக்கிறது. பென்சில் செய்யக் களிமண் எதற்கு என்று நீ கேட்கலாம்.

களிமண் பென்சில் காரீயத்தை வலுவுள்ளதாக்கப் பயன்படுகிறது. அதிகமாகக் களிமண் இருந்தால் பென்சில் கடினமாக இருக்கும். இதனால்தான் சில பென்சில்கள் நன்கு பசைப்பதில்லை. பென்சிலின் மீது B என்ற எழுத்து இருந்தால் அது மிருதுவான பென்சில் என்று அர்த்தம். அதன் மீது H என்ற எழுத்திருந்தால் அது கடினமான பென்சில் என்று அர்த்தம். பென்சிலைப் பார்த்து உடனடியாகவே அது எப்படிப்பட்டது என்று தீர்மானித்து விடலாம்.

மரம், காரீயம், களிமண் இவை மட்டும் பென்சில் செய்யப் போதுமா? இல்லை, இன்னும் சில பொருள்கள் தேவைப்படுகின்றன. பென்சில் செய்ய இவை தவிர பசை, கொழுப்பு ஆகியவை தேவைப்படுகின்றன. காரீயம் துகள்களை ஒன்றாக இணைப்பதற்குப் பசை தேவைப்படுகிறது. இந்தத் துகள்கள் எழுதும் பொழுது தாளின் மீது எளிதாகப் படிவதற்குக் கொழுப்பு தேவைப்படுகிறது. கொழுப்பு இல்லாமலிருந்தால் பென்சில் மங்கலாகவும் ஒழுங்கற்றும் எழுதும். இவை மட்டுமல்ல. சாயப்பொருள்களும், பளபளக்கும் உலோகமான அலுமினியமும் தேவைப்படுகின்றன. சாயப் பொருள் பென்சிலுக்கு வண்ணம் தீட்டப் பயன்படுகிறது. பென்சிலின் மீது எழுத்துக்களைப் பொறிக்க அலுமினியம் பயன்படுகிறது.

முடிவாக, இப்பொருள்களெல்லாம் தொழிற்சாலைக்கு அனுப்பப் படுகின்றன. அங்கு இவை எவ்வாறு அவற்றிற்குரிய இடத்தைப் பெறுகின்றன? மரத்துண்டுகள் எப்படி ஒரே அளவுள்ள, அறுகோண வடிவமுள்ள, சிறு சிறு குச்சிகளாக மாற்றப்படுகின்றன? இக்குச்சிக்கு நடுவில் காரீயம், களிமண், கொழுப்பு ஆகியவற்றின் கலவை எப்படி வைக்கப்படுகிறது?

மேலே கூறிய பொருள்களிலிருந்து பென்சிலைச் செய்ய வேண்டுமானால் மனிதர்கள் கடினமாக வேலை செய்யவேண்டும். ஏனென்றால் இப்பொருட்கள், கச்சாப் பொருள்களிலிருந்து மனிதர்களுடைய உழைப்பின் உதவி இல்லாமல் தாமாகவே உண்டாகி விடுவதில்லை. ஆனால், எப்படி அவர்கள் வேலை செய்கிறார்கள்? எல்லாமே கையால் செய்வதாக இருந்தால் நீண்டகாலம் பிடிக்கும்.

மேலும் போதுமான அளவு பென்சில்கள் கிடையா. மேலும் அந்தப் பென்சில்களின் விலை மிகவும் அதிகமாக இருக்கும்.

பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பார். கோடிக்கணக்கானவர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கோடிக்கணக்கான பென்சில்கள் தேவைப்படுகின்றன.

எனவே, இயந்திரத்தின் உதவி இல்லாமல் இந்த வேலையைச் செய்யவே முடியாது.

ஒரு பென்சில் தொழிற்சாலைக்கு நீ சென்றால் அங்கு பல அற்புதமான இயந்திரங்களைக் காணலாம். அவை மிக விரைவாக வேலை செய்பவை. இருபத்திநான்கு மணி நேரத்தில் முப்பது லட்சம் பென்சில்களை அவை உற்பத்தி செய்யும். இப்பென்சில்களை நீளத்தில் வரிசையாக வைத்தால் அவை லெனின் கிராதிலிருந்து மாஸ்கோ வரை இருக்கும்.

தொழிற்சாலையின் ஒரு கோடியில் பல பெரிய இயந்திரங்கள் காரீயத்தையும் களிமண்ணையும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்குகின்றன. பெட்டிகளில் அடுக்கப்படும் வேகத்தைக் கணக்கிடுவது கடினம். ஏனென்றால் இயந்திரங்கள் அவ்வளவு விரைவாக வேலை செய்கின்றன. களிமண்ணும் கரியமும் மரக்கட்டையும் உடனடியாகப் பென்சிலாக மாற்றப்படுவதில்லை. ஓர் இயந்திரத்திலிருந்து இன்னொரு இயந்திரத்திற்கு அவை மேற்கொள்ளும் பயணம் தொடர்ச்சியான மாறுதலைக் குறிக்கும். களிமண்ணும் கரியமும் முதலில் தூளாக மாற்றப்படுகின்றன. பிறகு அச்சுக்கள் என்று சொல்லப்பட்ட உருளைகளாக மாற்றப்படுகின்றன. பின்பு நீளமான கறுப்பு நிற இழைகளாக மாற்றப்படுகின்றன. இதெல்லாம் ஏன் என்று முதலில் விளங்குவதில்லை.

இதற்குக் காரணம் இதுதான். முதலில் களிமண்ணும் காரீயமும் நன்கு அரைக்கப்பட வேண்டும். பின்பு அதனுடன் பசை சேர்க்கப்படவேண்டும். இப்பொழுது அவை மறுபடியும் தூளாக்கப்படவேண்டும். இத்தூளிலிருந்து பென்சில் காரீயங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இத்துகள்களுக்கு இடையே காற்றுக் குமிழ்களும் அழுக்குப் பொருள்களும் இருக்கின்றன. இவை

நீக்கப்படாவிட்டால் பென்சில் கரியம் நொறுங்கும் தன்மை உள்ளதாக இருக்கும். பென்சிலை அடிக்கடி சீவவேண்டி இருக்கும். காற்றுக் குமிழிகளை நீக்க இத்தூளை அதிக அழுத்தத்திற்கு உட்படுத்துகிறார்கள். இதற்கு ஒருவகை இயந்திரம் பயன்படுகிறது. இந்த இயந்திரத்திலிருந்துதான் அச்சுக்கள் என்று சொல்லப்பட்ட தடிப்பான கரிய உருளைகள் வெளிவருகின்றன.

அழுக்குகளை நீக்க இந்த அச்சுக்கள் மிகவும் நேர்த்தியான சல்லடை ஒன்றின் மூலமாகச் செலுத்தப்படுகின்றன. அழுக்கு பின் தங்குகிறது. மிகவும் நுணுக்கமான கரியத் துகள்கள் சல்லடையிலிருந்து சிறிய இழைகளாக வெளிவருகின்றன. இவற்றிலிருந்து புதிய அச்சுக்கள் காற்றுக் குமிழ்களும் நீங்கியவையாக உள்ளன. இந்த அச்சுக்கள் தான் பென்சிலுக்குப் பயன்படும் கரியக்குச்சிகளாக மாற்றப்படுகின்றன.

ஆனால் தடிப்பான அச்சிலிருந்து எப்படி ஒரு மெல்லிய குச்சியைத் தயாரிக்க முடியும்? உண்மையில் இது மிகவும் எளிதானது. இந்த அச்சு ஒரு சிறு துளையின் வழியாகச் செலுத்தப்படுகிறது. இவ்வளவு பெரிய அச்சு எவ்வாறு அந்தச் சிறு கதவின் வழியாகச் செல்ல முடியும்? என்று கற்பனை செய்வதுகூடக் கடினம். ஆனால் அது உண்மையில் நடைபெறுகிறது. அவ்வாறு செல்லும்பொழுது அது மிகவும் மெல்லியதாக மாறுகிறது. இப்பொழுது மெல்லிய நீண்ட குச்சி ஒன்று கிடைக்கிறது. இந்த இழை சிறுசிறு துண்டுகளாக வெட்டப்படுகிறது. இவை மிருதுவானவை. ஆனால் இவற்றைப் பென்சிலில் பயன்படுத்த முடியாது. இவை வலுவுள்ளவையாக மாறவேண்டும். அதற்காக இவற்றை உலை ஒன்றில் வைத்துச் சுட்டு உலர்த்த வேண்டும். அதற்குப் பிறகு இத்துண்டுகள் நன்கு எழுதுவதற்காக அவற்றைக் கொழுப்பில் ஊறவைக்க வேண்டும்.

பென்சிலில் வைக்கப்பட்டிருக்கும் கரியக் குச்சியாக மாறுவதற்கு முன்னால் கரியம் எத்தனை மாறுதல்களுக்கு உட்படுகிறது என்பதைப் பார்.

இதற்கு இடையில் பைன் மரத்துண்டுகள் பல மாறுதலுக்கு உட்படுகின்றன. மிக விரைவாக இயங்கும் இயந்திரங்கள் சமஅளவுள்ள சிறு பலகைகளாக இவற்றை வெட்டுகின்றன. ஒவ்வொரு பலகையிலும் ஆறு சிறு தவாளிப்புகள் உள்ளன. இவற்றில் கரியக் குச்சிகள் வைக்கப்படுகின்றன.

முடிவாக சைபீரியக் கரியமும் உக்ரேனியக் களிமண்ணும், சைபீரிய பைன் மரங்களைச் சந்திக்கின்றன. கரியக் குச்சிகள் அந்தப் பலகையில் உள்ள தவாளிப்புகளில் நுழைந்து கொள்கின்றன. இதற்குப் பிறகு அதே அளவுள்ள தவாளிப்புகளோடு கூடிய பலகை ஒன்று முதல் பலகையை மூடுகிறது. இரு பலகைகளும் இப்பொழுது ஒட்டப்படுகின்றன. ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ள ஆறு பென்சில்கள் உருவாகிவிட்டன. அவை ஒவ்வொன்றும் தனியாக வெட்டப்படவேண்டும். ஓர் இயந்திரம் அறுகோண வடிவமுள்ள குச்சிகளாக அவற்றை வெட்டுகிறது. இப்பொழுது ஒவ்வொரு பென்சிலின் நடுவிலும் கரியம் உள்ளது.

கரடுமுரடான, வர்ணம் பூசப்படாத இந்தக் குச்சி பென்சில்தான். ஆனால் இது அழகிய பென்சில் அல்ல. இது கவர்ச்சிகரமாக இருக்க வேண்டுமானால் இதைப் பளபளப்பாக்கி வார்னிஷ் பூச வேறுசில இயந்திரங்களுக்கு அனுப்பவேண்டும். கடைசியில் இந்தப் பென்சில் ஓர் இயந்திரத்திற்கு அனுப்பப்படுகிறது. அங்கு இதில் காகிதம் போன்று மெல்லிய அலுமினிய ரேக்கு சுற்றப்படுகிறது. முடிவாக அதன் மீது முத்திரையும் அடையாளக் குறியும் பொறிக்கப்படுகின்றன.

பென்சிலின் மீது உள்ள பளபளக்கும் எழுத்துக்கள் தொழிற் சாலையின் பெயரைத் தெரிவிக்கின்றன. இப்பொழுது ஒரு பென்சில் தோன்றி விட்டது. அதற்குப் பெயரும் கொடுத்தாயிற்று. அந்தப் பென்சில் தொழிற்சாலையிலிருந்து புறப்படத் தயாராக இருக்கிறது.

பென்சிலின் மேல் பகுதியைப் பார். அதனுடைய இரு பாதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலையில் அது அடைந்த மாறுதல்களுக்கு இது ஒரு அடையாளம். ஒரு பென்சில் செய்வது எவ்வளவு கடினம் என்பது இப்பொழுது உனக்குத் தெரிகிறதல்லவா?

நீ எழுதுவதற்கும், வரைவதற்கும் எண்ணற்ற திறமைசாலிகள் அவர்களுடைய உழைப்பைத் தானமாகக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் பட்டியல் பின்வருமாறு: சைபீரியாவிலுள்ள மரம் வெட்டிகள், சுரங்கத் தொழிலாளர்கள், உக்ரேனில் களிமண் எடுப்பவர்கள், மாஸ்கோ பென்சில் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளிகள், ரயில் அலுவலர்கள், இயந்திரங்களை அமைத்தவர்கள், கொல்லர்கள்.

ஆனால் பென்சில் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதென்று நாங்கள் உனக்குச் சொல்லவே இல்லை. இப்பொழுது இருப்பதைப்போல் பழங்காலத்தில் பென்சில் கிடையாது, ஓவியர்கள் படம் வரைய வெள்ளிக் குச்சிகளைப் பயன்படுத்தினர். அது தாளில் நன்றாகப் பசைக்காது. மேலும் அதைப் பிடிப்பது கடினம். அதைத் தோல் உறையில் இட்டுப் பயன்படுத்தினர். குச்சியின் முனை மழுங்கிய உடன் அந்தத் தோல் கிழிக்கப்பட வேண்டி இருந்தது.

ஜேர்மனியில் இப்பொழுதும்கூட வழக்கத்தின் காரணமாக பென்சில் 'காரீயக்குச்சி' என்று அழைக்கப்படுகிறது. எவரோ ஒருவர் கரியத்தைப் பயன்படுத்தும் முறையைக் கண்டுபிடித்தார். ஆனால் தற்காலத்திய முறையை அது அடைவதற்கு நீண்டகாலம் பிடித்தது. கரியம் மட்டுமே பயன்படுத்தப்பட்டால் பென்சில் கரியம் மிக மிருதுவாக இருக்கும். முதலில் அது கந்தகத்துடன் கலக்கப்பட்டது. ஆனால் அது நொறுங்கும் தன்மை உள்ளதாக இருந்தது. களிமண்ணுடன் கலக்கும் முறையைக் கண்டுபிடித்த உடன் எல்லாமே நல்ல முறையில் நடந்தது.

பென்சிலைச் செய்யும் சிக்கல் நிறைந்த இயந்திரங்களைக் கண்டுபிடிக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்! இந்த இயந்திரங்கள் தொழிலாளிக்கு உதவியாக இருக்கின்றன. அவை மூலப்பொருள்களைக் கலக்கின்றன. மரத்தை வெட்டுகின்றன. வர்ணம் பூசுகின்றன.

பென்சிலின் வரலாறு எவ்வளவு நீண்டது என்பதைப் பார்த்தாய் அல்லவா! அதனுடைய வரலாற்றை நீ தெரிந்து கொண்டாய். எனவே அதனிடம் மரியாதையாக நடந்துகொள். அதை மிகவும் கவனமாக வைத்துக்கொள். உன்னுடைய பென்சிலை ஜாக்கிரதையாகச் சீவு, அனாவசியமாகச் சீவாதே, அதன் கூரான முனையைப் பாதுகாக்க ஒரு குப்பி வாங்கி வைத்துக்கொள். பென்சிலுக்கு மூடி இல்லாவிட்டால் பயன்படாத சமயங்களில் அது பெட்டியிலேயே இருக்கட்டும். அலட்சியமாக அதை எந்த இடத்திலும் எறிந்துவிடாதே.

## அரும்பதங்கள்

கரியம் - காரீயம்
கச்சாப் பொருள் - மூலப்பொருள்
ஜாக்கிரதை - எச்சரிக்கை
பண்டசாலை - களஞ்சியசாலை

## கிரகித்தல் பயிற்சி

1. பென்சிலின் தவறைச் சுத்தம் செய்யும் நண்பன் யார்?
2. பேனாவைவிட பென்சிலினால் பெறக் கூடிய நன்மைகள் எவை?
3. பென்சிலுக்கான மூலப் பொருட்கள் எவை? அவை அதிகமாக எந்த நாட்டிலிருந்து பெறப்படுகின்றன?
4. பென்சிலின் மீது இடப்படும் BH என்ற அடையாளங்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றன ?
5. இக்கட்டுரை மூலம் நீர் பெறும் படிப்பினைகள் இரண்டினை எடுத்துக் காட்டுக?
6. பென்சில் தயாரிக்கப்படும் படிமுறைகளைச் சுருக்கமாகத் தருக?

## செயற்பாடு

1. குழுக்களாக முன் வந்து பென்சில் தயாரிக்கும் விதத்தை விபரித்துக் கூறுக.
2. அப்பியாசக் கொப்பிகள் தயாரிக்கும் விதம் பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுக.

# கதை எழுதுதல்

நேற்று சாலையில் ஒரு விபத்தைப் பார்த்தேன். சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் பேரூந்தில் அடிபட்டுக் கிடந்தான். இதைக் கதையாக எழுதினால் என்ன?

அவன் சட்டையை அயன் செய்திருந்தான். டையும் அணிந்திருந்தான். கால்களில் ஷூ பளபளப்பாக இருந்தது. அதனால் அவனை ஒரு தனியார் வங்கியில் வேலை செய்பவனாகவோ அல்லது, ஒரு கம்பனியில் வேலை செய்பவனாகவோ ஆக்கிவிடலாம் கதையில், பிரச்சினையில்லை.

இதில் சில கதாபாத்திரங்களைச் சேர்க்க வேண்டும். ஒரு கதையில் அதிகபட்சம் மூன்று கதாபாத்திரங்களுக்கு மேல் தவிர்த்தல் நன்று என்று சொல்லியிருக்கிறார்கள். அவனுக்கு ஒரு அழகான மனைவியும் இரண்டு வயதில் ஒரு குழந்தையும் இருப்பதாக எழுதிவிடலாம். சரி இப்போது அடுக்க வேண்டிய சம்பவங்கள்.

மரணம் என்பது எப்போதுமே துயரமானது. படிப்பவர்கள் மனதில் 'ஐயோ பாவம்' என உணர்ச்சியைக் கொண்டு வந்துவிட்டால் போதும். அதிகப்படியான சம்பவங்கள் இருக்கக்கூடாது என்றும் யாரோ ஒரு புண்ணியவான் சொல்லியிருக்கிறார். அதனால் சம்பவங்களைக் குறைவாக வைத்துக்கொள்வோம். கதைக்கு அடிப்படையான முரணைக்கொண்டு வரப் பார்ப்போம்.

எந்த ஒரு கதைக்கும் மிக முக்கியமானது ஆரம்ப வரிகள்தான். கதையின் ஆரம்பமே வாசகனை மேலும் படிக்கத் தூண்ட வேண்டுமாம்.

மேக மூட்டமின்றி ஆகாசம் சலனமின்றி இருந்தது. அவனது மனைவி துர்க்கா அவனை எழுப்பினாள். அவன் சிணுங்கியபடி கைகளை நீட்டுவதோ அல்லது வேறு ஏதாவது செய்வதோ உங்கள் திறமையைப் பொறுத்தது.

அவர்களுக்கு இருக்கும் பணப் பிரச்சனைகள் (குழந்தையின் ஸ்கூல் ஃபீஸ், அப்பாவின் மருத்துவம்) குறித்தும் அலுவலகத்தில் அவனுக்குக் கிடைக்கப் போகும் ப்ரமோஷன் மூலம் அதை ஈடுகட்டலாம் என்றும் கதையின் போக்கில் சொல்லிச் செல்லலாம்.

கதையை முடிவு வரிகளாக இதை வைத்துக் கொள்ளலாம் அவனுக்குக் கடைசியாக நினைவு வந்தது - தான் கட்ட மறந்த இன்ஷூரன்ஸ். இதைத் திடீர் திருப்பமாக ஏற்றுக் கொள்வார்களோ என்று சந்தேகமாக இருக்கிறதா.. சரி இப்படி முடிக்கலாம் - அப்போது அவனது கைப்பையிலிருந்து எட்டிப் பார்த்த அவனது ப்ரமோஷன் கடிதம் காற்றில் படபடத்தபடி அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. இதுவும் வேண்டாமா, சரி இப்படி முடிக்கலாம் :

அப்போது கீழே விழுந்திருந்தவனின் உடலில் சலனம் தெரிந்தது. இன்னும் உயிர் இருக்கிறது.....

## செயற்பாடு

1. இக் கதையின் கருப் பொருள், பாத்திரப் படைப்பு, சம்பவ விபரிப்பு, மொழிநடை, உத்தி, முடிவு பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுக.

2. பின்வரும் கதையின் ஒரு பகுதியினைத் தொடர்ந்து கற்பனையில் சிறிய கதை ஒன்றை எழுதுக.

ரவி தனது தாய்க்குச் சில வேலைகளைச் செய்து கொடுத்துவிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டான். தனது வீட்டிலிருந்து வீதியில் விரைவாக நடந்து சென்றான். அன்றும் மணி அடிப்பதற்கு முன் பாடசாலைக்குச் சென்றுவிடலாம் என்று அவசரமாக ஓடினான். பாடசாலையை அடைவதற்கு இன்னும் சிறிது தூரமே இருந்தது.

அப்பொழுது கூன்விழுந்த பெரியவர் ஒருவர் வழியில் ஊன்றுகோலைப் பிடித்தபடி நடக்க முடியாமல் தள்ளாடியபடி சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான்.

பாவம் இந்த வயதிலும் இவர் எங்கு போய்க் கொண்டிருக்கிறார் என்று எண்ணியபடி ரவி அவரைக் கடந்து சென்றான். பாடசாலையின் மணியோசை கேட்டு ஓடத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் தடால் என்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பெரியவரின் ஊன்றுகோல் சற்றே தள்ளிக் கிடந்தது. பெரியவர் தரையில் விழுந்துகிடந்தார்.....

# 11 உயிர் காக்கப் பயிர் காப்போம்

எல்லோரும் வாழ்வோம் எனும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. நெ.நு.சுந்தரவேலு அவர்களால் எழுதப்பட்டது. மனிதனுடைய வாழ்க்கை செம்மை பெறுவதற்கு பயிர் செய்யப்படுவது மட்டுமன்றி, அப்பயிரினைக் காப்பதும் அவசியமாகும். அத்தோடு உழவுத் தொழிலின் அவசியம் பற்றி தெளிவுபடுத்தி, அதனூடாக வரும் தனியாருடைய தன்னிறைவு நாட்டின் தன்னிறைவுக்கு வழிவகுக்கும் என்கின்றார்.

என்னருமைத் தம்பி, தங்காய்!

'உடலுழைப்பு இழிந்தது' என்னும் தவறான கருத்தைத் தள்ளி விட்டீர்களா? மகிழ்ச்சி. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய முடிவு செய்து விட்டீர்களா? பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்; பின்பற்றுகிறேன்.



ஆக்குந் தொழில் பலவும் மேற்கொள்வோம் வாரீர். தேவைப் பொருள் பலவும் செய்து குவிப்போம்.

தேவைகள் பலப்பல. அவற்றிலே அடிப்படைத் தேவை எது? உணவே அடிப்படைத் தேவை. உணவின்றி வாழ்ந்த உயிருண்டோ? இல்லை. ஆதி மனிதன் - மர உரியை அணிந்தவனுக்கும் முந்திய மனிதன் - தழைகளைக் கோர்த்து உடுத்திக் கொள்வதற்கு முன், எதற்காகப் படாத பாடு பட்டான்? உடைக்கா? உறையுளுக்கா? இல்லை, இல்லை. பின் எதற்கு? உணவிற்கு! உயிர் வாழவைக்கும் உணவிற்கு அவன் பட்டபாடு கொஞ்சமா? இயற்கையாகக் கிடைக்கும் காய்கறிகளைப் பறித்து உண்டான். கிழங்குகளைத் தோண்டி உண்டான். உணவுத் தேவையைச் சமாளித்த பிறகே, ஆதி மக்கள் இனம் உடையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிற்று.

சரி. அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? உணவுத் தேவையே முதல் தேவை. அதை முதலில் கவனிப்போம். அதில் தன்னிறைவு பெறுவோம் வாரீர்!

எப்படி முடியும்? எத்தனை ஆண்டுகளாக உணவுப் பற்றாக்குறை? இருக்கிறது? இந்த ஐயம் எழுந்து குழப்புகிறதா தம்பீ! பொறு மனமே, பொறு. மனமே பொறு. ஐயம் தெளிவோம். யாரிடம் கேட்டு? என்னிடம் கேட்டா? அல்ல. நிபுணர்களைக் கேட்டா? அல்ல. பின் யாரைக் கேட்டுத் தெளிவோம்?

அறிவுக் கடலிடம் செல்வோம். மன்பதைக்கும் மறைதந்த சான்றோரிடம் செல்வோம். பொய்யாமொழியாரிடம் செல்வோம். திருவள்ளுவரிடம் செல்வோம். இதோ தெளிவுரை. காலத்தாற் கறைபடாத அறிவுரை வையகம் முழுவதற்கும் பொருந்தும் வாய்மை. கேளீர் உடன் பிறந்தாரே.

**இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம் என்னும் நல்லாள் நகும்**

ஆறுதல் உரையல்ல இது. வெறும் ஊக்க உரை அல்ல இது. மயக்க உரையல்ல இது. மெய்யுரை இது. எக்காலும் மெய்யுரை இது. இதை ஏற்போம் வாரீர். இதைப் பின்பற்றுவோம் வாரீர்.

'இல்லையே! உணவில்லையே' என்று ஏங்குகிறது மக்கள் இனம். அந்த ஏக்கத்திலே சோர்ந்து கிடக்கிறது மக்கள் இனம். இதைக் காண்கிறாள்

நல்லாள்; எந்த நல்லாள்? நிலமென்னும் நல்லாள். அவள் தாயினும் தயையுடைய நல்லாள் அன்றோ?

அத்தயையினாலன்றோ, அகழ்வாரையும் பொறுத்துத் தாங்கி நிற்கிறாள். அந்நல்லாள் நம் ஏக்கத்தைக் கண்டு ஏங்குவாளா? அலறி அழுவாளா? துடித்துத் துவளுவாளா? அவள் ஏன் துவளவேண்டும்? அவளுக்குத் தெரியுமே நம் அறியாமை. எத்தனை, எத்தனை வேண்டுமானாலும் விளைவித்துத்தர நிலத்தாய் உள்ளாள் என்பது நமக்குத் தெரியாது. அவளுக்குத் தெரியும். பாலை என்று மலைக்கிறோம் நாம். சோலையாகக் காத்திருக்கும் நிலம் அது என்பதை அவள் அறிவாள். எனவே, ஏங்காது, அழாது, துடிக்காது நம்மைக் கண்டு நகைக்கிறாள். வாயுரையிலும் சிறந்த குறிப்புரையால் உணர்த்துகிறாள். எதை உணர்த்துகிறாள்? 'உணவு விளையும்; வேண்டிய மட்டும் விளையும்; நெடுங்காலம் விளையும்; இதை முடித்துத் தரவல்லவா நான் காத்திருக்கிறேன். உன் சிறுமையையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். முடங்கிக் கிடக்காதே எழுந்திரு. சோம்பலை உதறித் தள்ளு என்னிடத்தில் உள்ள அனைத்தும் எனக்கே அல்ல, உங்கள் அனைவருக்கும்' என்று உலகப் பொதுமொழியாம் குறிமொழியால், நகைமொழியால் வழிகாட்டுகிறாள் நிலத்தாய்.

அவ்வழியை உணர்ந்தீர்களா? நல்லது; பின்பற்றுவோம் வாரீர் உடன் பிறந்தாரே. பயிர் செய்வோம். பகுதிநேரப் பணியாகவேனும் பயிர் செய்வோம். ஆண்டு முழுவதும் செய்யக்கூடுமானால் நன்று. இல்லையேல் என்றுமே சும்மா இருக்கலாமா?

ஆகாது; ஆகாது தம்பி. மழைப் பருவத்திலாவது பயிர் செய்வோம். கரும்பும் செந்நெல்லும் பயிரிடுவது மட்டுமே பயிர் என்று நினைக்காதீர். வாழையும் தென்னையும் பயிரிட முடிந்தால்தான், பயிர் செய்ய முன்வரவேண்டுமென்று எண்ணாதீர். இரண்டொரு திங்கள் மட்டுமே பயிரிடக்கூடிய காய்கறித் தோட்ட வேலையும் செய்யவேண்டிய வேலையே.

நாட்டின் உணவுத் தன்னிறைவிற்கு உதவும் கீரைப் பாத்தியும் உயிரைக் காக்கும்; இதை உணர்வோம். சின்னஞ்சிறு நிலம் இருப்பின்,

அதிலும் பயிரிடுவோம். விளையக்கூடிய ஏதாவதொரு உண்பண்டத்தை விளைப்போம். நீர்வளமுடைய திங்கள்களிலாவது பயிரிடுவோம்.

நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்குமுன் நம் சிற்றூர்கள் இருந்த நிலை தெரியுமா? இளைஞர்களாகிய உங்களுக்குத் தெரியாதது வியப்பல்ல. எனவே என் பட்டறிவை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அன்று எல்லாச் சிற்றூர்களிலும், எல்லாப் புறக்கடைகளிலும், பச்சைக் கொடிகள் படர்ந்திருக்கும், பூத்துக் காய்த்திருக்கும். கொடிகள் மட்டுமா? இல்லை. செடிகளும் பசுமையாக வளர்ந்திருக்கும்; பூத்திருக்கும்; காய்த்திருக்கும். இப்பசுமை நிலை இங்கும் அங்கும் மட்டுமா? இல்லை, இல்லை எல்லா வீடுகளிலும் இதே நிலை. எல்லாக் குடிசைகளையடுத்தும் இதே நிலை. பெருநிலக்கிழார் பெரிய சாமியின் வீட்டுப் புறக்கடையில், காய்கறித் தோட்டம் செழித்திருக்கும். வாய்க்கால்கரை வரதனின் குடிசையின் பின்னால் சின்னஞ்சிறு குழியிலே முளைத்து, அவர் குடிசை மேலேறிப் படர்ந்து, பூத்துக் காய்க்கும் பூசணிக்கொடி செழித்திருக்கும். இடைநிலையிலே உள்ளவர்கள் வீடுதோறும் இப்படியே. பச்சைக் காய்கறிகள், சொந்தக் காய்கறிகள், கீரை வகைகள். எனவே உள்ளூர் காய்கறித் தேவைகள் அனைத்தையும், உள்ளூரிலேயே பெற்று வந்தார்கள் அக்காலச் சிற்றூர் மக்கள். பச்சையாக உண்டு உரம் பெற்று வந்தார்கள். இத்தன்னிறைவே, சிற்றூர் தன்னிறைவே, காய்கறித் தன்னிறைவே நம் முன்னோர்களை வறுமைக் கொடுமையிலிருந்து காப்பாற்றியது.

இன்றைய சிற்றூர்களின் நிலை என்ன? எத்தனைச் சிற்றூர்களில், வீட்டிற்கு வீடு காய்கறித் தோட்டம் உண்டு? எத்தனை சிற்றூர்களில், குடிசைக்குக் குடிசை படரும் பச்சைக் கொடிகளைக் காணமுடியும்? பல ஊர்களில், பல வீட்டுப் புறக்கடைகளெல்லாம் கரம்பாக (தரிசு நிலம்)அல்லவா காட்சியளிக்கின்றன? குடிசைகள் நிலையாவது தாங்கும் நிலையில் உள்ளதா? குடிசைகள் மீதும் படரும் கொடிகளுக்குப் பதில் பறக்கும் கொடிகளன்றே நம்மை ஈர்க்கின்றன? கவனம் எல்லாம் கொடிகளைப் பறக்க விடுவதிலேயே திருப்பிவிடலாமா? படரும் கொடிகளை மறந்து, பறக்கும் கொடிகளையே நினைத்துக் கொண்டிருந்தால், நாமும் ஆலாய்ப் பறக்கத்தானே வேண்டும்? தொடர வேண்டாம் கவனமாற்றம்.

திருப்புங்கள் உங்கள் சிந்தனையை. மாற்றுங்கள் உங்கள் முயற்சியை. எண்ணுங்கள் பண்டைச் சிற்றூர்களை. பின்பற்றுங்கள் அக்கால மக்களை. வீட்டிலும் விடுதியிலும் பயிரிடுங்கள்; கிடைத்த இடமெல்லாம் கிளறி விதையுங்கள். தேர்ந்தெடுத்து விதையுங்கள்; பருவத்துக்கேற்ற பயிரை வளருங்கள்; காத்து வளருங்கள். பயிரிட்டு உண்ணுங்கள். முடிந்த சிறு அளவாவது உங்கள் உணவுப் பொருளை உங்கள் உழைப்பாலே பயிரிட்டு வாழுங்கள். தன்னிறைவுக்குத் துணைசெய்யுங்கள்.

**அரும்பதங்கள்**

இழிந்தது - தாழ்ந்தது

வந்தனை - வணக்கம்

மரவுரி - மரப்பட்டையால் செய்த ஆடை, முனிவர் உடுக்கும் மரப்பட்டை ஆடை வகை

சான்றோர் - அறிவொழுக்கங்களால் நிறைந்தோர்.

பொய்யாமொழியார் - திருவள்ளுவர்

**கிரகித்தல் பயிற்சி**

1. ஆதிகால மக்களினம் முதலில் எதனைச் சிந்திக்கத் தொடங்கியது?
2. ‘‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’’ என்பதன் பொருள் யாது?
3. ‘‘தாயினும் தயையுடைய நல்லாள்’’ யார்? அவள் எத்தகைய குணத்தவள்?
4. நிலத்தாய் எமக்கு என்ன கூறி வழிகாட்டுகின்றாள்?
5. பச்சையாக உண்டு உரம் பெற்று வந்தார்கள் என்பதன்மூலம் கட்டுரையாசிரியர் கூறவந்த விடயம் யாது?
6. நாம் கொண்ட ஐயத்தைத் தீர்க்க யாரிடம் செல்வோம் எனக் கட்டுரையாசிரியர் தெரிவிக்கின்றார்.

7. ‘‘நிலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்’’ எனும் குறளின் பொருளை எழுதுக.

8. கீழே கொடுக்கப்பட்ட சொற்களுக்குப் பொருள் எழுதுக.
அ. ஐயம் ஆ. ஈர்த்தல் இ. அகழ்பவர் ஈ. உறையுள் உ. திங்கள்

9. நிறுத்தக் குறிகள் இட்டு எழுதுக.
கொடிகள் மட்டுமா இல்லை செடிகளும் பசுமையாக வளர்ந்திருக்கும் பூத்திருக்கும் காய்த்திருக்கும் இப்பசுமை நிலை இங்கும் அங்கும் மட்டுமா

10. கீழே கொடுக்கப்பட்ட தொடர்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுக.
அ) சின்னஞ்சிறு நிலம்
ஆ) உடலுழைப்பு
இ) ஆக்குந் தொழில்
ஈ) முறைதந்த சான்றோர்
உ) அறிவுக்கடல்
ஊ) தன்னிறைவு
எ) பச்சைக் காய்கறிகள்
ஏ) பருவத்துக்கேற்ற பயிர் செய்தல்
ஐ) இரண்டொரு திங்கள்
ஒ) வறுமைக் கொடுமை

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

‘உழவுத் தொழிலின் பெருமை’ என்ற தலைப்பில் 100 சொற்களில் கட்டுரை ஆக்குக.

# 12 ஈசன் உவக்கும் இன்மலர்

*ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று என்னும் பாடலை சுவாமி விபுலானந்தர் இயற்றியுள்ளார். இவர் மட்டக்களப்பில் காரைதீவில் பிறந்தவர். இவரது இளமைப் பெயர் மயில்வாகனன். இவர் முத்தமிழ் வித்தகராகத் திகழ்ந்தவர். யாழ் நூல் இவருக்குப் புகழ் சேர்த்துத் தந்துள்ளது. வினாவிடை முறையில் இப்பாடலைப் பாடியுள்ளார்.*

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ?
வெள்ளை நிறப் பூவும் அல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலம் அடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த் தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலர் எதுவோ?
காப்பவிழ்ந்த மலரும் அல்ல கழுநீர்த்தொடையும் அல்ல
கூப்பியகைக் காந்தள் அடி கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரில் இல்லாக் கற்பகமோ
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலர் எதுவோ?
பாட்டளிசேர் கொன்றை அல்ல பாரில் இல்லாப் பூவும் அல்ல
நாட்டவிழி நெய்தல் அடி நாயகனார் வேண்டுவது.

**அரும்பதங்கள்**

வள்ளல்- கேட்டவர்களுக்கு இல்லையென்று கூறாமல் கேட்டபொருள் தருபவர்

கமலம் - தாமரை

உத்தமனார் - சிறந்த குணங்கள் உடையவர்

காப்பு - பாதுகாவல், தெய்வ வணக்கம், வளையல்

மாமலர் - சரக்கொன்றை (சரஞ்சரமாகப் பூக்கும் கொன்றை மரம்)

கழுநீர் - செங்குவளைப்பூ

காந்தள் - கார்த்திகைப்பூ

கற்பகம் - தேவலோகத்து ஐந்து மரங்களுள் ஒன்று. வேண்டியதையெல்லாம் தரும் மரம்.

**கிரகித்தல் பயிற்சி**

1. "ஈசன் உவக்கும் இன்மலர்" என்னும் தொடர் குறிப்பிடும் பொருளை விளக்குக.
2. இப்பாடப்பரப்பிலே குறிப்பிடப்படும் இறைவனைக் குறிக்கும் சொற்கள் எவை?
3. இறைவனது அடிக்கு இணையான மலர் எதுவென கவிஞர் குறிப்பிடுகின்றார்?
4. "கூப்பிய கைக்காந்தள்" என்பதன்மூலம் கவிஞர் குறிப்பிட விரும்பியது என்ன?
5. ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்றும் எவை?
6. இப்பாடல்களில் இடம்பெறும் அணிகள் எவை?
7. இப்பாடலைப் படித்து முடித்ததும் உமது மனதிலே எழுந்த உணர்வுகள் எத்தகையவை?
8. பொருள் எழுதுக:

அ.வள்ளல் ஆ. கமலம் இ. தொடை ஈ. பார் உ. விழி

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

இதுபோன்ற கவிதைகளைப் படித்து உமக்குப் பிடித்த தலைப்பில் கவிதையாக்குக.

# உவமைத் தொடர்கள்

நன்கு தெரிந்த ஒருபொருளின் இயல்பை நினைவுறுத்தி, தெரியாத ஒரு பொருளின் இயல்பை விளக்குவது உவமையணி. அத்தகைய உவமையை உள்ளடக்கிய தொடரே உவமைத்தொடர்.

★ இலைமறை காய்போல - மறைவான நிலை
★ ஊமை கண்ட கனவு போல - கூற முடியாத நிலையிலிருத்தல்
★ கடன் பட்டார் நெஞ்சம் போல - மனக் கலக்கம் அடைதல்
★ ஓடும் புளியம் பழமும் போல - ஒட்டுறவின்றி இணைந்திருத்தல்
★ கனியிருக்கக் காய் கவருவது போல - நல்லவற்றை வெறுத்து தீயவற்றை நாடுதல்
★ வாடும் பயிருக்கு வான்மழை போல - துன்பத்தில் அபயம்
★ தலையிருக்க வால் ஆடுவது போல - உரியவரை மீறிச் சார்ந்திருப்பவர் முந்நிற்பது
★ சிவபூசையில் கரடி புகுந்தது போல - நன்மைக்கு இடையூறு

**பயிற்சி**

**அ** பகுதியை **ஆ** பகுதியுடன் தொடர்பு படுத்துக:

| அ | ஆ |
|---|---|
| அத்தி பூத்தாற் போல | தெட்டத் தெளிவு |
| வெள்ளிடை மலை போல | செயலற்ற நிலை |
| சித்திரப் பதுமை போல | மிக அரிது |
| சூரியனைக் கண்ட பனி போல | உடன்மறைவு |
| ஏட்டுச் சுரைக்காய் போல | வாழ்விற்குப் பயனின்மை |

**செயற்பாடு**

நீங்கள் கண்டறிந்த உவமைத் தொடர்கள் பத்தை இனங்கண்டு, அவற்றுக்கான விளக்கத்தினை எழுதுக.

# 13 கடலும் கிணறும்

கிழவியின் தந்திரம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதனை கி.வா.ஜகந்நாதன் எழுதியுள்ளார். இப்பாடம் அறம் செய்து வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையினையும் செல்வத்தினைப் பெருக்கி வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையினையும் சித்திரிக்கின்றது. பணம் சேரச் சேர துன்பமே உண்டாகும். ஒருவர் நீடூழி காலம் வாழ்ந்தால் எப்படியாவது தருமத்தினை செய்துகொண்டே இருப்பார் என்ற கருப்பொருளில் அமைகின்றது.



அந்த ஊர் மிகச்சிறியது. ஆனாலும் பெரிய உள்ளங்களைப் பெற்ற உபகாரிகள் சிலர் அதில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய பெருமைகளை உலகுக்குத் தெரிவிப்பதற்காகவே, குறுகிய மனம் உடைய பலரும் அந்த ஊரில் இருந்தார்கள். நல்லவர்களுக்குள் ஒருவர் சில நிலங்களை வைத்துக்கொண்டு தன்னால் முடிந்த அளவுக்கு அறம் செய்து வந்தார். வேறு பலரோ நாளுக்கு நாள் தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அந்தச் செல்வர்கள் வாழ்வதனால் அந்த ஊருக்குப் புகழ் உண்டாகவில்லை. சின்னக் குடித்தனக்காரராகிய பெரியவர் ஒருவர் இருந்ததனால் வேறு ஊர்களிலிருந்து அவரை நாடி ஏழைகள் வருவார்கள். அந்தப் புலவர்கள் தாங்கள் போகும் இடங்களில் எல்லாம் இந்தப் பெரியவருடைய புகழைப் பரப்பிக் கொண்டே போவார்கள். இதனால் அந்த ஊரினுடைய புகழ் எங்கும் பரவியது. அந்தப் பேருபகாரியான பெரியவருக்குத் தமிழ்மொழியில் ஆர்வம் அதிகமாக இருந்தது. புலவர்களிடம் பாடல்களைக் கேட்டு அவர் இன்பம்

அடைவார். தமிழ் மொழியினிடம் அன்பும், தரும சிந்தனையும் ஒன்றாகச் சேர்ந்த அவரிடம் யாருக்குத்தான் அன்பு பிறக்காது?

ஔவையாருடைய காதில் அந்த நல்லவருடைய புகழ் விழுந்தது. நல்ல மனிதர்கள் எங்கே இருந்தாலும் அவர்களைத் தேடிச் சென்று பார்த்துப் பாராட்டுவது அந்தப் பெருமாட்டியின் இயல்பு. அந்த உபகாரியான பெரியவரைப் பார்க்க விரும்பி ஒரு நாள் அவருடைய ஊருக்குப் போனார். ஊருக்குள்ளே நடந்து போனபோது பல பெரிய மாளிகைகளை ஔவையார் கண்டார். ''இந்த மாளிகைகளில் ஒன்றில் தானே அந்தப் பெரியவர் வாழுகிறார்'' என்று தம்மோடு வந்தவர்களை ஔவையார் கேட்டார்.

''இல்லை அவர் சிறிய வீட்டில் வாழ்கிறார். இந்த மாளிகையில் வாழ்கிறவர்கள், அவரைக் காட்டிலும் பெருஞ் செல்வர்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

''இந்த ஊரில் இவ்வளவு பெரிய செல்வர்கள் இருக்கிறார்கள் என்று யாரும் என்னிடம் சொல்லவில்லையே'' என்றார் அந்தத் தமிழ் மூதாட்டியார். அதற்கு யாரும் விடை ஒன்றும் சொல்லவில்லை.

ஔவையார் அந்தச் செல்வரது வீட்டிற்குச் சென்றார். ஔவையார் வருவதை அறிந்த அந்தச்செல்வர் அவரை எதிர்கொண்டு அழைத்து உபசாரம் செய்தார். ஔவையாரோடு வேறு சில புலவர்களும் வந்திருந்தார்கள். 'இந்தத் தமிழ் மூதாட்டியாருடைய வாயிலிருந்து எந்தச் சமயத்தில் என்ன முத்து உதிருமோ? அதனை உடனே பொறுக்கிக் கொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆவலோடு அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் செல்வர் எல்லோருக்கும் அறுசுவைகளை உடைய விருந்துணவை அளிக்க, அவர்கள் உண்டுவிட்டு, தாம்பூலம் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தனர். அப்போது அந்த ஊர்ப் பெரியவர் ஒருவர் ஔவையாரை நோக்கி, ''தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது கலைமகளே எழுந்தருளியது போல் உள்ளது. தங்களைப் போன்ற பெரியவர்கள் இந்தச் சிறிய ஊருக்கு வருவதற்கு நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை! நாங்கள் செய்த புண்ணியம் என்று சொல்வதற்கில்லை. இந்தப் புண்ணியவான் இந்த ஊரில் வாழ்வதனால்தான் தங்களைப் போன்றவர்கள் இந்த ஊரைத் தேடி வருகிறார்கள்'' என்றார்.

இதற்குள் அந்த உபகாரி, ''தாத்தா, வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்'' என்றார்.

கிழவர் மேலும் ஔவையாரைப் பார்த்து, ''தாங்கள் தெய்வாம்சம் உடையவர்கள். தங்கள் திருவாக்கால் இந்தப் புண்ணியவானை ஆசீர்வாதம் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்''

ஆனால், அந்தப் பெரியவரோ ஔவையாரைப் பார்த்து, ''என்னிடமுள்ள அபிமானத்தால் அந்தப் பெரியவர் அவ்வாறு பேசுகிறார். இந்த ஊரில் பல பெரிய செல்வர்கள் வாழுகிறார்கள். அவர்களைக் காட்டிலும் நான் மிகவும் சிறியவன். இறைவன் அவர்களுக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். பொதுவாக அவர்களையும் வாழ்த்துவது தான் முறை. அடியேனைத் தனியாக வாழ்த்துவதற்கு என்ன செய்து விட்டேன்?'' என்றார்.

ஔவையார் இதுவரை பேசாமல் இருந்தவர் இப்போது தம்முடைய திருவாயைத் திறந்தார். முன்னர் பேசிய கிழவரைப் பார்த்து, ''இந்த ஊரில் வேறு செல்வர்களும் இருக்கிறார்கள் என்றார்களே. அவர்கள் இவரை விடப் பணக்காரர்களா?'' என்று கேட்டார்.

''ஆமாம் அவர்கள் தங்களுடைய பணத்தைச் செலவழிக்காமல் மேலும் மேலும் சேர்த்துக் கொண்டே வருகிறார்கள். ஆனால் இவருக்கோ பணத்தைச் செலவழிக்கத் தெரியுமே ஒழியச் சேர்க்கத் தெரியாது. அதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்வேன்' என்றார்.

''அப்படியா! ஏதாவது ஒன்று சொல்லுங்கள் கேட்கிறேன்'' என்று ஔவையார் சொன்னார்.

''இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தப் பக்கங்களில் பஞ்சம் வந்தது. போதிய தண்ணீர் இல்லாமல் நெற்பயிர்கள் சரியாக விளையவில்லை. முன்பே இருக்கிறதைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு செட்டாக வாழ வேண்டியிருந்தது. அப்போது மற்றப் பணக்காரர்கள் தங்கள் வீட்டு வாசல்களை அடைத்துக்கொண்டிருந்தார்கள். இந்தப் புண்ணியவானோ எப்போதும்போல் வருபவர்களை வரவேற்றார். இவர் சாப்பிட்டாரோ இவர் மனைவி சாப்பிட்டாளோ நானறியேன். ஊரெல்லாம் திண்டாடும் அந்தச் சமயத்திலும் தம்மை நாடி வரும் புலவர்களுக்கு ஒருவேளையாவது சோறு போட்டு அனுப்பிக்கொண்டிருந்தார். அப்போது அவரை நாங்கள் தெய்வப் பிறவி என்றே நினைத்திருந்தோம்'' என்றார் அவர்.

அந்த உபகாரியோ, ''இந்த ஊர் வாழ்ந்தால்தான் நான் வாழ்வேன். ஆகையால் இந்த ஊரில் வாழும் எல்லோரையுமே வாழ்த்துங்கள்'' என்றார்.

''உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்'' என்றார் ஔவைப் பிராட்டி.

‘‘அவர்கள் பெரிய செல்வர்கள் என்று சொன்னீர்கள். உங்களுக்கு அத்தனை செல்வம் இல்லை அல்லவா?’’ என்று ஆர அமர அந்த மூதாட்டியார் கேட்டார்.

‘‘ஆமாம்’’ என்றார் உபகாரி.

‘‘அவர்கள் செல்வம் கடலைப் போன்றதானால் உங்கள் செல்வத்தைச் சிறிய கிணறாகச் சொல்லலாம் அல்லவா?’’ என்று கேட்டார்.

‘‘தங்கள் திருவுள்ளம் எதுவோ அவ்வாறே சொல்லலாம்’’ என்றார் அவர்.

‘‘அவர்களுக்கு மேலும் மேலும் செல்வம் சேரட்டும் என்று பாடப் போகிறேன்’’ என்றார் தமிழ் மூதாட்டியார்.

இப்போது யாரும் பேசவில்லை.

ஔவையார் பாடலைச் சொல்லத் தொடங்கினார். அந்தப் பாட்டின் கருத்து வருமாறு,

பிறரைக் கடல் என்றும் அவரைக் கிணற்று நீர் என்றும் பாடினார் ஔவையார். வெறும் அளவை எண்ணி அவர் அவ்வாறு சொல்லவில்லை. கடல் அளவில் பெரியதுதான். ஆனாலும் அதிலிருந்து சொட்டு தண்ணீரையாவது தாகத்துக்குக் குடிக்க முடியுமா? அதற்கு அருகிலேயே தோண்டிய ஒரு கிணற்றில் சிறிய ஊற்றிலிருந்து வரும் நீரே தாகத்தைப் போக்கும். சிறிய ஊற்றாக இருந்தால் என்ன? கையில் அள்ளிக் குடிக்கப் போதாதா? வற்றாமல் தண்ணீர் வந்துகொண்டே இருக்குமே!

கடலில் உள்ள நீரை மேகங்கள் உறிஞ்சி வற்றச் செய்து எங்கேயோ கொண்டுபோய் மழையாகப் பொழிகின்றன. அதைப் போல அந்தச் செல்வர்களுடைய செல்வத்தை வேறு யாராவது துன்புறுத்தி அடித்துக் கொண்டு போய்ச் செலவழிப்பார்கள். ஆனால் இவரிடம் எந்தத் திருடனும் வர நினைக்கமாட்டான். இவர் நிடூழி காலம் வாழ்ந்தால் எப்படியாவது தருமத்தைப் புரிந்து கொண்டே இருப்பார். பணக்காரர்கள் தங்களிடம் பணம் சேர்வதனால் வரும் துன்பங்களைத் தருமம்செய்து போக்கிக் கொள்ளலாம். அவ்வளவு செய்யாதவர்களுக்குப் பணம் சேரத் துன்பமும் உடனே வந்துசேரும்’’ என்றார் ஔவையார், அதனால் அவர்களுக்குத் துன்பம் உண்டாகட்டும் என்று சபிக்கவில்லை. இன்னும் பணம் சேரட்டும் என்று சொன்னார்.

**கி.வா. ஜகந்நாதன்.**

**அரும்பதங்கள்**

தாம்பூலம் - வெற்றிலை, பாக்கு
உபகாரி - உதவுபவர், நன்மை செய்பவர்
கலைமகள் - நாமகள், சரசுவதி
திருவாக்கு - தெய்வப் பெரியோர்களின் வாய்மொழி
ஆசீர்வாதம் - வாழ்த்து
நீடூழி காலம் - நெடுநாள், நெடுங்காலம்

**கிரகித்தல் பயிற்சி**

1. கதையில் குறிப்பிடப்படும் மிகச் சிறிய ஊரில் வாழ்ந்து வந்தவர்கள் யாவர்?
2. பேருபகாரியான பெரியவர் மீது மற்றவர்கள் அன்புகொள்ளக் காரணம் என்ன?
3. ஔவையாரின் இயல்பான பண்பாக நாம் குறிப்பிடக் கூடியது யாது?
4. பணம் சேர்வதனால் வரும் துன்பங்களை பணக்காரர் எவ்விதம் போக்கிக்கொள்ள முடியும்?
5. சந்தர்ப்பங்கூறி விளக்குக.
   அ. இந்த ஊரில் வேறு செல்வர்களும் இருக்கின்றார்கள் என்றார்களே அவர்கள் இவரைவிடப் பணக்காரர்களா?
   ஆ. தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது கலைமகளே எழுந்தருளியது போல் உள்ளது.

6. பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதுக.
   அ. அறு சுவை ஆ. பேருபகாரி இ. தமிழ் மூதாட்டி
   ஈ. தெய்வாம்சம் உ. நீடூழி காலம்

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

1. அறம் செய்தால் கிடைக்கும் பயன் பற்றி கலந்துரையாடுக.
2. அறத்தின் பயன் என்ற தலைப்பில் கதை ஒன்று எழுதுக.

# விளம்பரம்

★ பயனாளிகள் விளம்பரங்களின் மூலம் பொருட்கள்/ சேவைகள் பற்றிய தகவல்களை இலகுவாகப் பெற முடியும்.
★ விளம்பரத்தால் அப்பொருளின் விற்பனை அதிகரிக்கும்.
★ பொருள்களின்மீது நாட்டத்தினை ஏற்படுத்த முடியும்.

## டெங்கு
**எனும் உயிர் கொல்லியிலிருந்து**
**எம்மைக் காப்போம்**



நுளம்புகளை ஒழித்து
டெங்கு எனும் உயிர்க்கொல்லியை விரட்ட
வந்துவிட்டது...

## வீமா நுளம்புத் திரி

இயற்கை மூலிகைகளால் ஆனது
பக்கவிளைவுகள் அற்றது

தரமானது
மலிவானது
12 மணி நேரம்
எரியக்கூடியது

வீமா தனியார் நிறுவனம்
118, விகாரை வீதி, பன்னிப்பிட்டிய.

# துண்டுப் பிரசுரம்

★ ஒரு விடயம் பற்றி அறிவுறுத்த உதவும்.
★ கொள்கை கோட்பாடுகளை வெளிப்படுத்த பயன்படும்.
★ வேண்டுகோள் ஒன்றை விடுக்க உதவும்.

## ஆரோக்கியத்தை விரும்புகிறீர்களா?

**உலகளாவிய கைகழுவுதலுக்கான தினம் ஒக்டோபர் 15**

மக்களே

எமது கைகளைத் தூய்மையாக வைப்பதன் மூலம்
ஆரோக்கியத்தைப் பாதுகாத்திடுவோம்.



**சரியான முறையில் கழுவப்படாத கைகளால் எமக்கு உடல் சார்ந்த பல உபாதைகள் ஏற்படுகின்றன.**

★ வயிற்றோட்டம்
★ நெருப்புக் காய்ச்சல்
★ வயிற்றுளைவு
★ செங்கண்மாரி
★ குடற்புழு வியாதிகள்

**சிந்தியுங்கள்**

**செயற்படுங்கள்**

**ஆரோக்கியமாக வாழுங்கள்**

**சரியான முறையில் கைகளைக் கழுவுவது எவ்வாறு?**

★ நகங்கள் வெட்டப்பட்டிருக்க வேண்டும்.
★ மணிக்கட்டில் அணிந்துள்ள பொருட்களை கழற்றி வைக்க வேண்டும்.
★ நீளக் கையுடைய ஆடையெனின் முழங்கை வரை உயர்த்தி விட வேண்டும்.
★ ஓடும் நீரில் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவ வேண்டும்.
★ கைகளை நன்கு மணிக்கட்டு வரை நீரில் நனைத்துக்கொள்ள வேண்டும்.
★ சவர்க்காரமிட்டு கைகளை 20 - 30 வினாடிகள் நன்றாகத் தேய்த்துக் கழுவுதல் வேண்டும்.
★ சவர்க்காரமிட்டு நன்றாக கைகளைக் கழுவிய பின் சுத்தமான தனிப்பட்ட பாவனையிலுள்ள கைக்குட்டை அல்லது துவாயினால் துடைத்துக்கொள்ளல் வேண்டும்.

சுகாதாரத் திணைக்களம்
கிளிநொச்சி

01.10.2015

**பயிற்சி**

1. ஆசிரியரின் துணையுடன் விளம்பரம், துண்டுப் பிரசுரம் ஆகியவற்றுக்கான மேலதிக விளக்கத்தை வகுப்பறையில் கலந்து உரையாடிப் பெறுக.
2. உமக்கு விருப்பமான தலைப்பொன்றில் விளம்பரம் ஒன்றை ஆக்குக.
3. உமக்கு விருப்பமான தலைப்பொன்றில் துண்டுப் பிரசுரம் ஒன்றை ஆக்குக. அவற்றுள் சிறந்தவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## இரட்டைமொழி

இசை பற்றியும் பண்பு பற்றியும் குறிப்புப் பற்றியும் அடிச் சொல் இரட்டித்து நிற்பது இரட்டை மொழியாகும். இவ்வாறான இரட்டை மொழியினைப் பிரித்தால் தனிச்சொல் தனித்து நின்று பொருள் தராது.

★ கசகச ★ மடமட ★ குடுகுடு ★ கலகல ★ சலசல

## இணைமொழி

ஓசைநயம் பற்றி ஒத்தகருத்து அல்லது எதிர்க் கருத்துச் சொற்கள் இணைந்து பொருட் செறிவுடையனவாய் வருவது இணைமொழியாகும்.

★ அருமைபெருமை ★ ஒழிப்புமறைப்பு ★ விருப்புவெறுப்பு
★ அக்கம் பக்கம் ★ சீரும்சிறப்பும்

**பயிற்சி**

கீழ்வரும் தொடர்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

1. திடுதிடு 2. மளமள 3. தடுதடு 4. கண்ணீரும் கம்பலையும்
5. விருப்புவெறுப்பு 6. தட்டுத்தடுமாறி

# 14 கருங்காற் குறிஞ்சி

குறிஞ்சிப்பூக்கள் பூக்கும் காலநிலையினை எடுத்துக் காட்டும் கட்டுரை இது. மலைக்காடுகளும் புல்வெளிகளும் இணைந்திருக்கும் பிரதேசங்களில் செழித்து வளரும் பூ இது. குறிஞ்சிப் பூ நீலநிறமானது. எனினும் மஞ்சள் நிறப் பூ பூக்கும் ஒரு அரியவகை குறிஞ்சி வகையும் உண்டு. கருங்காற் குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் மலரும்.



ஒவ்வொரு வருடப்பிறப்பையும் காட்டில் கழிக்கும் குடும்ப வழக்கத் திற்கேற்ப அந்த ஆண்டு குடகிலுள்ள பிரம்மகிரி மலைக்கு செல்லத் தீர்மானித்தோம். தலைக்காவேரிக்கு மறுபுறம் உள்ள மலைச்சரிவில் வனத்துறையினரின் ஒரு சிறிய விடுதி உள்ளது. மதியம் பெங்களூரை விட்டுப் புறப்பட்டு இருட்டிய பின் இவ்விடுதியை அடைந்தோம். மறுநாள் காலை காபி குடித்துவிட்டு, நாங்கள் நால்வரும் விடுதிக்கு வெளியே, ஒரு ஒற்றையடிப்பாதையில் நடக்க ஆரம்பித்தோம். சுற்றிலும் மூடுபனி கவிந்திருந்ததால், காட்டுப்பாதையில் சில மீட்டர் தூரமே பார்க்க முடிந்தது. சிறிது தூரம் சென்றிருப்போம்; திடீரென, திரையொன்றை தூக்கினாற்போல மூடுபனி விலகியது. எங்கு நோக்கினாலும் நீல நிறப் பூக்கள். கண்ணுக்கெட்டிய தூரம்வரை மலையடுக்குகள் நீல நிறப் போர்வை ஒன்றால் போர்த்தியது போல் தோன்றியது. அவை குறிஞ்சிப்பூக்கள்.

மேற்குத்தொடர்ச்சி மலையில் சுமார் 1600 மீற்றர் உயரத்தில் மழைக்காடுகளும், புல்வெளிகளும் இணைந்திருக்கும் பிரதேசங்களில் செழித்து வளரும் ஒரு புதர்ச்செடி இது. நீலகிரியிலிருந்து சயாதிரி மலைகள் வரை, மலையின் சரிவுகளில், புதர்களாகவும் குறு மரங்களாகவும் வளரும் இச்செடியில் பல வகைகள் உண்டு. எல்லா வகைகளும் கூட்டமாகத்தான் வளரும். குறிஞ்சி மலர்கள் நீல வண்ணமானது என்றாலும், மஞ்சள் நிறப் பூப்பூக்கும் ஓர் அரிய குறிஞ்சி வகையும் உண்டு. எல்லா வகை குறிஞ்சிச் செடிகளும் பல ஆண்டுகளுக்கு ஒரு முறையே வளரும். அதுவும் ஒவ்வொரு செடியும் ஒரே ஒரு முறைதான் மலரும். பூக்கும் காலம் முடிந்ததும் அச்செடி பட்டுப்போகும். பின் உரிய காலத்தில் அதே இடத்தில் புதிய செடிகள் முளைத்துச் செழிக்கும்.

ராபெர்ட் வைட் மற்றும் பெடொம் என்ற இரு பிரித்தானியர்கள் தான் முதன் முதலாக இத்தாவரத்தைக் கவனித்து, இதில் பல வகைகளி ருக்கின்றன என்றெழுதி வைத்தனர். தென்னிந்திய தாவரவியலின் பைபிள் என்றறியப்படும் Flora of Madras Presidency என்ற நூலை எழுதிய தாவரவியலாளர் கேம்பிள் (Gamble), நாற்பத்தியாறு வகை குறிஞ்சிச் செடிகள் உண்டு என்றறிந்தார். கொடைக்கானல் மற்றும் நீலகிரி மலைகளில் வளரும் குறிஞ்சிக்குத் தாவரவியலாளர்கள் இட்ட பெயர் phlebophylum kunthianum என்பது. கொடைக்கானலுக்கு அருகே உள்ள செம்பகனூர் கத்தோலிக்க மடத்திலுள்ள துறவிகள், குறிஞ்சி மலர்வதை கவனமாகப் பதிவு செய்தனர்.

அகநானூறு, புறநானூறு போன்ற சங்க காலத் தொகுப்புகளில் குறிஞ்சி மலர் பற்றி பல குறிப்புகள் உண்டு. சங்க இலக்கியத்தில், சுற்றுச் சூழலை (eco - system) ஐந்து திணைகளாகப் பிரித்து, மலைப் பிரதேசத் திற்கு இங்கு வளரும் செடி குறிஞ்சியின் பெயர் சூட்டப்பட்டது. முருகன், வேட்டுவர் குலப் பெண் வள்ளியை மணந்தபோது அணிவித்தது குறிஞ்சிப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையே.

இம்மலர் பூத்துக்குலுங்கிய வருடங்கள் ஆதாரபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது 1858 முதல்தான். கோத்தகிரியில் வசித்த கோபண் (Cockburne) என்ற ஆங்கிலேயரிடம் இக்குறிப்புகள் இருந்தன. இவரது

தந்தை நீலகிரியில் குடியேறிய முன்னோடி ஆங்கிலேயர்களில் ஒருவர். இவரது தாய் (கோபாணின் பாட்டி) குறிஞ்சி பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலர்வதை மலைவாசிகளிடமிருந்து கேள்விப்பட்டு, நீலகிரி மலையெங்கும் அவை பூத்திருந்த அதிசயம் பற்றி விவரமான குறிப்புகள் எழுதி வைத்தார். அவரது பேரனும் அப்பதிவுகளைத் தொடர்ந்தார். மூன்று தலைமுறை குறிப்பு நமக்கு கிடைத்திருக்கின்றது. தமிழ்மக்கள் நீலக்குறிஞ்சி என்று குறிப்பிடும் இம்மலர்ச்செடி முக்குறுத்தி சரணாலயப் பகுதியிலும், மாஞ்சூர் மலைகளிலும், மணவூர் அருகிலும் மிகுதியாக வளர்கின்றது. பாண்டிச்சேரி சலீம் அலி சுற்றுச்சூழல் நிறுவனம் இப்பகுதியில் குறிஞ்சி மலர் பற்றி பல ஆண்டுகளாகக் கள ஆய்வு நடத்தி வருகின்றது. இந்நிறுவனத்தைச் சேர்ந்த மிரியம் மாத்துலா எனும் பெண் இங்கு தங்கி குறிஞ்சிச் செடியை ஆராய்ந்து வருகிறார்.

இச்செடி ஏறக்குறைய ஒரு மீற்றர் உயரம் இருக்கும். தண்டு சிவப்பாகவும், காம்புகளின் கணுக்கள் கருப்பாகவும் இருக்கும். மதுரைக் காஞ்சி 'கருங்காற் குறிஞ்சி' என்று குறிப்பிடுவது இத்தாவரத்தைத்தான். இது பூக்கும் காலத்தில் மலைச் சரிவே நீலமாகக் காணப்படும். இந்த மலரால்தான் நீலகிரி மலைக்கு அப்பெயர் வந்தது என்றும் சிலர் கூறுகின்றார்கள். இந்த வகைக் குறிஞ்சிப்பூ பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மலரும். குறிஞ்சி மலரும் காலத்தில், அப்பூக்களில் நிறையக் கிடைக்கும் தேனை நாடி, மலைத் தேனீக்கள் பெருமளவில் தோன்றி, பாறை இடுக்குகளில் கூடுகளைக் கட்டி தேன் சேகரிக்கும். மற்றெல்லா தேனிலும் சிறந்ததாகப் போற்றப்படும் இத்தகைய தனிப்பூத் தேனைக் குறிஞ்சி நாடனின் நட்புக்கு ஒப்புவமையாக குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

**கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே.**

இயற்கை வரலாற்றாசிரியர்கள், தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பாலக்காட்டுக் கணவாய்க்குத் தெற்கே உள்ள மலைகளைப் பழனி மலைத் தொடர் என்றும், வடக்கே உள்ள மலைகளை நீலகிரி மலைத் தொடர்கள் என்றும் குறிப்பிடுவர். பழனி மலைத்தொடரில் மூணார் அருகே உள்ள ஆனைமுடி என்ற சிகரத்தைச் சூழ்ந்த பகுதிகளில் குறிஞ்சி ஏராளமாக வளர்கின்றது.

### அரும்பதங்கள்

மூடுபனி - அடர்ந்து பெய்யும் பனி
புதர் - தூறு, புற்சாதி
அரிய - அருமையான
துறவி - சன்னியாசி
திணை - நிலம், ஒழுக்கம்

### கிரகித்தல் பயிற்சி

1. குறிஞ்சிப் பூக்கள் எவ்விதமாகக் காட்சியளித்தது எனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்?
2. குறிஞ்சி மலர் பற்றிய குறிப்புக்களை நாம் எங்கு காணலாம்?
3. கள ஆய்வு என்றால் என்ன? குறிஞ்சி மலர் பற்றி ஆய்வு நடத்தி வந்த நிறுவனம் எது?
4. ''கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே'' இவ்வணியில் இடம்பெறும் ஒப்புவமையை விளக்குக.
5. மனிதர் வாழும் சுற்றுப்புறச் சூழல் சங்க இலக்கியத்தில் எத்தனை திணைகளாக வகுக்கப்பட்டிருந்தன. குறிஞ்சி திணைபற்றி இடம்பெறும் விடயங்கள் யாவை?
6. ''கண்ணுக்கெட்டிய தூரம்வரை மலையடுக்குகள் நீலநிறப் போர்வை ஒன்றால் போர்த்தியதுபோல் தோன்றியது'' இக் கூற்றில் இடம்பெற்றுள்ள அணி எது?
7. கீழே கொடுக்கப்பட்ட சொற்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுக.

அ. தாவரவியலாளர்
ஆ. களஆய்வு
இ. சுற்றுப்புறச் சூழல்
ஈ. சரணாலயம்
உ. பதிவு செய்தல்

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

இயற்கை வளம் பற்றிய கட்டுரைகளைத் தேடி வாசித்து மேலும் அறிவினைப் பெற்று கட்டுரை ஆக்குக.

# வாக்கிய இயைபு

சொற்கள் இணைந்தே வாக்கியங்கள் ஆகின்றன. பொருள் தரக்கூடிய ஒழுங்குமுறையில் சொற்கள் இணைந்து முற்றுப் பொருளைத் தருமாயின் அது வாக்கியமாகும். வாக்கியம் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றைக் கொண்டு அமையலாம்.

அ. தம்பி நேற்று கொழும்புக்குப் போனான்.
ஆ. பாடசாலை நாளை மூடப்படும்.
இ. பசு பால் தரும்.
ஈ. பாலன் பந்தை அடித்தான்.
உ. அவன் ஆலயத்துக்குச் சென்றான்.
ஊ. அவர்கள் காலையில் படித்தார்கள்.

## திணை

★ உயர்திணை - மனிதரைச் சுட்டும் பெயர்கள் உயர்திணையாகும்
★ அஃறிணை - மனிதர் அல்லாத ஏனைய உயிருள்ள உயிரற்ற பொருள்களைச் சுட்டும் பெயர்கள் அஃறிணையாகும்.

## பால்

★ ஆண்பால் - அவன், வந்தான், விமலன்
★ பெண்பால் - அவள், வந்தாள், கமலினி
★ பலர்பால் - அவர்கள், நண்பர்கள், வந்தார்கள்
★ ஒன்றன்பால் - அது, மாடு, மேசை, வந்தது
★ பலவின்பால் - அவை, மாடுகள், மேசைகள், வந்தன

## எண்

★ ஒருமை- ஒன்றைக் குறிப்பது ஒருமையாகும். உ-ம் கண், பல், கடை
★ பன்மை - ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மையாகும்.
உ-ம் கண்கள், பற்கள், கடைகள்

### இடம்

- ★ தன்மை - நான், யாம், நாம், வந்தேன்
- ★ முன்னிலை - நீ, நீங்கள், நீர், நீவிர், வந்தாய்
- ★ படர்க்கை - அவன், அவள், அவர்கள், அது, அவை, வந்தான்

### காலம்

★ இறந்த காலம் - அவன் கொழும்புக்குப் போனான்.
(செயல் முடிந்துள்ளது)

★ நிகழ் காலம் - அவன் கொழும்புக்குப் போகிறான்.
(செயல் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றது)

★ எதிர் காலம் - அவன் கொழும்புக்குப் போவான்.
(செயல் இடம்பெற இருக்கிறது)

**பயிற்சி**

1. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கொண்ட ஐந்து வாக்கியங்களை எழுதுக.
2. நீங்கள் கற்ற பாடங்களை அடிப்படையாகக்கொண்டு திணை, பால், எண், இடம், காலம் கொண்ட ஐந்து வாக்கியங்களை எழுதுக.

# 15 படைப்பின் இரகசியம்

கழனியூரான் எழுதிய மண்பாசத்திலிருந்து எடுக்கப்பட்டது. பூசணிக் கொடியில் காய்த்த பூசணிக் காய்க்கும் ஆலமரத்தில் காய்த்திருக்கும் ஆலங் காய்க்கும் இடையிலே காணப்படும் வித்தியாசம் விளக்கப்படுகின்றது. இதன்மூலம் படைப்பின் இரகசியம் உணர்த்தப்படுகின்றது. ஒருவர் தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தினை வழிப்போக்கரிடம் கேட்டபோது வழிப்போக்கர் அதற்கு நடைமுறை ரீதியாக விளக்கம்கொடுக்கின்றார்.

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் சிகாமணி என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு எப்போதும், எது பற்றியும் சந்தேகம் தோன்றிக்கொண்டே இருக்கும். எதற்கெடுத்தாலும் 'அது ஏன் அப்படி ?' என்று கேட்டுக் கொண்டே இருப்பான். எதையும் ஆராய்வது நல்லதுதான். ஆனால் நம்ம சிகாமணி தேவையற்ற விசயத்தில் மூக்கை நுழைத்து விட்டுப் பின்னர் வசமாக வாங்கிக் கட்டிக்கொள்வான்.



ஒருநாள் சிகாமணி வெளியூருக்குப் போய்க் கொண்டிருந்தான். போகிற வழியில் ஒரு வயலில் பூசணிக்கொடி ஒன்று படர்ந்திருப்பதையும் அதில் ஒரு பெரிய பூசணிக்காய் காய்த்திருப்பதையும் பார்த்தான். அதைப் பார்த்ததும் நமது சிகாமணிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. 'எவ்வளவு மெல்லிய கொடியில் எத்தனை பெரிய பூசணிக்காய் காய்த்திருக்கிறது' என்று நினைத்தான்.

இன்னும் சற்று தூரம் சென்றதும் ஒரு பெரிய ஆலமரத்தைப் பார்த்தான். அதில் மிகச்சிறிய பழம் பழுத்திருந்தது. இது என்ன ஆச்சரியம் ‘இவ்வளவு பெரிய மரத்தின் பழம் மிகச் சிறியதாக இருக்கிறது!’ என்று நினைத்தான். இயற்கையின் இந்தப் படைப்பு இரகசியம் நமது சிகாமணியை ரொம்பவும் சிந்திக்க வைத்தது.

மெல்லிய பூசணிக்கொடி பெரிய காய் காய்ப்பதற்கும், மிகப்பெரிய ஆல மரம் மிகச்சிறிய காய் காய்ப்பதற்கும் காரணம் என்ன என்று யாரிடமாவது கேட்க வேண்டும் என்று நினைத்தான். அப்போது எதிர்த்திசையிலிருந்து ஒரு பெரியவர் வந்தார். அவரும் வழிப்போக்கர்தான். அந்தப் பெரியவரிடம் நம்ம சிகாமணி, தனது சந்தேகத்தைக் கேட்டான். பெரியவர் சிரித்துக்கொண்டே, ‘அப்பா, இயற்கையின் படைப்பு இரகசியம் ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணகாரியம் இருக்கிறது. உன் கேள்விக்கான விடையைப் பிறகு சொல்கிறேன். நேரம் உச்சிப் பொழுது ஆகிவிட்டது. நான் வெகுதூரத்தில் இருந்து நடந்து வருகிறேன். இங்கே பக்கத்தில் தெளிந்த நீரோடை உள்ளது. அதில் சுத்தமான தண்ணிர் உள்ளது. இந்த ஆலமரத்தின் நிழலில் உட்கார்ந்து முதலில் நாம் இருவரும் சாப்பிடலாம். நான் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன். உன்னிடம் சாப்பிட ஏதாவது இருக்கிறதா? இருந்தால் நாம் இருவரும் சேர்ந்து சாப்பிடலாம். இல்லை என்றால், என்னிடம் உள்ள கட்டுச்சோற்றை நாம் இருவரும் பகிர்ந்து சாப்பிடலாம் என்றார்.

‘ஐயா நானும் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன். நானும் வெகு தூரத்திலிருந்துதான் வருகிறேன். எனக்கும் பசிக்கிறது. உங்களோடு பேசிக்கொண்டே சாப்பிட விரும்புகிறேன்’ என்று சொல்லி, சிகாமணி தான் கையோடு கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்றை வெளியே எடுத்தான்.

பெரியவர் தன்னிடம் உள்ள ஒரு சுரக்குடுக்கையை சிகாமணியிடம் கொடுத்து, ‘ஓடையில் இறங்கி, சுரக்குடுக்கை நிறைய தண்ணீர் முகர்ந்து வா!, என்றார். சிகாமணியும் சுரக்குடுக்கையை எடுத்துக்கொண்டு சென்று தண்ணீர் முகர்ந்து வந்தான். அதன் பிறகு இருவரும் கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்றைப் பகிர்ந்து உண்டார்கள்.

‘உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு அல்லவா?’ எனவே,

பெரியவர், 'தம்பி, வெயில் மிகக் கடுமையாக அடிக்கிறது. நடந்துவந்த களைப்பு வேறு; உண்ட மயக்கம் வேறு. எனவே இந்த ஆலமரத்தடியில் சிறிது நேரம் படுத்திருந்துவிட்டு வெயிலின் கடுமை தணிந்த பிறகு இருவரும் அவரவர் பாதையைப் பார்த்து நடப்போமா?' என்றார்.

நமது சிகாமணிக்குப் பெரியவர் சொன்ன யோசனை 'சரி' என்றே பட்டது. எனவே 'சரி ஐயா, நாம் இருவரும் இந்த மரத்தின் நிழலில் படுத்துச் சற்று நேரம் இளைப்பாறுவோம்!' என்றான். ஆலமரத்தின் நிழலில், மணல் வெளியில், இருவரும் கட்டையைச் சாத்தினார்கள் (படுத்தார்கள்). பக்கத்தில் உள்ள நீரோடையில் இருந்து குளிர்ந்த காற்று வீசியதால், இருவரும் சற்று நேரத்தில் தூங்கி விட்டார்கள். நமது சிகாமணி மெல்லிய குறட்டை வேறு விட ஆரம்பித்து விட்டான். சுமார் ஒரு நாழியை நேரம் கழித்து சிகாமணி, 'ஐயா.... அம்மா' என்று அலறிக்கொண்டே கண் விழித்தான். சிகாமணி போட்ட சத்தத்தில் பக்கத்தில் படுத்துக் கிடந்த பெரியவரும் தூக்கம் கலைந்து கண் விழித்துப் பதறியடித்து எழுந்தார்.

சிகாமணி தன் மூக்கைச் சொறிந்துகொண்டு சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். பெரியவர் அவனிடம் 'என்ன நடந்தது? ஏன் இப்படி அலறி அடித்துக்கொண்டு எழுந்தாய்?' என்று கேட்டார்.

சிகாமணி, 'ஐயா, நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது சரியாக என் மூக்காந்தண்டில் (மூக்கின் நடுப்பகுதி) பார்த்து ஒரு ஆலம்பழம் விழுந்து விட்டது. அதனால்தான் அலறி அடித்துக்கொண்டு எழுந்தேன்' என்றான்.

பெரியவர் ஒரு புன்சிரிப்பை உதிர்த்து விட்டு, நமது சிகாமணியைப் பார்த்து,' இத்தனை பெரிய ஆலமரத்தில் ஏன் இத்தனை சிறிய காய் காய்க்கிறது? என்று கேட்டாயே இப்போது நீயே சற்று யோசித்துப் பார். இந்த ஆலமரத்தில் பூசணிக்காய் அளவுள்ள பழம் பழுத்திருந்து, இப்போது உன் முகத்தில் விழுந்திருந்தால் உன் கதி என்னவாயிருக்கும்?' என்று கேட்டார்.

நம்ம சிகாமணிக்கு இப்போது இயற்கையின் படைப்பு இரகசியம் மெல்லப் புரிய ஆரம்பித்தது. பெரியவர் சிகாமணியைப் பார்த்து, 'எத்தனை சிறிய ஆலவிதையில் இருந்து இத்தனைப் பெரிய ஆலமரம் உருவாகி

இருக்கிறது. இத்தனை பெரிய ஆலமரம் மிகச்சிறிய ஆலவிதைக்குள்தான் கருக்கொண்டிருக்கிறது. தென்னை மரத்தின் விதை மிகப்பெரியதாக இருக்கிறது. ஆனால் தென்னை மரம் ஒரே போக்காக, கொப்புகள் இன்றி, கிளைகள் இன்றி, ஒரிப்பாக (நீள வசத்தில்) மேல்நோக்கி வளர்கின்றது. இதுபோல கோடிக்கணக்கான படைப்பின் இரகசியங்கள் இயற்கையில் உள்ளன. அவை பற்றி வீணாக நீ சந்தேகம் கொள்ளவேண்டாம். இயற்கையைக் கூர்ந்து கவனிப்பதில் தப்பில்லை. 'ஏன்? எதற்கு? என்று கேள்விகள் எழுப்பி அதற்கான விடைகளைத் தேடுவதிலும் தப்பில்லை. ஆனால், இயற்கையின் படைப்பு ரகசியத்தைப் பற்றி நீ ஐயம் கொள்ள வேண்டாம்' என்றார். நமது சிகாமணிக்கு வந்த சந்தேகம் தீர்ந்தது. எனவே, பெரியவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு, தன் வழியைப் பார்த்து நடக்கலானான்.

**கழனியூரான்.**

### அரும்பதங்கள்

மூக்கை நுழைத்தல் - பிறருடைய விஷயத்தில் தலையிடுதல்

கட்டுச் சோறு - வழிப் பயணத்துக்குக் கொண்டு செல்லும் சோறு

நாழிகை - கால அளவு, அறுபது வினாடி கொண்ட கால அளவு

### கிரகித்தல் பயிற்சி

1. சிகாமணிக்கு ஏற்பட்ட சந்தேகம் என்ன?
2. தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தினை யாரிடம் கேட்டான்?
3. சிகாமணியும் பெரியவரும் உண்பதற்கு அமர்ந்த இடம் எப்படிப்பட்டது?
4. படைப்பின் ரகசியத்தினைப் பெரியவர் எவ்வாறு விளக்கினார்?
5. ''நானும் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன், நானும் வெகு தூரத்திலிருந்துதான் வருகின்றேன்'' சந்தர்ப்பம் எழுதுக.
6. ''சிகாமணி சற்றுத் தூரம் சென்றதும் ஒரு பெரிய ஆலமரத்தைப் பார்த்தான்'' இத் தொடரின் எழுவாய், பயனிலை,செயற்படு பொருள் என்பனவற்றை எழுதுக.
7. வாக்கியம் எழுதுக:
   அ. காரண காரியம் ஆ. நீரோடை இ. கண்விழித்தல்
   ஈ. ஆச்சரியம் உ. கட்டுச்சோறு

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

இது போன்ற கதைகளை வாசித்து தெளிவினைப் பெறுவதோடு, கதைகளையும் கட்டுரை வடிவில் எழுதுக.

## பெயர்ச் சொற்கள்

மனிதன், மரம், புத்தகம், நாய், தெய்வம், அன்பு, தண்ணீர் போன்ற சொற்கள் பெயர்ச் சொற்களாகும். பின்வருவன பெயர்ச்சொல் வகைகளுள் சிலவாகும்.

- ★ மாற்றுப் பெயர் - நான், நீ, அவன், யார்
- ★ கூட்டுப்பெயர் - வானொலி, நீர்வீழ்ச்சி
- ★ தொழிற்பெயர் - கடித்தல், ஓடுதல், ஆடுதல்
- ★ வினையாலணையும் பெயர் - வந்தவன், வந்தவர், வந்தது, வந்தவை
- ★ ஆக்கப்பெயர் - முதலாளி, படிப்பு, கடன்காரன், படிப்பான்

**பயிற்சி**

பெயர்ச் சொல் வகைகள் ஒவ்வொன்றுக்கும் மேலும் இவ்விரண்டு உதாரணங்களைத் தருக.

# 16 பொய் சொல்லாதே

நாட்டுப்புற மக்களால் பாடப்பட்டவை நாட்டார் பாடல்கள். இப்பாடல்கள் வாய்மொழி வழியாக வளர்த்து வரப்பட்டவை. நாட்டுப்புற மக்கள் வேலைகளில் ஈடுபடும்பொழுது களைப்பை மறக்க பாடல்களைப் பாடுவர். ஆணும் பெண்ணும் கூடி வேலை செய்யும் போது வேடிக்கைப் பாடல்களையும் பாடுவது வழக்கம். அப்படிப்பட்ட வேடிக்கை கதைப்பாட்டுத்தான் ''பொய் சொல்லாதே'' என்பதாகும். பிள்ளைகளும் சிறுவயதிலிருந்தே உண்மை பேசிப் பழக வேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். இந்தப் பாட்டை நாமும் பாடி, பொய் சொல்வதால் வரும் தீங்கையறிந்து, உண்மையைப் பேசி, எச்சந்தர்ப்பத்திலும் பொய் சொல்லக் கூடாது என்பதை உணருவோம்.

## (வேடிக்கைக் கதைப் பாட்டு)

இராசா வீட்டின் முற்றமதில்
நனைந்த சீனி காய்ந்ததுவே
இராமன் அங்கே போயிருந்தான்
காய்வது என்ன பொருள் என்றான்

இராசா மலையின் மண்ணென்றார்
இராமன் எழுந்து போய்விட்டான்
இராசா தனக்குப் பொய்சொன்னார்
என்றே இராமன் யோசித்தான்

போன இராமன் யோசனையில்
புத்தி ஒன்று புகுந்ததுவே
தானே அந்தச் சீனிஎல்லாம்
தின்று தொலைக்க வழிகண்டான்

மகனை அழைத்தே இதுசொல்வான்
மன்னன் வீட்டில் நான் இருப்பேன்
வடக்கன் மாடு செத்ததென்று
வந்தங் கெனக்குச் சொல்லென்று

மன்னன் வீட்டில் அவன்இருக்க
மகனும் எழுந்தே ஓடிவந்தான்
என்ன மகனே அழுகின்றாய்
என்று ராமன் கேட்டிடவே

எங்கள் எருது வலிவந்து
இறந்து விட்ட தென்றுசொல்ல
அங்கே இராமன் அதுகேட்டு
அலறி விழுந்தான் சீனியின்மேல்

ஆசை எருது போயிற்றே
ஐயோ ஐயோ இனிஎனக்கு
வாய்மண் வாய்மண் என்றுசொல்லி
காயும் சீனி தனை அள்ளி

வாரி அடைந்தான் வாய்க்குள்ளே
வயிறும் நிரம்பி விட்டதுவே
மகனும் உனக்கும் உன்தாய்க்கும்
வாய்மண் போட என்றுசொல்லி

அள்ளிக் கொடுத்தான் சீனிஎல்லாம்
அரசன் சீனி தொலைந்ததுவே
பள்ளிப் பிள்ளைகள் கேட்டீரோ?
பகிடிக்கும் பொய் சொல்லாதீர்.

**அரும்பதங்கள்**

முற்றம் - வீட்டின் முன்பகுதி
வாய்மண் - ஏமாற்றம் / இறந்தவர்களுக்கு கடைசியில் போடும் மண்
பகிடி - நகைச்சுவை

**கிரகித்தல் பயிற்சி**

1. இராசா வீட்டின் முற்றத்தில் காய்ந்த பொருள் என்ன?
2. இராமன், இராசா வீட்டின் முற்றத்தில் காய்வது என்ன பொருள் என்று கேட்ட பொழுது இராசா சொன்ன பதில் யாது?
3. இராமன் சீனி எல்லாம் தின்று தொலைக்கக்கண்ட வழி என்ன?
4. இந்தப்பாட்டைப்படித்த பொழுது உங்கள் மனதில் தோன்றியவற்றை எழுதுக.

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

1. இது போன்ற நாட்டார் பாடல்களைத் தொகுத்து எழுதுக.
2. இக்கதைப்பாடலை உமது சொந்த நடையில் எழுதுக.
3. இதில் உள்ள விழுமியக் கருத்துக்குப் பொருந்தக்கூடிய பழமொழிகள் ஐந்தைத் தேடி எழுதுக.

# வினைச் சொல்

**உண், வா, போ, பாடு, தா**
**உண்டான், வந்தான், பாடினான், தந்தான்**
**உண்ட, வந்த, போன, பாடிய, தந்த**
போன்ற சொற்களை வினைச் சொற்கள் என்பர்.

இச்சொற்களை நோக்கும் போது ''வினையென்பது ஒரு செயலைக் குறிக்கும்'' என்பது புலனாகின்றது. வினைச்சொல்லின் சிறப்பியல்பு காலங் காட்டுவதாகும்.

உ-ம்:

| | | |
|---|---|---|
| உண்டாள்<br>வந்தாள் | } | இறந்தகாலம் |
| உண்கிறாள்<br>வருகிறாள் | } | நிகழ்காலம் |
| உண்பாள்<br>வருவாள் | } | எதிர்காலம் |

வினைச்சொற்கள் பல முக்கிய இயல்புகளைக் கொண்டிருக்கும். அவற்றுள் சில பின்வருமாறு:

- ★ வினைச்சொல் செயலை உணர்த்தும்.
- ★ வினைச் சொல் காலம் காட்டும்.
- ★ வினைச் சொற்கள் வேற்றுமை உருபை ஏற்றுக்கொள்வதில்லை.
- ★ வினைச் சொற்கள் ஏவற் பொருளில் வரும்.

**பயிற்சி**

1. வினைச்சொற்களுக்கான வரைவிலக்கணத்தைக் கூறுக.
2. ''பொய் சொல்லாதே'' என்ற பாடல் பகுதியிலிருந்து வினைச் சொற்களைத் தொகுத்து எழுதுக.
3. வினைச் சொற்களின் இயல்புகள் நான்கினைத் தருக.

# 17 வீழ்ந்த ஆலமரம்

வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பார்கள். நிழலைத் தருவன மரங்கள். மரங்கள் நிறைந்திருப்பது சோலை ஆகும். மரங்களில் ஆலமரமும் ஒன்று. இது மிகப் பெரிய மரமாய் வளர்ந்து குளிர்ந்த நிழலைத் தருவது. கிளைவிட்டு, விழுதுவிட்டு பரந்த அளவில் விசாலமாய் வளரக் கூடியது. ஆலமரத்தின் பழம் மிகச் சிறிது. அம்மரத்திலே பல உயிரினங்கள் குடியிருக்கும். ஆலமரத்துக்குத் தமிழ்த் தாத்தா உ. வே சாமிநாத ஐயர் அவர்களை உவமித்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மேலும் கட்டுரையில் தமிழ்த்தாத்தாவின் தமிழ்ப்பற்று விதந்துரைக்கப்பட்டுள்ளது.



எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடத்தின் அருகில் சாலை ஓரத்தில் ஆலமரம் ஒன்று வானோங்கி வளர்ந்திருந்தது. அதன் கிளைகள் நாலாபுறமும் விசாலமாகத் தழைத்து விழுது விட்டு நெடுந்தூரம் பசுமையாகப் படர்ந்து குளிர்ந்த நிழலைத் தந்து வந்தன. வெய்யில் காலத்தில் மத்தியான நேரத்தில் ஆயிரக்கணக்கான பட்சிகள் அந்த ஆலமரத்தில் தங்கி விதவிதமான குரல்களில் இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருக்கும். ஊதாச் சிவப்பு நிறம் வாய்ந்த ஆலங்கனிகள் முழுசாகவும் பட்சிகளால் பாதி கொத்தித் தின்னப் பட்டவையாகவும் தரையெல்லாம் உதிர்ந்து கிடக்கும் காட்சி கண்களுக்கு விருந்தாயிருக்கும்.

அந்த ஆலமரம் இருந்த இடமானது இப்போது வெறுமையாயிருக்கிறது என்பதை எண்ணும்போது என் கண்களில் நீர் துளிக்கிறது. ஆம் சில வருடங்களுக்கு முன்னால் அடித்த பெரும் புயல்காற்றில் அந்த ஆலமரம் விழுந்து விட்டது. லோகல் பண்டு இலாகா உத்தியோகத்தர்கள் அதை ஏலம் போட்டார்கள். ஏலம் எடுத்தவன் மரத்தைத் துண்டுதுண்டாய் வெட்டி எடுத்துக்கொண்டு போய் விட்டான். புயல் அடித்த சிறிது காலத்துக்குப் பிறகு நான் எங்கள் கிராமத்துக்குப் போனபோது அந்த ஆலமரம் இருந்த இடத்தில் ஒரு பெரிய குழி இருப்பதைக் கண்டேன். அந்தக் காட்சி என்னை என்னவோ செய்தது. அந்த உணர்ச்சியை என்னால் விவரிக்க முடியாது.

எங்கள் கிராமத்தைப் போலவேதான் தமிழுலகம் இன்று வெறிச்சிட்டுப் போயிருக்கிறது. விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு வளர்ந்திருந்த ஆலமரம் வீழ்ந்ததைப் போல தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார். திருவட்டீசுவரன் பேட்டை தியாகராஜ விலாசத்தின் மேல்மாடியில் தமிழ்த் தாத்தா இன்று இல்லை; படுத்த வண்ணம் ஓலைச் சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை என்பதை நினைத்தால் நெஞ்சை என்னவோ செய்கிறது. தமிழ்த் தாத்தா போய்விட்டார். அவருடைய ஸ்தானம் இனி எக்காலத்தில் பூர்த்தியாகப் போகிறது?

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அவர் அப்படிப்பட்ட தொண்டைச் செய்து வந்தார். அத்தகைய தொண்டை இதற்கு முன் யாரும் செய்ததுமில்லை. இனிமேல் செய்யப்போவதுமில்லை. அவருடைய மரணத்தினால் தமிழுலகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நட்டம் பூர்த்தி செய்ய முடியாத நட்டமேயாகும்.

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அநேகர் பெயரளவில் மட்டும் கேள்விப்பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியங்களை அவர் கண்டுபிடித்து அச்சேற்றித் திருத்தமான உயர்ந்த பதிப்புகளாக வெளியிட்டார். அவற்றில் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, பத்துப்பாட்டு என்னும் நூல்கள் முக்கியமானவை. இந்த நூல்களைக் கண்டுபிடித்து வெளியிடும் முயற்சியில் அவர் அடைந்த

சிரமங்களுக்கு அளவேயில்லை. எத்தனையோ வித எதிர்ப்புகளும், எதிரிகளும் அவருக்கு ஏற்பட்டார்கள். அவருடைய எதிரிகளில் முக்கியமான எதிரி கறையான்! கறையான் படைகளுடன் அவர் நடத்திய போரை ஓரிரு வார்த்தைகளில் எழுத முடியாது. புகையிரத பாதைக்கு வெகுதூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், ஏதோ ஒரு வீட்டின் பரணில், ஓர் ஓலைச்சுவடி கிடக்கும். இதை ஆகாரமாக உட்கொண்டு விடுவதென்ற தீர்மானத்துடன் கறையான் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கும். இதே சமயத்தில் மேற்படி ஓலைச்சுவடி மேற்படி வீட்டுப் பரணில் இருப்பதனை எப்படியோ தெரிந்து கொண்டு விடுவார். புகையிரதமோ, கட்டை வண்டியோ, கால் நடையோ எதுவாயிருந்தாலும் அவருக்கு லட்சியமில்லை. பகல் இராத்திரி என்று பாராமல் ஓடிவருவார்.

கறையான்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவரில் ஏறி, உத்திரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு முன்னேறி, நாளுக்கு நாள் ஓலைச் சுவடியை நெருங்கிக்கொண்டிருக்கும். இதோ ஓலைச்சுவடி கிடக்கும் இடம் அவற்றின் பார்வைக்கு வந்துவிட்டது.

‘பேஷ்! பல நாளைக்கு ஆகாரம் ஆயிற்று’ என்று அவை கும்மாளம் அடித்துக் கொண்டு நெருங்குகின்றன. ஓலைச் சுவடியை ருசியும் பார்த்தாகிவிட்டது. நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு அவை சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்குகின்றன. அப்பேர்ப்பட்ட சமயத்தில் அந்த வீட்டைத் தேடி வந்து சேருகிறார் ஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயர். வீட்டு எஜமானைப் பார்த்து, ‘ஐயா! உங்கள் வீட்டில் பழைய ஓலைச் சுவடி ஒன்று இருக்கிறதாமே?’ என்று கேட்கிறார்.

‘பரண் மேலே கிடந்தது. எதற்குக் கேட்கிறீர்கள்?’ என்கிறார் வீட்டுக்காரர்.

அவரிடம் ஸ்ரீ சாமிநாத ஐயர் பழந்தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பற்றிப் பேசி, ஓலைச் சுவடியைப் பார்க்க வேண்டும் என்கின்றார். இதற்குள் சுவரில் உள்ள கறையான் கூட்டின் மேல் ஸ்ரீ சாமிநாத ஐயரின் பார்வை விழுகிறது. ‘ஐயையோ! பரண் மேல் கறையான் ஏறிக் கொண்டிருக்கிறதே! சுவடி போய்விடப் போகிறதே! உடனே பார்த்தால் தேவலை’ என்கிறார் சாமிநாத ஐயர்.

அவருடைய பதைபதைப்பை வீட்டுக்காரர் பார்த்துவிட்டு, பரண்மேல் ஏணி வைத்து ஏறி ஓலைச்சுவடியை எடுத்துக் கீழே போடுகிறார்.

சுவடியின் ஓரங்களில் கறையான் வாய் வைத்திருக்கும் அடையாளங்கள் தெரிகின்றன.

ஸ்ரீ சாமிநாத ஐயர் அதை அவசரமாக உதறி எடுத்துத் தம் சிரம் மீது வைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

பிறகு ஓலைச்சுவடியைப் பிரித்துப் பார்க்கிறார். ஐயரின் கண்கள் விரிகின்றன. வியப்பினால் அல்ல அளவிலாத ஏமாற்றத்தினால்! ஏனெனில், அவர் தேடிவந்த பழந்தமிழ் நூல் ஒன்றும் அந்த ஓலைச் சுவடியிலில்லை. சமீப காலத்தில் எழுதப்பட்ட உபயோகமற்ற ஸ்தலபுராணம் அது. ‘இவ்வளவுதானா?’ என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறார். ‘இதுவும் ஒரு மூலையில் கிடக்கட்டும்; ஏதாவது பிரயோஜனப்படும்’ என்று எண்ணி ஓலைச் சுவடியை எடுத்துக் கொண்டு கிளம்புகிறார். எங்கே? இன்னொரு ஊரில் இன்னொரு வீட்டுப் பரணில் கிடக்கும் இன்னொரு ஓலைச் சுவடியைத் தேடிக் கொண்டுதான்!

தமிழன்பு என்பது இந்தக் காலத்தில் தமிழ் மக்களிடையே பரந்து பரவியிருக்கிறது. ‘தமிழன்பு’ பற்றி அடிக்கடி பேசுகிறோம்; எழுதுகிறோம்; தமிழுக்குத் தொண்டு செய்கிறவர்களைப் பாராட்டுகிறோம். அத்தகைய பாராட்டுக் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடுகிறார்கள்; ஆரவாரிக்கிறார்கள்.

டாக்டர் சாமிநாத ஐயர் தமிழ்த் தொண்டு ஆரம்பித்த காலத்தில் இப்படிப்பட்ட தூண்டுதல் ஒன்றுமே கிடையாது. எங்கேயாவது அத்தி பூத்தது போல் ஒரு ஜமீன்தார், ஒரு மடாதிபதி தமிழபிமானம் கொண்டவராயிருந்து தமிழ்த் தொண்டைப் பாராட்டுவார். அவரிடம் ஒடுக்கத்துடன், நல்ல சமயம் பார்த்துப் போய் நிற்க வேண்டும். மற்றபடி தமிழ்த் தொண்டுக்கு அந்நாளில் கௌரவம் கிடையாது. தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் ஆங்கில இராணியின் முன்னால் கைகட்டி நின்று பணிவிடை செய்த காலம். அத்தகைய காலத்தில் டாக்டர் சாமிநாத ஐயர் தமிழ்த் தொண்டைத் தொடங்கினார். இடை விடாமலும் சோர்வடையாமலும் செய்து வந்தார். தமிழன்பு என்பது,

பணியில் ஆர்வமானது அவருடைய சதை நரம்புகளில் கலந்து, மூச்சு விடுவதைப் போல் இயற்கையோடு இயற்கையாய்ச் சேர்ந்திருக்க வேண்டும். அத்தகைய தமிழன்பரை - தமிழ்த் தொண்டரை - இனி எங்கே காணப் போகிறோம்?

**கல்கி.**

**அரும்பதங்கள்**

சாலை - வீதி
விசாலம் - பரந்து
பட்சிகள் - பறவைகள்
கும்மாளம் - சந்தோஷம், ஆனந்தம்
லோகல்பண்டு இலாகா - உள்ளூர் வருவாய் திணைக்களம்
ஆகாரம் - உணவு
ஓலைச்சுவடி - பழங்காலத்தில் பனை ஓலையில் எழுதியவை
பதைபதைப்பை - அவசரத்தை
பரண் - பொருட்களை வைப்பதற்கு அமைக்கப்பட்ட மேல் தட்டு
சிரமீது - தலை மீது
ஸ்தலபுராணம் - கோயில் வரலாறு

**கிரகித்தல் பயிற்சி**

1. ஆலமரம் பற்றிய வர்ணிப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
2. ஆலமரத்தில் வெயில் காலத்தில் தங்கி குரல் எழுப்புவன என்று எவை குறிப்பிடப்பட்டுள்ளன?
3. ஆலமரப் பழத்தின் நிறம் எது என்று குறிப்பிடப்படுகின்றது?
4. ஆலமரம் எதனால் வீழ்ந்தது?
5. ஆலமரம் வீழ்ந்தது எவருடைய இறப்புக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது?
6. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அச்சேற்றிய தமிழ் இலக்கியங்கள் எனக் கூறப்படுவன எவை?
7. உ. வே. சாமிநாதய்யரின் முக்கிய எதிரி என்று கூறப்படுவது யாது?
8. இக்கட்டுரையில் காட்டப்படும் உவமைத் தொடரொன்றை எடுத்துக் காட்டி விளக்குக.
9. உ.வே. சாமிநாதய்யர் தமிழுக்கு செய்த தொண்டு பற்றி கட்டுரை வரைக.

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

1. குழுவாகப் பிரிந்து மரங்களாக உங்களை உருவகித்து, மரங்களின் நன்மைகள் என்ற தலைப்பில் நாடகம் நடிக்க.
2. மரங்களின் பெயரைக் கொண்டு பன்னிரண்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.

# வேற்றுமை

வாக்கியத்தில் பெயர்ச்சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவது வேற்றுமை எனப்படும்.

★ இலக்கியா பாடினாள்.
★ இலக்கியாவைப் போன்றவள்.
★ இலக்கியாவினால் எழுதப்பட்டது.
★ இலக்கியாவின் கவிதை.
★ இலக்கியாவினது புத்தகம்.

இவ்வாக்கியங்களில் இலக்கியா என்னும் பெயர்ச்சொல் வினைச் சொற்களுடன் கொண்டுள்ள தொடர்பு எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதைப் பாருங்கள்.

- வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியவையாகும். பெயர்ச்சொற்களின் இறுதியில் இவ்வாறான உருபுகள் வந்து அல்லது மறைந்து நின்று இலக்கணத் தொழிற்பாட்டை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும்.

- பெயர்சொற்களின் சிறப்பு வேற்றுமை உருபுகளை ஏற்பது.

- ஒவ்வொரு வேற்றுமைக்கும் தனித்தனி உருபுகளும் பொருளும் உண்டு. சில வேற்றுமைகளுக்கு சொல்லுருபுகளும் உண்டு.

## முதலாம் வேற்றுமை

பெயர்ச்சொல் ஒரு வாக்கியத்தின் எழுவாயாக வருமானால் அது முதலாம் வேற்றுமை எனப்படும். இதனை எழுவாய் வேற்றுமை என்றும் அழைப்பர். இவ் வேற்றுமைக்கு உருபு கிடையாது. ஆனால் சொல்லுருபுகள் உண்டு.

உ - ம் - தமிழினி வந்தாள்.
சூரியன் உதித்தான்.

**சொல்லுருபுகள்** -
என்பவள், என்பவன், என்பவர், என்பது, என்பவை, ஆனவன், ஆனவள்.

உ - ம் தமிழினி என்பவள் வந்தாள்.

## இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை உருபு ''ஐ'' ஆகும். இவ்வுருபானது செயப்படுபொருளை உணர்த்தி வருவதனால் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் அழைக்கப்படும். இவ் வேற்றுமை பின்வரும் ஆறு பொருளை உணர்த்தும்.

ஆக்கல் - வீட்டைக் கட்டினான்
அழித்தல் - கதிரையை உடைத்தான்
அடைதல் - பாடசாலையை அடைந்தான்
நீத்தல் - ஊரை விட்டுச் சென்றான்
ஒத்தல் - மலரைப் போன்றவள்
உடைமை - பணத்தை வைத்திருந்தான்

## மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், ஒடு, ஓடு முதலியன கொள்ளப்படுகின்றன. இவற்றுள் ஆல், ஆன் ஆகியன கருவி கருத்தா பொருளையும் ஒடு, ஓடு ஆகியன உடனிகழ்ச்சிப் பொருளையும் உணர்த்தி வரும்.

உ - ம் கத்தியால் வெட்டினான் - ஆல் - கருவிப் பொருள்
மந்திரியால் கட்டப்பட்ட கோயில் - ஆல் - கருத்தாப் பொருள்
தந்தையோடு மகள் சென்றாள் - ஒடு - உடனிகழ்ச்சிப் பொருள்

இவ்வேற்றுமைக்கு கொண்டு, உடன் என்ற சொல்லுருபுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

உ - ம் - கத்தி கொண்டு வெட்டினான்.
தந்தையுடன் மகள் சென்றாள்.

- வேற்றுமை உருபுகள் வெளிப்படாமல் நின்று தொழிற்படுவதும் உண்டு.

வெளிப்பட்டு நின்றால் வேற்றுமை விரி என்பர்
உ - ம் வீட்டைக் கட்டினான்.
வீடு + ஐ = வீட்டை

வெளிப்படாமல் நின்றால் வேற்றுமைத் தொகை என்பர்.
உ - ம் வீடு கட்டினான்.

**பயிற்சி**

1. வேற்றுமை என்றால் என்ன?
2. முதலாம், இரண்டாம், மூன்றாம் வேற்றுமை உருபுகளைக் கூறுக.
3. முதலாம் வேற்றுமையை வேறு எப்பெயரால் அழைப்பர்?
4. இரண்டாம் வேற்றுமைப் பொருள்களைக் கூறுக.
5. மூன்றாம் வேற்றுமை எப்பொருள்களை உணர்த்தும்?
6. வேற்றுமை உருபு, வெளிப்பட்டும் வெளிப்படாமலும் நின்று தொழிற்படுவதற்கு மூன்று உதாரணம் தந்து விளக்குக.

# 18 பிள்ளை அழுத கண்ணீர்

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பனவற்றை முத்தமிழ் என்பர். நாடகம் முன்பு செந்தமிழில் நடிக்கப்பட்டது. இப்பொழுது பேச்சுத் தமிழிலும் நடிக்கப்படுகின்றது. பிள்ளை அழுத கண்ணீர் பேச்சுத் தமிழில் அமைந்த நாடகமாகும். மாணாக்கர் இந்நாடகத்தை வாசித்து, நடித்து நாடக ஆக்கச் செயற்பாட்டிலும் ஈடுபட்டு மகிழலாம்.

(திரை மூடி இருக்க, கடுங்கோடையை வெளிப்படுத்தும் சத்தங்கள் மேடையில் கேட்கத் தொடங்கும். திரை விலகத் தொடங்கியபின் மேடையை ஒட்டி இடமிருந்து வலமாக சூரியனை ஏந்தியபடி சிறுவனொருவன் துள்ளித்துள்ளி நகர்வான். சத்தங்கள் ஓய்ந்து, சூரியனும் பின் வலது மேடையில் நிலை கொள்ள..)



எலி - *பிள்ளைக்கு வைச்ச பாலைக் குடிச்ச கொடும் பாவி, மாபாவி நானே. இப்ப என்ன செய்றது.. பிள்ளையோ வீரிட்டு அழுகிறது.. பாலுக்கு எங்க போக.. ஆ.. ஆடக்காட்டப் போவம். (போதல்)*

ஆடு - என்ன எலித் தம்பியார், ஏன் விழுந்தடிச்சு ஓடிவாறீர்?

எலி - கொஞ்சம் பால் தாறியளா?

ஆடு - ஏன் உமக்கு இப்ப பால்?

எலி - அங்கையொரு பிள்ளைக்கு வைச்ச பாலை எடுத்துக் குடிச் சிட்டன். நித்திரையால எழும்பின பிள்ள பாலில்லாமல் அழமெண்டு அழுதுகொண்டிருக்கு.

ஆடு - ஐயோ தம்பி நல்ல குழை திண்டு கன நாளாச்சு. ஏதோ சருகு களை மேஞ்சு உயிரைப்பிடிச்சு வைச்சிருக்கிறன். பாலுக்கு எங்க போவன் தம்பி?

எலி - ஆ .. அப்ப நானிப்ப என்ன செய்றது?

ஆடு - தம்பி, நீ ஒன்று செய்யன்?

எலி - என்ன?



ஆடு - எனக்கு நல்ல புல்லுத்தா...

எலி - புல்லுத் தந்தால் பால் தருவியா?

ஆடு - ஓ... நான் கட்டாயம் தருவன்.

எலி - அப்ப சரி, நான் புல்லோட வாறன். ஆடக்கா, நான் போட்டு வாறன்.

ஆடு - ஓம் தம்பி போட்டு வாரும்.
(எலி துள்ளிப் பாய்ந்து ஓடுதல்)

ஆடு - கவனம்.. கவனம்

எலி - புல்லுக்கு இப்ப எங்க போவம், ஆ ... வயலம்மாட்டப் போவம். (போதல்)

எலி - வயலம்மா.. வயலம்மா...

வயல் - என்ன ராசா, ஏன் துடிச்சுப் பதைச்சு ஓடிவாறீர்? பூனையார் துரத்தினாரோ?

எலி - சீ, அதொண்டுமில்ல, இப்ப எனக்கொரு உதவி செய்வியளே?

வயல் - என்ன உதவி ராசா நான் உனக்குச் செய்ய?

எலி - வயலம்மா எனக்கு கொஞ்சம் புல்லுத் தருவியளே?

வயல் - என்ன ராசா, கண்ணால பார்க்கிறா தானே என்ர கண்றாவிக் கோலத்தை, தண்ணியில்லாமல் நான் காஞ்சு போயிருக்கிறன். என்னட்ட வந்து புல்லுக் கேட்டால் நான் எங்க போறது புல்லுக்கு?

எலி - நானிப்ப புல்லுக்கு என்ன செய்றது? பிள்ளை அழுதுகொண்டே இருக்கும்.

வயல் - என்ன பிள்ள அழுதுகொண்டு இருக்குதோ?

எலி - ஓ.. அங்கையொரு பிள்ளைக்கு வைச்சிருந்த பாலை எடுத்துக்

குடிச்சிட்டன். ஆட்டக்காட்டப் பாலுக்குப் போக, அவ புல்லுக் கேட்டா.

வயல் - அப்ப ஒண்டு செய் ராசா.. எனக்குக் கொஞ்சம் தண்ணி தந்தியெண்டால் நானுனக்குப் புல்லுத் தாறன்.

எலி - அப்ப தண்ணி தந்தால் புல்லுத் தருவியளே?

வயல் - ஓ.. என்ர ராசாக்கில்லாத புல்லோ?

எலி - உண்மையாய்த் தருவியளோ?

வயல் - பிள்ளைக்கு நான் நிறையப் புல்லுத் தருவன்.

எலி - வயலம்மா, அப்ப நான் போய் தண்ணி கொண்டு வாறன் என்ன?

வயல் - ஓம் ராசா போட்டு வாங்கோ பத்திரம் பத்திரம்.

எலி - ஓமம்மா போட்டு வாறன். (போதல்)

எலி - ம்.. இப்ப நான் எங்க தண்ணிக்குப் போவம்? ஆ! குளத் தாத்தாட்டப் போவம். ('டொங்' என்று பாய்தல்)

குளம் - என்னடா? திடுக்கிட்டெல்லே போனன். ஏனிப்ப துள்ளிப் பாஞ்சு வந்து நிக்கிறா?

எலி - அதொரு பெரிய கதை தாத்தா.

குளம் - துள்ளிக் குதியாம அத முதலில் சொல்லும்.

எலி - தாத்தா.. தாத்தா.. அங்கையொரு பிள்ளைக்கு வைச்சிருந்த பாலை நானெடுத்துக் குடிச்சிட்டன். பிள்ளை அழழெண்டு அழுகுது. ஓரிடமும் பாலில்ல. தாத்தா தாத்தா பாலுக்கு

ஆடக்காட்டப் போனன் அவ சொன்னா, புல்லுத் தந்தால் பால் தாறனெண்டு. வயலம்மாட்டப் போனன். அவ சொன்னா தண்ணி தந்தா புல்லுத் தாறதெண்டு. அதுதான் உங்களிட்ட ஓடி வந்தனான். தாத்தா கொஞ்சம் தண்ணி தாறியளே?

குளம் - தண்ணியோ? நானிப்ப எங்க போறது தண்ணிக்கு?

எலி - எப்பிடியாவது எனக்கு கொஞ்சம் தண்ணியாவது தரவேணும். தாத்தா தாத்தா ஓமண்டு சொல்லுங்கோ. ஓமண்டு சொல்லுங்க தாத்தா பாத்தியளே.

குளம் - அட நீயொண்டு என்ர கதையைக் கொஞ்சம் கேளன், என்ர கதையைக் கேளாம ஆக்கினைப் படுத்துறாய்.

எலி - சரி சொல்லுங்கோ கேக்கிறன்..

குளம் - குளக்கட்டெல்லாம் உடைஞ்சு போய்க்கிடக்கு. அதால தண்ணியெல்லாம் வீணாய்ப் போச்சு.
*(மக் மக் என்று கத்தியபடி தவளை பாய்தல்)*

எலி - இதென்னடா இது? அட தவளைக் குஞ்சாரே..

தவளை - என்ன எலிப் பிள்ளையார் இந்த வெயிலுக்குள்ள எங்க வெளிக்கிட்டீர்?

எலி - தண்ணி தேவையாயிருந்தது. அதுதான் வந்தனான்.

தவளை - *(மக் மக் என்று சிரித்தல்)*

எலி - ஏன் சிரிக்கிறீர்?

தவளை - தண்ணியோ நல்ல கதைதான் அது. நாங்களே இஞ்ச தண்ணியில்லாமல் கிடந்து சாகிறம். *(கொக்கக்கா பறந்து வந்து குதித்தல், திடுக்கிட்டுத் திரும்பி)* ஆ கொக்கக்கா வாங்கோ வாங்கோ.

எலி - என்ன காஞ்சு போய் இருக்கிறியள்?

கொக்கு - குளம் குட்டையில தண்ணியில்லை. வெயில் வெக்கையில வத்திப் போச்சு.

தவளை - எலிக் குஞ்சார் இஞ்ச பாரும் முதுகை வேர்க்குருப் பரு போட்டு, ஒரே கடி.

கொக்கு - ஓ ஒரே வெக்க.

எலி - அட கொஞ்சம் பொறுங்கோ. வந்த காரியத்தை மறக்கப் பார்த்தன் தாத்தா. என்ன தாத்தா அச்சாப் பிள்ளையல்லே கொஞ்சம், கொஞ்சமாவது தண்ணி தாங்கவன்.

குளம் - அப்ப ஒண்டு செய் கொத்தனாரைக் கூட்டியந்து குளக்கட்டைத் திருத்தி விட்டியெண்டா நானுனக்குத் தண்ணி தாறன்.

எலி - அப்ப சரி. இருந்து கொள்ளுங்கோ நான் போய் கொத்தனாரைக் கூட்டி வாறன். இந்தா இப்ப வாறன்.

குளம் - டேய் டேய் அவசரப்பட்டு ஓடாம ஆறுதலா பக்குவமா போட்டு வா.

எலி - ‘ரற்றா’ தாத்தா ‘ரற்றா’

குளம் - ஓம் ராசா போட்டு வா ‘ரற்றா’.

எலி - இப்ப நான் கொத்தனாரிட்ட போக வேணும். கொத்தனார எங்க தேடிப் பிடிக்கலாம்.. ஆ.. கொத்தனார் கொத்தனார்..

கொத்தனார் - என்ன எலிப் பிள்ளையார், என்ன விசயம்?

எலி - கொத்தனார்! எனக்கு ஒரு உதவி செய்வியளே?

கொத் - என்ன உதவி உனக்கு நான் செய்ய?

எலி - குளக்கட்டு ஒண்டு திருத்த வேணும் திருத்தித் தருவியளே?

கொத் - ஓ.. அதுக்கென்ன? கட்டிறது பெரிய விசயமில்ல கல்லு, சீமேந்து, மரமொண்டுமில்ல அதால நானும் வேலவெட்டி இல்லாம இருக்கிறன்.

எலி - இப்ப என்ன செய்ய?

கொத் - ஒண்டு செய்யன்.

எலி - என்ன செய்ய?

கொத் - கல்லுத் தந்தீரெண்டால் குளக்கட்டத் திருத்தித் தாறன்.

எலி - ஆ! அப்ப நான் கல்லோட வாறன்.

கொத் - ஓம் வாரும் பிள்ளைக்கு கட்டாயம் உதவி செய்வன்.

எலி - கல்லுக்கு இப்ப நான் எங்க போறது?
(கடுமையாக யோசித்தல்.. தவளை, ஆடு, கொக்கு ஆகியவற்றின் சத்தங்கள் யோசனையைக் குழப்ப)

எலி - (கோபத்துடன்) இஞ்ச, கொஞ்சம் சத்தம் போடாமல் இருங் கோப்பா.. என்னக் கொஞ்சம் யோசிக்க விடுங்கோப்பா..
(அனைவரும் இரைச்சலாக சிரித்தல்)

எலி - (கோபத்துடன்) சொல்லுறன்!

கொக்கு - சரி நாங்கள் சத்தம் போடாமல் இருக்கிறம் நீர் நல்லா யோசியும்.

எலி - (யோசித்துவிட்டு) மலை மாமாட்டப் போவம் அவரிட்டத்தான் கல்லெடுக்கலாம். (போதல்)

எலி - மலை மாமோய்..! மலை மாமோய்...!

மலை 1 - ஆரோ கூப்பிட்டுக் கேக்குது போல இருக்கு.

மலை 2 - ஓ.. எனக்கும் கேக்குது.

மலை 1 - ஒருக்கா எட்டிப் பாரும் ஆரெண்டு.

எலி - மலை மாமோய்.

மலை 2 - ஆரது?

எலி - அது நான்.

மலை 1 - (திரும்பி மலை 2 இடம்) அது நானாம்.

மலை 2 - நானெண்டா?

எலி - நான் தான் எலித் தம்பி.

மலை 1 - அட நீயா வா வா.

மலை 2 - என்ன விசயம்?

எலி - எனக்குக் கொஞ்சம் கல்லுத் தேவையாக்கிடக்கு அதுதான் வந்தனான்.

முலை - என்னத்துக்கு இப்ப கல்லு?

எலி - எனக்குப் பசி.

மலை 1 - அதுக்கேன் கல்லு?

மலை 2 - அதுதானே!

எலி - கொஞ்சம் பொறுங்கோவன் நான் சொல்லி முடிய முன்னம்..

மலைகள் - சரி சரி சொல்லும்.

எலி - அங்கையொரு பிள்ளைக்கு வச்ச பால எடுத்துக் குடிச்சிற்றன்.

மலை 1 - பால் உடம்புக்கு நல்லது தானே?

மலை 2 - அதுதான் மலையேறி எலியார் விளையாட வந்திருக்கிறார்.

எலி - சும்மா கடிக்காதிங்கோப்பா.

மலை 1 - ஆர் நாங்களா கடிக்கிறது?

மலை 2 - நீரெல்லோ கடிக்கிறனீர்?

எலி - ஐயோ கடவுளே இது பெரிய ஆக்கினையாப் போச்சு.

மலை 1 - சரி.. சரி சொல்லு இனி நாங்க குழப்ப மாட்டம்.

மலை 2 - சும்மா உன்னோட விளையாட்டு.

எலி - மலைக்கு விளையாட்டு எலிக்கு சீவன் போகுது.

மலை 2 - அதுதானே.

எலி - இஞ்ச நான் சொல்றதக் கேட்கப் போறியளோ இல்லையோ?

மலை 1, 2 - கேட்கிறம்தானே சொல்லுமன்.

எலி - அங்கை, ஒரு பிள்ளைக்கு வைச்ச பாலை எடுத்துக் குடிச்சிற்றன். நித்திரையால எழும்பின பிள்ளை, அழழழெண்டு பால் கேட்டு.....

ஆடக்கா - எலித் தம்பியார் என்னிட்ட வந்தவர்.

எலி - அவ சொன்னா புல்லுத் தந்தா பால் தாறதெண்டு.

மலை - பிறகு புல்லுக்கு..?

வயலம்மா - மலைத்தம்பி மலைத்தம்பி எலிப்பிள்ளையார் என்னிட்ட வந்தவர்.

எலி - அவ சொன்னா தண்ணி தந்தா புல்லுத் தாறதெண்டு.

மலை 2 - பிறகு?

எலி - தண்ணிக்கு..

குளத்தாத்தா - தம்பி என்னட்டைத்தான் வந்தவன்.

மலை 1 - அதுக்கு அவர் என்ன சொன்னார்?

குளத்தாத்தா - குளத்தைத் திருத்தி விட்டால் தண்ணி தாறனெண்டு சொன்னன்.

மலை 2 - பிறகு?

எலி - கொத்தனாரிட்டப் போனன் குளத்த திருத்தித் தரச் சொல்லிக் கேட்க.

கொத்தனார் - ஓமோம் பிள்ளை என்னிட்டத்தான் வந்தவன்.

எலி - அவர் கல்லுக் கேட்கிறார்; அதுதான் நான் இப்போ உங்களிட்ட வந்தனான் கல்லு வாங்கிக் கொண்டு போக.

(குழந்தை அழுதல்)

மலை 1 - எங்களுக்கு மேல இருந்த மரங்களையெல்லாம் வீடு கட்ட எண்டும், விறகுக்கென்றும் கண்ட படி தறிச்சுக்கொண்டு போயிட்டுதுகள்.

மலை 2 - கல்லெல்லாம் வெளியில தெரியுது. ஒரே வெக்கை.

மலை 1 - அது போதாதென்று கல்லுகளையும் எடுத்துக் கொண்டு போனா நாங்களே இல்லாமல் போயிருவம்.

மலை 2 - பெஞ்ச மழையோட எங்களை மூடியிருந்த மண்ணெல்லாம் அள்ளுப் பட்டு போச்சு.

மலை 1 - இனி ஒரு புல்பூண்டு கூட வளரேலாது.

எலி - நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். அந்தப் பிள்ளை வளர்ந்து பெரியாளானதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்கும். உங்களோடு அன்பாய் இருக்கும்.

மலை 2 - எங்களுக்கு அதுதான் விருப்பம் நாங்கள் நிறையக் கல்லுத் தருவம்.

மலை 1 - எல்லாப் பிள்ளையளிட்டையும் சொல்லுங்கோ நிறைய மரங்களை நடச் சொல்லி என்ன?

எலி - எல்லாரும் நிறைய மரம் நட்டு வளர்ப்பம்.

மலை 1, 2 - அப்ப இந்தாரும் கல்லு.

எலி - கூய்..... விலகுங்கோ..... விலகுங்கோ..... கல்லு வருது தவளைக்குஞ்சார் அங்கால பாயும்.

தவளை - அருந்தப்பு. மிலாந்திக் கொண்டு நின்று கல்லுக்க நெரியப் பார்த்தன்.

மலை 1 - ம் ...... விலகுங்கோ கல்லு வருது.

மலை 2 - எலிக்குஞ்சார், என்ன கல்லுக் காணுமோ?

கொக்கு 2 - இன்னும் கொஞ்சம் உருட்டி விடுங்கோவன்.

எலி - கொத்தனார், இம்... இம்.. வாய்க்காலையும் கட்டுவம்.

கொத்தனார் - தவளைக்குஞ்சார், குளத்துக்க நிண்டு குதியன் குத்தாம
இஞ்ச வந்து உதவி செய்யும்.

தவளை - இந்தா வாறன்.

கொக்கு - வயலுக்கு தண்ணீர் இறைப்போம் வாங்கோ
வயலுக்கு தண்ணீர் இறைப்போம் வாங்கோ
வயலுக்கு தண்ணீர் இறைப்போம் வாங்கோ

**பாடல்**

ஒரு குடம் தண்ணீர் ஊற்ற
ஒரு பூப் பூத்தது
இரண்டு குடம் தண்ணீர் ஊற்ற
இரண்டு பூப் பூத்தது
மூன்று குடம் தண்ணீர் ஊற்ற
மூன்று பூப் பூத்தது
நாலு குடம் தண்ணீர் ஊற்ற
நாலு பூப் பூத்தது

ஐந்து குடம் தண்ணீர் ஊற்ற
ஐந்து பூப் பூத்தது
ஆறு குடம் தண்ணீர் ஊற்ற
ஆறு பூப் பூத்தது
ஏழு குடம் தண்ணீர் ஊற்ற
ஏழு பூப் பூத்தது

எட்டுக் குடம் தண்ணீர் ஊற்ற
   எட்டு பூப் பூத்தது
ஒன்பது குடம் தண்ணீர் ஊற்ற
   ஒன்பது பூப் பூத்தது
பத்துக் குடம் தண்ணீர் ஊற்ற
   பத்து பூப் பூத்தது

எலி - ஆடக்கா, ஆடக்கா ஓடியாங்கோ இஞ்ச கிடக்கு நல்ல புல்லு. நல்லா மேயுங்கோ.

ஆடு - ம்மா ஆ.. அச்சாப்பிள்ளை ஓடிப்போய் ஒரு குவளை கொண்டு வாங்கோ பிள்ளைக்கு நிறையப் பால் தாறன்.

எலி - இந்தா ஓடி வாறன் ஆ, இந்தாரும் குவளை.

ஆடு - இந்தாரும் பிள்ளைக்கு நிறையப் பால்.

எலி - ஆடக்கா மெத்தப் பெரிய உபகாரம் அழுது கொண்டிருக்கும் பிள்ளையிடம் போதல்!

கல்லெடுத்துக் குளமுடைத்தேன் டுண்டுண்டா
குளமுடைத்து நீரெடுத்தேன் டுண்டுண்டா
நீரெடுத்து புல் வளர்த்தேன் டுண்டுண்டா
புல் கொடுத்து பால் எடுத்தேன் டுண்டக்க டுண்டக்க டா

எலி - இந்தாங்கோ குஞ்சு பால்
(அனைவரும் கைதட்டி மகிழல் பிள்ளை மடக் மடக்கெனப் பாலைக் குடித்து குடித்து மகிழ்ந்து முகம் மலர்தல்)

எலி - வாங்கோ பிள்ள நாங்கள் நிறைய மரம் நடுவம்.

பிள்ளை - ஒ என்னட்டையும் ஒரு மரக் கன்று இருக்கு நானும் அதைக் கொண்டு வாறன்.

எலி - சரி வாங்கோ போவம்
பீபீ...... பீப்பீ......

(பிள்ளை மரக் கன்றுடன் மலையை நோக்கி மெல்ல அடிவைத்து நடக்கத் தொடங்கும். மேடையில் வலது கரையில் இருந்து பசிய நிறச் சேலையைப் பிடித்தபடி அனைவரும் மத்திய மேடை நீளத்திற்கு சென்று சீலையைப் பிடித்த வண்ணம் நின்று பாடத் தொடங்குவர்.)

''மழையே மழையே மெத்தப் பெய்
மண்ணில் வெள்ளம் நிறையப் பெய்
வயலில் வரம்பு உயரப் பெய்
மழையே மழையே மெத்தப் பெய்
மக்கள் மனங்கள் நிறையப் பெய்''

**சி. ஜெயசங்கர்**

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| அங்கையொரு | - | அங்கே ஒரு |
| திண்டு | - | உண்டு |
| பத்திரம் | - | கவனம் |
| போட்டுவாறன் | - | போய் வருகிறேன் |
| ஆக்கினை | - | கஷ்டம் |
| வெக்க | - | சூடு |
| கொத்தனார் | - | கட்டடம் கட்டுபவர் - இங்கு குளம் கட்டுபவர் |
| இஞ்ச | - | இங்கே |
| விசயம் | - | விடயம் |
| பேஞ்ச மழை | - | பெய்த மழை |
| மிலாந்தி | - | பராக்குப் பார்த்தல் |
| குதியன் குத்துதல் | - | அடக்கமின்றித் துள்ளிக் குதித்தல் |
| சீவன் | - | உயிர் |

## கிரகித்தல் பயிற்சி

1. பிள்ளைக்கு வைத்த பாலைக் குடித்துவிட்டு பிள்ளை அழுதபொழுது யாரிடம் போகப் போவதாக எலி கூறியது?
2. ஆடு பால் தருவதற்கு எலியிடம் என்ன கேட்டது?
3. எலி புல்லுக்கு யாரிடம் போவம் என்று கூறியது?
4. வயலம்மா புல்லுத் தருவதற்காக எதனை எலியிடம் கேட்டது?
5. எலி தண்ணீர் பெறுவதற்காக யாரிடம் சென்றது?
6. குளத்தாத்தா எலியிடம் குளக்கட்டைத் திருத்த யாரைக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்?
7. எலி குளத் தாத்தாவிடம் தண்ணீர் கேட்கும் பொழுது யார் யார் வந்தார்கள்?
8. கொத்தனார் குளக்கட்டைத் திருத்துவதற்கு என்ன பொருள் வேண்டுமென்று கேட்டார்?
9. எலியின் யோசனையைக் குழப்பும்படி சத்தமிட்டவர்யாவர்?
10. எலி கல்லினைப் பெறுவதற்காக யாரிடம் சென்றது?
11. மரங்களை எல்லாம் எத்தேவைகளுக்காக தறித்துக் கொண்டு போனார்கள் என்று மலை எலியிடம் கூறுகிறது?
12. மலை ''இனி ஒரு புல்லும் பூண்டும் கூட வளரேலாது'' என்று கூறிய போது எலி கூறிய பதில் யாது?
13. வயலுக்கு தண்ணீர் இறைத்தவுடன் எத்தனை பூக்கள் மொத்தமாக பூத்தன?
14. ஆடக்கா, எலியிடம் ஒரு குவளை கொண்டு வரச் சொன்னது எதற்காக?
15. இந்த நாடகத்தினூடாக வெளிப்படுத்தப்படும் செய்தி யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. இந்நாடகத்தை நடித்துக் காட்டுக.
2. சிறிய நாடகம் ஒன்றை எழுதுக.
3. இந்நாடகத்தில் இடம் பெற்ற பாடல்களை இராகத்தோடு பாடுக.

# இணைப்பிடைச் சொல்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வாக்கியங்களை இணைப்பதற்குப் பயன்படும் சொற்கள் இணைப்பிடைச் சொற்கள் எனப்படும். தமிழில் பல வகையான இணைப்பிடைச் சொற்கள் உள்ளன.

*(உ - ம்)*

அல்லது, இல்லையென்றால், ஆகவே, எனவே, என்றாலும், இருந்தபோதும், இல்லாவிட்டால், அத்துடன், எனினும்

ஏழாம் தரத்தில் ''ஆனால்'' எனும் இணைப்பிடைச் சொல் பற்றிக் கற்போம்.

★ **எனக்குப் பசிக்கிறது ஆனால் நான் சாப்பிட மாட்டேன்.**

இவ்வாக்கியத்தில் எனக்குப் பசிக்கிறது என்ற வாக்கியத்தையும் நான் சாப்பிட மாட்டேன் என்ற வாக்கியத்தையும் இணைப்பதற்கு 'ஆனால்' என்ற இணைப்பிடைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற இன்னும் சில வாக்கியங்களைக் கற்றுக்கொள்வோம்.

★ குமார் நன்றாகப் படித்தான் ஆனால் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறவில்லை.

★ நீங்கள் நன்றாகப் பாடினீர்கள் ஆனால் இன்னும் நன்றாகப் பாட முயற்சி செய்யுங்கள்.

★ கமலா நன்றாகப் பாடுவாள் ஆனால் நடனம் ஆட மாட்டாள்.

**பயிற்சி**

1. இணைப்பிடைச் சொல் என்றால் என்ன?
2. 'ஆனால்' எனும் இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி ஐந்து சிறிய வாக்கியங்களை அமைக்குக.

**செயற்பாடு**

முன்பு நீங்கள் படித்த பாடங்களில் வாக்கியங்களை இணைப்பதற்குப் பயன்படுத்திய இணைப்பிடைச் சொற்கள் பத்தைத் தொகுக்குக.

# 19 வெண்ணிலாவே!

சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை வெண்ணிலவைப் பொருளாகக் கொண்டு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. திரைப்படங்களிலும் அதிகளவு நிலாப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எம். ஆதம்லெவ்வை அவர்களின் ''முற்றத்து மல்லிகை'' என்னும் கவிதை நூலில் இடம் பெற்றது இப்பாடல். இவர் கிழக்கு மாகாணத்தில் பொத்துவில்லைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.



விண்ணில் மின்னும் மீன்களிடை
விளங்கும் நல்ல வெண்ணிலவே!
மண்ணில் மக்கள் மகிழ முழு
மதியாய் என்றும் வாராயோ?

நிலவே நீயும் நீள்வானில்
நிலவுவதால் நிலவென் றாரோ?
உலகோர் உவக்க ஒளிதந்து
உலவும் உனக்கேன் உருமாற்றம்?

வழியில் உன்னைக் கார்மேகம்
        வந்தே மறைப்பது, அநியாயம்!
எழில்மிகு தண்மதி உன்மீது
        எரிச்சல் ஏன்தான் கொண்டதுவோ?

நல்லது செய்யவேண்டுமென
        நாடிச் சேவை செய்வார்க்குத்
தொல்லை துன்பம் தடைஎல்லாம்
        தோன்றும்; அதற்கு நீ உவமை!

**எம். ஆதம்லெவ்வை.**
**'முற்றத்து மல்லிகை'**

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| மீன் | - | நட்சத்திரம் |
| மதி | - | சந்திரன் |
| உவக்க | - | சந்தோஷமடைய |
| கார்மேகம் | - | மழை மேகம்/ கறுப்பு மேகம் |
| எழில் மிகு | - | அழகுமிகுந்த |

**கிரகித்தல் பயிற்சி**

1. விண்ணில் எவற்றுக்கிடையில் வெண்ணிலவு விளங்குவதாகக் கூறப்படுகின்றது?
2. மண்ணில் மக்கள் மகிழ வெண்ணிலவு எவ்வாறு வர வேண்டும்?
3. நிலவென்று பெயர் வரக் கூறப்படுகின்ற காரணம் என்ன?
4. வெண்ணிலவை மறைப்பது எது?
5. தண்மதி என்பதன் கருத்து யாது?
6. நிலவு எதற்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது?

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

1. வெண்ணிலவு பற்றிப் பாடலொன்றை எழுதுக.
2. வெண்ணிலவுப் பாட்டை இராகத்தோடு பாடுக.
3. நிலவைப் பற்றிப் பாடிய புலவர்களின் பாடல் இரண்டைத் தேடித் தொகுத்து எழுதுக.

## கலைச்சொற்கள்

துறை சார்ந்த பயன்பாடுகளுக்காக புதிய சொற்கள் அவ்வப்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. அவை கலைச் சொற்கள் எனப்படும்.

இன்றைய உலகில் துரிதமாக ஏற்பட்டுவரும் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக நாம் எண்ணற்ற தொழிநுட்ப சாதனங்களை உபயோகப்படுத்துகின்றோம். அறிவியல், தொழிநுட்ப வளர்ச்சிகளோடு சார்ந்து பல தேசங்களின் கலாசார, பொருளாதார, அரசியல் விடயங்களையும் அறிந்து கொள்கிறோம். இவ்வாறான வேளைகளில் பல புதிய சொற்பிரயோகங்களைச் சந்திக்கிறோம். பெரும்பாலும் வேற்று மொழிகளில் அமைந்த இச்சொற் பிரயோகங்களுக்கான தமிழ்ச் சொற்களும் அவ்வப்போது தமிழிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய கலைச்சொற்களை நீங்கள் தெரிந்து பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பது உங்கள் மொழிவளத்தை விருத்தி செய்யும். உதாரணத்திற்காக சில கலைச்சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

Computer - கணினி
Compact Disk - இறுவட்டு
Data - தரவு
E-mail - மின்னஞ்சல்
Exchange - பரிமாற்றம்
Fax - தொலைநகல்
Format - வடிவமைப்பு
Information - தகவல்

Internet - இணையம்
Memory - நினைவகம்
Media - ஊடகம்
Multimedia - பல்லூடகம்
Network - வலையமைப்பு
Web Page - வலைப்பக்கம்
Data Base - தரவுத்தளம்
FM - பண்பலை
Museum - அருங்காட்சியகம்
Digital - எண்மானம்
Download - பதிவிறக்கம்
Key Board - விசைப்பலகை
Password - கடவுச் சொல்
Remote Controller - தொலைக் கட்டுப்படுத்தி

**செயற்பாடு**

1. நடைமுறையிலுள்ள பத்துக் கலைச்சொற்களை இனங்கண்டு எழுதுக.

2. கீழே தரப்படும் கலைச்சொற்களுக்கு நிகரான ஆங்கில மொழிச் சொற்களை எழுதுக.
   - ★ சுட்டி
   - ★ எழுத்துரு
   - ★ வன்தகடு
   - ★ உலாவி
   - ★ கோப்பு

3. ''கணினியும் அதன் பயன்பாடும்'' என்ற தலைப்பில் ஐம்பது சொற்கள் கொண்ட கட்டுரை எழுதி, அதில் பயன்படுத்தப்பட்ட கலைச் சொற்களை அட்டவணைப்படுத்துக.

# 20 ஒழுக்கம் உடைமை

## (ஒழுக்கத்தை உடைமையாகக் கொண்டிருத்தல்)

அறம் கூறும் நூல்களில் ஒன்று திருக்குறள். இது திருவள்ளுவரால் எழுதப்பட்டது. திருக்குறளில் மக்கள் எல்லோரும் கடைப்பிடிக்கக் கூடிய விழுமியக்கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதனாலேயே திருக்குறளை ''உலகப் பொதுமறை'' எனச் சிறப்பித்து கூறுகின்றார்கள். திருவள்ளுவருக்கு பொய்யாமொழிப்புலவர், தெய்வப்புலவர் போன்ற பெயர்களும் உண்டு.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பெரும் பகுதிகளைக் கொண்டிருக்கின்றது. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களைக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு பாவும் இரண்டு அடிகளாலானது.

''பால் எல்லாம் நல்லாவின் பாலாகுமா
நூல் எல்லாம் வள்ளுவர் செய் நூலாகுமா''

என்பதன் ஊடாக இதன் பெருமையை உணரலாம்.

அறத்துப்பாலிலுள்ள இல்லறவியல் என்ற பகுதியில் உள்ள ஒழுக்கம் உடைமை என்னும் அதிகாரத்தைக் கற்போம்.

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
   உயிரினும் ஓம்பப் படும்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான்** - ஒழுக்கம் எல்லோர்க்கும் சிறப்பினைத் தருவதால், **ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்** - அவ்வொழுக்கம் உயிரினும் சிறந்ததாகப் போற்றிக் காக்கப்படும்.

பொழிப்பு

ஒழுக்கம் எல்லோர்க்கும் சிறப்பினைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரினும் சிறந்ததாகப் போற்றிக் காக்கப்படும்.

2. பரிந்து ஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்து ஓம்பித்
தேரினும் அஃதே துணை

**ஒழுக்கம் ஓம்பி பரிந்து காக்க** - ஒழுக்கத்தினைப் போற்றி ஒன்றாலும் அழியாமல் வருந்திக் காக்க வேண்டும், **தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை** - நன்கு ஆராய்ந்து தெளிவு பெற்றாலும் அவ்வொழுக்கமே துணையாகும்.

பொழிப்பு

ஒழுக்கத்தினைப் போற்றி ஒன்றாலும் அழியாமல் வருந்திக் காக்க வேண்டும். இரு பிறவிகளுக்கும் துணை செய்யக் கூடியது என்னவென நன்கு ஆராய்ந்து தெளிவு பெற்றாலும் அவ்வொழுக்கமே துணையாகும்.

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

**ஒழுக்கம் உடைமை குடிமை** - ஒழுக்கம் உடையவராக இருத்தலே நற் குடிப்பிறப்பின் பண்பாகும், **இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்** - அவ்வொழுக்கத்திலிருந்து தவறுதல் ஒருவனைத் தாழ்ந்த குடிப் பிறப்பிற்கு உரியவனாய்த் தள்ளி விடும்.

பொழிப்பு

ஒழுக்கம் உடையவராக இருத்தலே நற்குடிப்பிறப்பின் பண்பாகும். அவ் வொழுக்கத்திலிருந்து தவறுதல் ஒருவனைத் தாழ்ந்த குடிப் பிறப்பிற்கு உரியவனாய்த் தள்ளி விடும்.

04. மறப்பினும் ஒத்துக் கொள்ளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்.

**மறப்பினும் ஒத்துக் கொள்ளலாகும்** - கற்ற வேதத்தினை மறந்து விட்டான் என்றாலும் திரும்பவும் கற்றுக் கொள்ளலாம், **பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்** - அந்தணன் தனக்குரிய ஒழுக்கத்தில் தவறினால் அவனது குடிப்பெருமை கெட்டுவிடும்.

பொழிப்பு

கற்ற வேதத்தினை மறந்து விட்டான் என்றாலும் திரும்பவும் கற்றுக் கொள்ளலாம். அந்தணன் தனக்குரிய ஒழுக்கத்தில் தவறினால் அவனது குடிப்பெருமை கெட்டுவிடும்.

*05. அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை
ஒழுக்கம் இலான் உயர்வு.*

**அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று** - பொறாமை உடையவனிடம் செல்வம் இல்லாதது போல, **ஒழுக்கம் இல்லான்கண் உயர்வு இல்லை** - ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இல்லை.

பொழிப்பு

பொறாமை உடையவனிடம் செல்வம் இல்லாதது போல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இல்லை.

*06. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து*

**இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து** - ஒழுக்கம் கெட்டுவிடுவதால் குற்றம் உண்டாவதை அறிந்து, **உரவோர் ஒழுக்கத்தின் ஒல்கார்** - மனவலிமை உடையோர் ஒழுக்கத்தில் இருந்து தவறமாட்டார்.

பொழிப்பு

ஒழுக்கம் கெட்டுவிடுவதால் குற்றம் உண்டாகும் என்பதை அறிந்து, மனவலிமை உடையோர் ஒழுக்கத்தில் இருந்து தவறமாட்டார்கள்.

*07. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி*

**ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்** - எல்லோரும் ஒழுக்கத்தால் பெருஞ் சிறப்பை அடைவர். **இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர்** - ஒழுக்கம் தவறுவதால் தாம் அடையக் கூடாத பெரும் பழியைப் பெறுவர்.

பொழிப்பு

எல்லோரும் ஒழுக்கத்தால் பெரும் சிறப்பை அடைவர். ஒழுக்கம் தவறுவதால் தாம் அடையக் கூடாத பெரும் பழியைப் பெறுவர்.

*08.* *நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் தீயொழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்.*

**நல்லொழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும்** - ஒருவனுக்கு நல்ல ஒழுக்கம் எல்லா நன்மைகளுக்கும் காரணமாகும். **தீய ஒழுக்கம் என்றும் இடும்பை தரும்** - தீய ஒழுக்கமானது என்றும் துன்பத்தையே கொடுக்கும்.

பொழிப்பு

ஒருவனுக்கு நல்ல ஒழுக்கம் எல்லா நன்மைகளுக்கும் காரணமாகும். தீய ஒழுக்கமானது என்றும் துன்பத்தையே கொடுக்கும்.

*09.* *ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய*
*வழுக்கியும் வாயால் சொலல்.*

**வழுக்கியும் தீய வாயால் சொலல்** - மறந்தேனும் கூட தீமை தருஞ் சொற்களை தமது வாயினால் சொல்லுதல் என்பது, **ஒழுக்கம் உடைய வர்க்கு ஒல்லா** - நல்ல ஒழுக்கம் உடையவர்க்கு முடியாத ஒன்றாகும்.

பொழிப்பு

மறந்தேனும் கூட தீமை தருஞ் சொற்களைத் தமது வாயினால் சொல்லுதல் என்பது நல்ல ஒழுக்கம் உடையவர்களுக்கு முடியாத ஒன்றாகும்.

*10.* *உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்.*

**உலகத்தோடு ஒட்டஒழுகல் கல்லார்** - உலகத்தோடு பொருந்தி வாழ்வதைக் கல்லாதவர்கள், **பல கற்றும் அறிவிலாதார்** - பல நூல்களை கற்றவராயினும் அறிவில்லாதவர்

பொழிப்பு

உலகத்தோடு பொருந்தி வாழும் முறையினை அறிந்துகொள்ளாதவர்கள் பல நூல்களை கற்றவராயினும் அறிவில்லாதவர் ஆவர்.

**கிரகித்தல் பயிற்சி**

1. ஒழுக்கத்தின் சிறப்பைக் கூறுக.
2. ஒழுக்கம் உள்ளதால் ஏற்படும் குணமும், ஒழுக்கம் இல்லாவிட்டால் ஏற்படும் குற்றத்தையும் எழுதுக.
3. சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கம் பற்றி எழுதுக.

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

1. ஒழுக்கம் உடைமை என்ற அதிகாரத்திலுள்ள பத்துத் திருக்குறள்களையும் மனனம் செய்து ஓதுக.
2. ஒழுக்கம் பற்றி கட்டுரை எழுதுக.

## புணர்ச்சி

பின்வருவனவற்றை அவதானியுங்கள்.

| | |
|---|---|
| நிலம் | பந்து |
| காற்று | பழம் |
| ஞாயிறு | இனிப்பு |
| சங்கு | இசை |
| மலர் | இன்பம் |

மேலே தரப்பட்டுள்ள சொற்களை பொருள் தரக்கூடிய பகுதிகளாகப் பிரித்து எழுத முடியாது.

**தொகுதி 1**

| | |
|---|---|
| மாம்பழம் | விண்மீன் |
| படவேலை | வாழைப்பழம் |
| மட்பாண்டம் | வகுப்பாசிரியர் |
| மாவிலை | கூலிவேலை |
| மரவேர் | மணல்வீடு |

இங்கு தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு சொற்கள் இணைந்து வந்துள்ளன. அவற்றைப் பிரித்து எழுத முடியும்.

(உ - ம்) மணல்வீடு = மணல் + வீடு

இவ்வாறு இரண்டு சொற்கள் ஒன்றாக சேர்ந்து வருவது புணர்ச்சி எனப்படும். சில சொற்கள் இவ்வாறு இல்லாமல் வேறு விதமாகப் புணர்கின்றன.

**தொகுதி 2**

| | |
|---|---|
| உண்டான் | உண் + ட் + ஆன் |
| வந்தான் | வா + (ந்)த் + த் + ஆன் |
| கற்றான் | கல் + ற் + ஆன் |
| ஓடினாள் | ஓடு + இன் + ஆள் |
| நடந்தனன் | நட + (ந்)த் + த் + அன் + அன் |

மேலே தரப்பட்டுள்ள சொற்களில் சொல்லின் உறுப்புக்கள் புணர்ந்து வந்துள்ளன.

இவ்வாறு ஒரு சொல்லின் உறுப்புக்கள் அல்லது சொற்கள் பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே புணர்ச்சி எனப்படும்.

இவ்வாறு இரண்டு சொற்கள் புணரும்பொழுது முதலில் நிற்கும் சொல் நிலைமொழி எனப்படும். நிலைமொழியைத் தொடர்ந்து வரும் சொல் வருமொழி எனப்படும்.

(உ - ம்) விண் + மீன் = விண்மீன்

விண் ↓ நிலைமொழி    மீன் ↓ வருமொழி

## புணர்ச்சி வகைகள்

சொல்லின் உறுப்புக்கள் அல்லது சொற்கள் பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று புணரும்பொழுது இயல்பாகப் புணர்வதும் உண்டு. விகாரப்பட்டு புணர்தலும் உண்டு. இயல்பாகப் புணரும் நிலையை இயல்புப் புணர்ச்சியென்றும் விகாரமடைந்து சேரும் நிலையை விகாரப் புணர்ச்சி என்றும் கூறுவர். புணர்ச்சி,

1. ***இயல்புப் புணர்ச்சி.***
2. ***விகாரப் புணர்ச்சி*** என இரண்டு வகைப்படும்.

### 1. இயல்புப் புணர்ச்சி

சொல்லின் உறுப்புக்களோ அல்லது சொற்களோ பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று சேரும்போது இயல்பாகச் சேர்ந்தால் இயல்புப் புணர்ச்சி எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம் | மண் | + வெட்டி | = மண்வெட்டி |
| | கண் | + காட்சி | = கண்காட்சி |
| | பொன் | + வண்டு | = பொன்வண்டு |
| | தமிழினி | + வந்தாள் | = தமிழினி வந்தாள் |

### 2. விகாரப் புணர்ச்சி

சொல்லின் உறுப்புக்களோ அல்லது சொற்களோ பொருள்தரும் வகையில் ஒன்றோடு ஒன்று சேரும்போது விகாரம் (மாற்றம்) அடைந்து சேர்ந்தால் விகாரப் புணர்ச்சி எனப்படும். அவ்வாறு விகாரமடைவது மூன்று வகைப்படும்.

அ. தோன்றல் விகாரம்
ஆ. திரிதல் விகாரம்
இ. கெடுதல் விகாரம்

### தோன்றல் விகாரம்

புணர்ச்சியின்போது புதிய எழுத்தொன்று தோன்றுதல் தோன்றல் விகாரம் எனப்படும்.

உ -ம் காலை + பொழுது = காலைப்பொழுது
மா + பழம் = மாம்பழம்

### திரிதல் விகாரம்

புணர்ச்சியின்போது ஓர் எழுத்து வேறோர் எழுத்தாக மாறுதல் திரிதல் விகாரம் எனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ - ம் | கல் | + கோயில் | = கற்கோயில் | (ல், ற் ஆக மாறிற்று) |
| | பொன் | + குடம் | = பொற்குடம் | (ன், ற் ஆக மாறிற்று) |
| | மண் | + பானை | = மட்பானை | (ண், ட் ஆக மாறிற்று) |

### கெடுதல் விகாரம்

புணர்ச்சியின்போது எழுத்துக்கள் கெடுமாயின் கெடுதல் விகாரம் எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ - ம் | மரம் + வேர் | = மரவேர் | (ம் கெட்டது) |
| | படம் + வேலை | = படவேலை | (ம் கெட்டது) |
| | குலம் + மணி | = குலமணி | (ம் கெட்டது) |
| | பணம் + வரவு | = பணவரவு | (ம் கெட்டது) |

## பயிற்சி

1. புணர்ச்சி என்றால் என்னவென்று வரைவிலக்கணப்படுத்துக.
2. புணர்ச்சியின் வகைகளைக் கூறுக.
3. இயல்புப் புணர்ச்சியை விளக்கி உதாரணம் தருக.
4. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.

## செயற்பாடு

முன்னர் கற்ற பாடத்திலிருந்து இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி ஆகியவற்றுக்குப் பொருத்தமான உதாரணங்களைத் தனித்தனியே பட்டியல்படுத்துக.

# 21 பாரதியார் பாடிய புதிய ஆத்திசூடி

ஆறாந் தரத்தில் புதிய ஆத்திசூடியில் இருந்து ஐம்பதைக் கற்றுக் கொண்டோம். ஏழாந் தரத்தில் மேலும் முப்பதைக் கற்போம். ஆறாந்தரத்தில் புதிய ஆத்திசூடி பற்றிக் கூறியவற்றை மீட்டுக் கொள்ளுங்கள்.

51. தொன்மைக்கு அஞ்சேல்
52. தோல்வியிற் கலங்கேல்
53. தவத்தினை நிதம் புரி
54. நன்று கருது
55. நாளெலாம் வினைசெய்
56. நினைப்பது முடியும்
57. நீதிநூல் பயில்
58. நுனியளவு செல்
59. நூலினைப் பகுத்துணர்
60. நெற்றி சுருக்கிடேல்
61. நேர்படப் பேசு
62. நையப் புடை
63. நொந்தது சாகும்
64. நோற்பது கைவிடேல்
65. பணத்தினைப் பெருக்கு
66. பாட்டினில் அன்புசெய்
67. பிணத்தினைப் போற்றேல்
68. பீழைக்கு இடங்கொடேல்
69. புதியன விரும்பு
70. பூமி இழந்திடேல்
71. பெரிதினும் பெரிதுகேள்
72. பேய்களுக்கு அஞ்சேல்
73. பொய்ம்மை இகழ்
74. போர்த்தொழில் பழகு
75. மந்திரம் வலிமை
76. மானம் போற்று
77. மிடிமையில் அழிந்திடேல்
78. மீளுமாறு உணர்ந்து கொள்
79. முனையிலே முகத்து நில்
80. மூப்பினுக்கு இடங்கொடேல்

### 51. தொன்மைக்கு அஞ்சேல்

தொன்மைக்கு - பழைய மூட நம்பிக்கைகளுக்கு
அஞ்சேல் - அஞ்சாதே.

### 52. தோல்வியிற் கலங்கேல்

தோல்வியில் - தோல்விகள், இழப்புகள் ஏற்படும் பொழுது
கலங்கேல் - மனக்கலக்கம் கொள்ளாதே.

### 53. தவத்தினை நிதம் புரி

தவத்தினை - நல்ல செயல்களை
நிதம்புரி - நாள் தோறும் செய்.



### 54. நன்று கருது

நன்று - நல்லனவற்றை
கருது - கருத்திற் கொள்க.

### 55. நாளெலாம் வினைசெய்

நாளெலாம் - நாளின் எல்லா நேரங்களிலும்
வினைசெய் - வேலை செய்.

### 56. நினைப்பது முடியும்

நினைப்பது - உறுதியான எண்ணம் இருக்குமானால்
முடியும் - அது வெற்றியாக முடியும்.

**57. நீதி நூல் பயில்**

நீதி நூல் - சரியான தர்மங்களைப் போதிக்கும் நூல்களைப்
பயில் - பலமுறை படி.

**58. நுனியளவு செல்**

நுனியளவு - எந்த விடயத்திலும் இறுதி எல்லை வரை
செல் - சென்று முயல்க.

**59. நூலினைப் பகுத்துணர்**

நூலினை - நூல்களில் உள்ள விடயங்களை
பகுத்துணர் - நல்லவை தீயவை எனப் பிரித்துப் பார்த்து உணர்ந்துகொள்க.

**60. நெற்றி சுருக்கிடேல்**

நெற்றி - சலிப்புணர்வினால் நெற்றியில்
சுருக்கிடேல் - சுருக்கம் விழச் செய்யாதே. (சலிப்படையாதே)

**61. நேர்படப் பேசு**

நேர்பட - நேர்மையாக, வெளிப்படையாக
பேசு - பேசுவாயாக.

**62. நையப்புடை**

நைய - தீயவற்றை முற்றாக அழியும்படி
புடை - வதை செய்.

**63. நொந்தது சாகும்**

நொந்தது - வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் வருந்துபவர்
சாகும் - அழிந்து போவார்.
(வேதனையைத் தாங்கும் மனவலிமையைக் கைவிடாதே)

**64. நோற்பது கைவிடேல்**

நோற்பது - கடைப்பிடிக்கும் கொள்கைகளை
கைவிடேல் - கைவிட்டுவிடாதே.

**65. பணத்தினைப் பெருக்கு**

பணத்தினை - வாழ்விற்கு ஆதாரமான பணத்தினை
பெருக்கு - அதிகமாக்கு.

**66. பாட்டினில் அன்பு செய்**

பாட்டினில் - பாடலை
அன்புசெய் - விரும்புவாயாக.

**67. பிணத்தினைப் போற்றேல்**

பிணத்தினை - பயன் இல்லாதவற்றை
போற்றேல் - பாதுகாக்காதே.

**68. பீழைக்கு இடங்கொடேல்**

பீழைக்கு - துன்பத்திற்கு
இடங்கொடேல் - உள்ளத்தில் இடங்கொடாதே.

**69. புதியன விரும்பு**

புதியன - எல்லாவற்றிலும் புதுமைகளில்
விரும்பு - ஈடுபாடுகொள்.

**70. பூமி இழந்திடேல்**

பூமி - நாட்டினை / நிலத்தினை
இழந்திடேல் - இழந்து விடாதே.

**71. பெரிதினும் பெரிதுகேள்**

பெரிதினும் பெரிது - மிகச் சிறந்தவைகளை
கேள் - விரும்புவாயாக.

**72. பேய்களுக்கு அஞ்சேல்**

பேய்களுக்கு - பேய், பிசாசு என்றெல்லாம் சொல்லப்படுகிறவற்றிற்கு
அஞ்சேல் - அச்சப் படாதே.

**73. பொய்ம்மை இகழ்**

பொய்ம்மை - பொய்யுரைகளை /வெறுங் கனவுகளை
இகழ் - வெறுத்துவிடு.

**74. போர்த்தொழில் பழகு**

போர்த்தொழில் - எதிரிகளை முறியடிக்கின்ற வித்தைகளை
பழகு - அறிந்து, பழகி வைத்திரு.

**75. மந்திரம் வலிமை**

மந்திரம் - எதையும் சாதிக்கும் மந்திரம்
வலிமை - உடல், மன வலிமைகளே.

**76. மானம் போற்று**

மானம் - தன்மானத்தை
போற்று - போற்றி நட.

**77. மிடிமையில் அழிந்திடேல்**

மிடிமையில் - வறுமையில் / சோம்பலில்
அழிந்திடேல் - அழிந்து போகாதே.

**78. மீளுமாறு உணர்ந்து கொள்**

மீளுமாறு - தீயவற்றிலிருந்து விடுபடும் வழியை
உணர்ந்து கொள் - உணர்ந்துகொள்வாயாக.

**79. முனையிலே முகத்து நில்**

முனையிலே - எந்த இடத்திலும்
முகத்து நில் - முன்னின்று செயற்படு.

**80. மூப்பினுக்கு இடங் கொடேல்**

மூப்பினுக்கு - முதுமைக்கு
இடங்கொடேல் - இடங் கொடுத்துவிடாதே.
(உடலையும் மனதையும் இளமையாக வைத்துக் கொள்)

**பயிற்சி**

1. *பின்வருவனவற்றின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?*
    *அ. நுனியளவு செல்*
    *ஆ. தோல்வியிற் கலங்கேல்*

*பின்வருவனவற்றை விளக்கி ஒவ்வொரு பந்தி எழுதுக.*
*அ. நீதி நூல் பயில்*
*ஆ. பெரிதினும் பெரிதுகேள்*
*இ. பொய்மை இகழ்*

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

1. *புதிய ஆத்திசூடி அடிகளை மனனம் செய்க.*
2. *தினமும் காலையில் வகுப்பறையில் புதிய ஆத்திசூடியை உரத்துச் சொல்லுக.*

**செயற்பாடு**

*ஔவையாரின் ஆத்திசூடியையும் பாரதியாரின் ஆத்திசூடியையும் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.*

கல்வி அமைச்சு

சுரக்ஷா

தேசத்தின் பிள்ளைகளை என்றும் காப்போம்

# அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இலவசமாகக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர்

**සැම පාසල් දරුවකු ම නොමිලේ රක්ෂණය කොට අවසන්**

- **வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது வருடத்திற்கு 200,000 ரூபாய் காப்புறுதி**
  රෝහල්ගත වීමක දී වසරකට රු.200,000
- **மாணவர்களுக்கு 100,000 ரூபாய் பெறுமதியான திடீர் விபத்துக்குக் காப்புறுதி**
  ශිෂ්‍යයාට රු.100,000 ක් වටිනා හදිසි අනතුරු රක්ෂණයක්
- **திடீர் விபத்தினால் ஏற்படும் பெற்றோரின் மரணத்திற்கு 75,000 ரூபாய் காப்புறுதி**
  හදිසි අනතුරකින් සිදුවන මාපිය අභාවයක දී රු.75,000
- **பாரதூரமான நோய்களின் வெளிநோயாளர் சிகிச்சைக்கு 10,000 ரூபாய் காப்புறுதி**
  අසාධ්‍ය රෝග සඳහා රු.10,000 ක බාහිර රෝග ප්‍රතිකාර ආවරණයක්

**போன்ற நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.**

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை அறிந்துகொள்ள அழையுங்கள்

වැඩි විස්තර සහ කොන්දේසි සඳහා අමතන්න

0113 641555 **கல்வி அமைச்சு** අධ්‍යාපන අමාත්‍යාංශය



**இது 2017/2018 சுரக்ஷா காப்புறுதித் திட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது.**

**நடைமுறை மாற்றங்களுக்கு ஏற்ப காப்புறுதி நன்மைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.**

ඉහත ප්‍රතිලාභ 2017/2018 සුරක්ෂා රක්ෂණාවරණයට අදාළ වන අතර කාලීන ව ප්‍රතිලාභ වෙනස් විය හැකි ය.